வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu வீர மலர் ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 19.09.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 288 | பக்கங்கள் : 20









03
'ஆக்கஸ்' ஒப்பந்தத்தையடுத்து சீனாவின் அதிரடி நகர்வுகள்



08
அரசுக்கு தலையிடி கொடுக்கும் அரசியல்வாதி களல்லாத இருவர்!



09
தடம் மாறும் ஈழ தமிழர் விவகாரம்!



13
ஆரம்பித்த இடத்திலேயே முடிவும்?

# கொரோனா மரணங்கள் சடுதியாக குறைவடைவு

## நேற்றுமுன்தினம் 84 பேர் உயிரிழப்பு

### 51 நாள்களின் பின் நேற்று 2 ஆயிரத்துக்கும் குறைவான தொற்றாளர்கள் அடையாளம்

கொழும்பு, செப்ரெம்பர் 19

கொரோனா வைரஸ் தொற்றால் நாட்டில் மேலும் 84 பேர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர். 51 ஆண்களும், 33 பெண்களுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். 19

## ஊரடங்கு உத்தரவை மீறி திருவிழாவில் பங்குகொண்ட 11 பேருக்கு கொரோனா!

வவுனியா, செப். 19

வவுனியா ஓமந்தைப் பகுதியில் இடம்பெற்ற ஆலயத் திருவிழாவில் கலந்துகொண்ட பலருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து பலர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

குறித்த ஆலயத்தில் திருவிழா இடம்பெற்றுவருவதுடன் அதிகமானோர் கலந்துகொண்டுள்ளனர் என சுகாதார தரப்பினருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டி 19

## வவுனியா முதியோர் இல்லத்தில் 50 பேருக்கு கொரோனா தொற்று

### மூன்று பேர் உயிரிழப்பு

வவுனியா, செப். 19

வவுனியாவில் உள்ள முதியோர் காப்பகம் ஒன்றில் 50 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், அந்த காப்பகத்தில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மூவர் மரணமடைந்துள்ளனர் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியா, பம்பைமடுப் பகுதியில் உள்ள முதியோர் இல்லத்தைச் சேர்ந்த இருவர் கடந்த சில நாள் 19

## மதுபானச்சாலைகள் திறக்கப்பட்டதை ஊடகங்கள் மூலம் அறிந்த அமைச்சர்!

கொழும்பு, செப். 19

மதுபானச்சாலைகள் நேற்றுமுன் தினம் திறக்கப்பட்டதை ஊடகங்கள் மூலமே தான் அறிந்துகொண்டார் என்றும், இது குறித்து முழு அளவிலான விசாரணையை முன்னெடுக்க வேண்டும் எனவும் சுற்றாடல் அமைச்சரான மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மதுபானச்சாலைகள் திறக்கப்பட்ட விடயம் 19

## மதுபானச்சாலைகள் திறப்பு; சுகாதார அமைச்சு அதிருப்தி!

கொழும்பு, செப். 19

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் இருக்கும் நேரத்தில் மதுபானச்சாலைகளை மீண்டும் திறக்க அனுமதி வழங்குவது கொரோனா வேகமாகப் பரவ வழிவகுக்கும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 19

## ஐ.நா. கூட்டத்தொடரில் பங்கேற்க அமெரிக்கா சென்றார் ஜனாதிபதி

கொழும்பு, செப். 19

ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 76ஆவது பொதுச் சபைக் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக, ஜனாதிபதி கோட்டாபய 19

## பிரபல தபேலாக் கலைஞர் சதா வேல்மாறன் மறைவு!



யாழ்ப்பாணம், செப். 19

ஈழத்தின் மூத்த பிரபல்யமான தபேலா வாத்தியக் கலைஞர் சதா வேல்மாறன் நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார் என்று குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனா அறிகுறிகள் தென்பட்ட நிலையில் அவர் 19

## அநுராதபுரம் தமிழ் அரசியல் கைதிகளை சொந்த பிரதேசங்களுக்கு மாற்றுங்கள்!

### நேரில் சென்று பார்வையிட்ட மனோ கோரிக்கை

கொழும்பு, செப் 19

"அநுராதபுரம் சிறையில் உள்ள அரசியல் கைதிகளை விடுவித்து தமிழ் மக்களின் மனங்களை வெல்லுங்கள் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, ஆகியோருக்கு சொல்ல விரும்புகிறேன். கைதிகள் காப்பற்றப்பட வேண்டும். விடுவிக்கப்பட வேண்டும். அங்குள்ள கைதிகள் முதலில் தமது பிரதேசங்களிற்கு மாற்றப்பட வேண்டும். அரசியல் 19



## ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை; 2022 ஏப்ரலில் இறுதி தீர்மானம்

கொழும்பு, செப். 19

இலங்கைக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை தொடரக்கூடாதென் பதை வலியுறுத்தி ஐரோப்பிய பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறப்புக் குழு கொழும்பு வருகின்றது. 19






உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# ஸ்டாலின் - சுமந்திரன்: ஒரு சந்திப்பு!

மறவன்புலவு க. சச்சிதானந்தன்





**சுமந்திரன்:** திராவிட முன்னேற்ற கழகம் வெற்றிபெற்று ஆட்சியமைத்ததில், ஈழத் தமிழர்கள் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள்.

**முதலமைச்சர்:** நன்றி.

**சுமந்திரன்:** தமிழகத்தின் வளர்ச்சியைக் கண்டு பிரமித்துப்போய் இருக்கிறோம் உங்கள் தலைமையில் தமிழகம் மேலும் வளர்ச்சி காணவேண்டும். அதற்காகவே திராவிட முன்னேற்ற கழகத்தைத் தமிழகத்தார் தேர்ந்து சட்டசபைக்கும் பாராளுமன்றத்துக்கும் பெரும்பான்மையாக அனுப்பியிருக்கிறார்கள்.

**முதலமைச்சர்:** ஈழத் தமிழர்கள்மீது நாங்கள் அக்கறையுடன் இருக்கிறோம். நீங்கள் எங்களின் தொப்புள் கொடி உறவுகள்.

**சுமந்திரன்:** உங்கள் தந்தையார் கலைஞரும், அவரைத் தொடர்ந்து நீங்களும் எமக்கு காட்டிவரும் ஆதரவுக்கு நன்றி, தமிழக அரசும் திராவிட முன்னேற்றக் கழகமும் ஈழத் தமிழர்களுக்கு உதவ வேண்டும்.

**முதலமைச்சர்:** 1956 சிதம்பரம் மகாநாட்டிலும், பின்பு தூத்துக்குடியில் நடந்த மாநாட்டிலும் அறிஞர் அண்ணா தலைமையில் திராவிட முன்னேற்ற கழகம் ஈழத்தமிழருக்கு ஆதரவாகத் தீர்மானங்களை இயற்றியது. அத் தீர்மானங்களை என் தந்தையார் கலைஞரே முன்மொழிந்தார். தொடர்ச்சியாக, நாங்கள் ஈழத் தமிழர்மீதும் அவர்களது அரசியல் எதிர்காலம்மீதும் அக்கறையுடன் இருக்கிறோம். இப்பொழுது நாங்கள் உங்களுக்கு என்ன செய்யவேண்டும்?

**சுமந்திரன்:** இலங்கையில் தமிழர்கள் தமது அரசியல் எதிர்காலத்தை இலங்கை அரசுடன் பேசித் தீர்க்க விரும்புகிறார்கள். அந்தப் பேச்சுவார்த்தையில் இந்தியாவும் அனைத்து உலகமும் தங்களுக்கு ஆதரவாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். நாங்கள் இலங்கை அரசுடன் பேசிக்கொண்டிருக்கிறோம். கொழும்பில் பிறந்தேன் என்பதால் எனக்கு சிங்கள அரசியல் தலைவர்களின் மனோநிலை தெரியும். இலங்கையின் தமிழர் மரபுவழித் தாயகத்தில் வாழ்கின்றவர்கள் உணர்ச்சி வசப்படுபவர்கள், எதையும் எதிர்க்கிறார்கள். ரணில் விக்கிரமசிங்க என்றாலும் சரி, ராஜபக்ஷக்கள் என்றாலும் சரி, நல்லவர்கள். அவர்கள் தமிழர்களுக்கு தீங்கு விளைவிக்க மாட்டார்கள். எனவே, அவர்களோடு பேசிக்கொண்டிருக்கிறோம்.

**முதலமைச்சர்:** மிக்க மகிழ்ச்சி. நல்ல வழியில் செல்கிறீர்கள். மேலும் உயிர் இழப்புகளைத் தவிர்க்கும் நோக்கத்தில் நீங்கள் பேச்சுவார்த்தைமூலம் பிரச்னைகளைத் தீர்ப்பதையே நாங்கள் விரும்புகிறோம். உங்களுக்கு எல்லாவிதமான ஆதரவையும் தமிழகமும், தமிழகம் வழியாக இந்தியாவும் அளிக்கும்.

**சுமந்திரன்:** ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்கி உள்ளோம். தமிழக அரசியல்வாதிகள் சிலர் 'வட்டுக்கோட்டை 2' என்ற தலைப்பில் உணர்ச்சிவசப்பட்டு, இலங்கையில் தமிழருக்கு தனியான நாடு வேண்டும் என்ற கண்ணோட்டத்தை வலியுறுத்தி இருக்கிறார்கள். இதனால் எங்கள் பேச்சுவார்த்தை குழம்பிப் போயிருக்கிறது. நீங்கள் தலையிட்டு, தமிழகத்தில் உள்ளவர்கள் இவ்வாறு செய்யாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இலங்கையின் மரபுவழித் தாயகத்திலுள்ள அரசியல் தலைவர்கள் உணர்ச்சிவசப்பட்டு நாட்டைப் பிரிக்கவேண்டும் என்பார்கள். நான் அவர்களை எதிர்த்து வருகிறேன். இதனால், சிங்கள அரசியல் தலைவர்களுக்கு என்மீது நம்பிக்கை உண்டு.

**முதலமைச்சர்:** தமிழகத்தில் நாங்கள் உங்களுக்கு என்ன செய்யவேண்டும்? சட்டசபையில் தீர்மானம் இயற்றவா? ஒன்றிய அரசுக்குக் கடிதம் எழுதவா? பிரதமர் மோடியைச் சந்திக்க ஏற்பாடு செய்யவா? தமிழகத்தில் அனைத்துக் கட்சிகளைக் கூட்டிப் பேசவா? சொல்லுங்கள், என் கட்சிக்காரர்களுடன் பேசுகிறேன்.

**சுமந்திரன்:** இலங்கை அரசுக்கு எதிராக நீங்கள் எதையும் செய்துவிடவேண்டாம் என உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இலங்கை அரசோடு நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தி வெற்றி காண்போம். ரணில் விக்ரமசிங்கவுக்கு ஐந்து ஆண்டுகள் ஆதரவு கொடுத்தோம். அவர் எங்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. ஆனாலும், அவருடைய ஆட்சி நல்லாட்சி. அதைப் போலவே, ராஜபக்ஷக்களினுடைய ஆட்சியும் நல்லாட்சியே. அவர்கள் ஈழத்தமிழர்களின் அரசியல் எதிர்காலத்துக்காக எதையும் செய்யாவிட்டாலும், அவர்களுக்கு நாங்கள் ஆதரவு கொடுத்து, நல்லாட்சி அமைக்க இருக்கிறோம். எனவே, தமிழக அரசும் திராவிட முன்னேற்றக் கழகமும் ஈழத் தமிழர்கள் தொடர்பாக தீவிரமாகச் செயற்பட வேண்டாம். டில்லி அரசிடமும் கட்சிகளிடமும் நாம் இவ்வாறே கோரியுள்ளோம்.

**முதலமைச்சர்:** அப்படியா! உங்களுடைய இந்தவேண்டுகோள் ஈழத் தமிழர் சார்பில் இருப்பதை எனது கட்சிக்காரர்களின் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன். ராஜபஷக்களுடன் நீங்கள் உங்களுடைய அரசியல் எதிர்காலத்தைப் பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள்.

**சுமந்திரன்:** இதையே நான் உங்களிடம் எதிர்பார்த்தேன். என்னுடைய தலைவர் சம்பந்தனிடம் நீங்கள் சொன்ன செய்திகளை அப்படியே சொல்கிறேன்.

(இவை, யாவும் கற்பனை)

## கொரோனா தொற்றிலிருந்து மேலும் 1,260 பேர் குணமடைவு

கொழும்பு, செப். 19

நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 1,260 பேர் குணமடைந்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் இது வரை 4 இலட்சத்து 31 ஆயிரத்து 36 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துடைந்துள்ளனர். (இ)

CHANNEL-1

**19.09.2021**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

CHANNEL - 2

**19.09.2021**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
19.09.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 03

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# ஐ. நா. விசேட அறிக்கையாளரின் எச்சரிக்கை!

மனித உரிமைகள் 48 கூட்டத் தொடர் இடம்பெற்றுவருகின்றது. பேரவையின் ஆணையாளரின் வாய்மொழிமூல அறிக்கை வெளிவந்திருக்கும் நிலையில், உண்மை, நீதி, இழப்பீடு வழங்குதல் மற்றும் மீள நிகழாமை தொடர்பான ஐ. நா. வின் விசேட அறிக்கையாளர் பெபியன் சவ்வியோலி இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் மிக மோசமான சரிவை சந்தித்திருப்பதாக தனதுரையில் சுட்டிக்காட்டியிருக்கின்றார். இலங்கையின் தற்போதைய நிலைமையானது, நிலைமாறுகால நீதிப் பொறிமுறையில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார். கடந்த 18 மாதகாலமாக இலங்கையில் இடம்பெற்ற நிலைமைகளை ஆராய்ந்ததன் அடிப்படையிலேயே அவர் இதனை குறிப்பிட்டிருக்கின்றார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரையாற்றவுள்ள நிலையிலேயே, மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விமர்சனங்களை எதிர்கொண்டிருக்கின்றது. ஜெனிவாவுக்கான இலங்கையின் பிரதிநிதிகள் குழு, மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கான உறுதிப்பாட்டை அரசாங்கம் கொண்டிருப்பதாகவும் ஆனால், 46/1 தீர்மானத்தின்கீழ், பரிந்துரைக்கப்படும் வெளியக பொறிமுறைகளை இலங்கை அரசாங்கம் நிராகரிப்பதாகவும் குறித்த குழுவினர் ஜெனிவாவில் வலியுறுத்தியிருக்கின்றனர்.

அரசாங்கம் பொரும்பாண்மை சிங்கள மக்களின் ஆதரவுடன் இருக்கும் உள்ளூர் அரசியல் யதார்த்தத்தின் ஊடாகவே சர்வதேச சமூகத்தை எதிர்கொள்ள முற்படுகின்றது. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருக்கின்றபோதும், இவ்வாறானதோர் அணுகுமுறையையே பின்பற்றியிருந்தது. அரசாங்கத்தில் இருப்பவர்களும் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச அழுத்தங்களை குறிப்பாக, மனித உரிமைகள் பேரவையின் அழுத்தங்களை முதன்மையான ஒன்றாக கருதுவதாக தெரியவில்லை. ஐ. நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், சிறைச்சாலைகள் விவகார அமைச்சர், அநுராதபுர சிறைச்சாலை தமிழ் கைதிகளின் தலையில் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தியிருக்கின்றார். இது, தற்செயலாக இடம்பெற்றதா அல்லது நாங்கள் எந்தவொரு வெளித் தரப்பிற்கும் அஞ்சமாட்டோம் என்பதை உணர்த்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டதா? ஏனெனில், கூட்டத் தொடர் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போதே இவ்வாறு நடந்து கொள்பவர்கள், சாதாரண காலத்தில் எவ்வாறு நடந்து கொள்வார்கள்?

ஐ. நா மனித உரிமைகள் பேரவையின் அழுத்தங்கள் ஏதோவொரு வகையில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கப்போகின்றது. ஆனால், அதற்கு சில வரையறைகள் உண்டு என்பதை தமிழர் தரப்புக்கள் புரிந்து கொள்ளவேண்டும். சர்வதேச கடப்பாட்டை தமிழர் தரப்பு தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கவேண்டும். களமும் புலமும் ஒருங்கிணைந்து தொடர்ச்சியாக குரல் கொடுக்கவேண்டும். அதேவேளை, தெற்கிலுள்ள மனித உரிமைச் சமூகங்களுடனும் தொடர்புகளை பேணவேண்டும். ஐக்கிய நாடுகள் சபை கைவிட்டுவிட்டது என்று பொது வெளிகளில் விவாதங்களை செய்துகொண்டிருப்பதால் பயனில்லை. ஐ. நா மனித உரிமைகள் பேரவையின் அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி, தமிழரின் நியாயங்களை எவ்வாறு முன்வைப்பது என்பது தொடர்பில் சிந்திக்கவேண்டும். உள்ளூர் அரசியலையும் சர்வதேச சமூக தலையீடுகளையும் பிரித்து நோக்கவேண்டும் ஜெனிவாவை முன்வைத்து கட்சிச் சண்டைகளில் நேரத்தை விரயம் செய்வதால் எந்தவொரு பயனும் ஏற்படப்போவதில்லை. சர்வதேச சமூகம் மேலும் அதிருப்திடையவே அது வழிவகுக்கும்.



# ‘ஆக்கஸ்’ ஒப்பந்தத்தையடுத்து சீனாவின் அதிரடி நகர்வுகள்

*முக்கியமான ஆசியா பசிபிக் வணிக உடன்படிக்கையில் சேர விண்ணப்பித்துள்ளது சீனா. அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஆஸ்திரேலியா இடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ‘ஆக்கஸ்’ ஒப்பந்தம் குறித்த தகவல் வெளியான மறு நாள் இந்த விண்ணப்பத்தை செய்துள்ளது சீனா.*

Comprehensive and Progressive Agreement for Trans-Pacific Partnership (CPTPP) *என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் “பசிபிக் அளாவிய விரிவான, முற்போக்கான கூட்டாண்மை ஒப்பந்தம்“ அமெரிக்காவால் சீனாவின் செல்வாக்கை மட்டுப்படுத்தும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்டது.*

*ஆனால் இந்த ஒப்பந்தத்தில் இருந்து 2017ல் வெளியேறியது அமெரிக்கா. அப்போதைய அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் இதற்கான முடிவை எடுத்தார்.*

*இந்த தாராள வணிக ஒப்பந்தத்தில் சேர்வதற்கு உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரம் விண்ணப்பித்துள்ளது என்று சீன வணிகத்துறை அமைச்சர் வாங் வென்டாவ் தெரிவித்தார். இதற்கான கடிதம் நியூசிலாந்து வணிக அமைச்சர் டேமியன் ஓ கொன்னோருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*இந்த ஒப்பந்தத்துக்கான நிர்வாக மையமாக நியூசிலாந்து செயல்படுகிறது. விண்ணப்பம் அனுப்பப்பட்டதை அடுத்து அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி விவாதிப்பதற்காக சீன அமைச்சர் வாங் - ஓ கொன்னோர் இருவரும் தொலைபேசி வழியில் உரையாடினர் என்று சீன வணிக அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*முதல் முதலில் ‘பசிபிக் அளாவிய கூட்டாண்மை’ என்ற பெயரில் இந்த ஒப்பந்தம் அப்போதைய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவினால் முன்னெடுக்கப்பட்டது. ஆசியா பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கை மட்டுப்படுத்தும் நோக்கோடு இந்த ஒப்பந்தம் முன்னெடுக்கப்பட்டது.*

*அமெரிக்கா இதில் இருந்து வெளியேறுவது என்று டிரம்ப் நிர்வாகம் முடிவு செய்த பிறகு, ஜப்பான் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தி, இதன் பெயர் விரிவான, முற்போக்கான பசிபிக் அளாவிய கூட்டாண்மை ஒப்பந்தம் என்று மாற்றப்பட்டது. 2018ல் இந்த ஒப்பந்தத்தில் ஆஸ்திரேலியா, கனடா, சிலி, ஜப்பான், நியூசிலாந்து உள்பட 11 நாடுகள் கையெழுத்திட்டிருந்தன.*

**வட்டார வணிக ஒப்பந்தம்**

*இந்த* CPTPP *ஒப்பந்தத்தில் சேர்வதற்கு கடந்த ஜூன் மாதம் முறைப்படி பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியது பிரிட்டன். தாய்லாந்து தங்களுக்கும் ஆர்வம் இருப்பதாக சமிக்ஞை தந்தது.*

*14 நாடுகள் இடம்பெற்றுள்ள* Regional Comprehensive Economic Partnership (RCEP) *என்று ஆங்கிலத்தில் அறியப்படும் வட்டார அளவிலான விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தத்தில் கடந்த நவம்பர் மாதம் சேர்ந்த சீனாவுக்கு, இப்போது சி.பி.டி.பி.பி. ஒப்பந்தத்தில் சேர்வது மிகப் பெரிய ஆதாயமாக இருக்கும்.*


*ஆர்.சி.இ.பி. ஒப்பந்தம் உலகின் மிகப்பெரிய பொருளாதாரக் கூட்டணி. இதில் தென் கொரியா, சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து உள்ளிட்ட நாடுகள் இடம் பெற்றுள்ளன.*

*அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஆஸ்திரேலியா இடையிலான ஆக்கஸ் ஒப்பந்தம் குறித்த தகவல் வெளியான அடுத்த நாள் சீனா சி.பி.டி.பி.பி. ஒப்பந்தத்தில் சேர்வதற்கு விண்ணப்பித்துள்ளது.*

*ஆஸ்திரேலியா அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலை கட்டுவதற்கு அமெரிக்காவும், பிரிட்டனும் தொழில்நுட்பத்தை பகிர்ந்து கொள்ள ஆக்கஸ் ஒப்பந்தம் வழிவகை செய்கிறது. அது மட்டுமில்லாமல், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் தொடர்பான ஷரத்துகளும் இந்த ஆக்கஸ் ஒப்பந்தத்தில் வருகின்றன. பல பதிற்றாண்டுகளில் ஆஸ்திரேலியா எட்டிய மிகப்பெரிய பாதுகாப்புத்துறை ஒப்பந்தம் இது என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.*

*ஆக்கஸ் ஒப்பந்தம் பொறுப்பற்றது, குறுகிய மனப்பான்மை கொண்டது என்று சீனா விமர்சித்துள்ளது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# வெளிநாட்டவர்களது குழந்தைகளுக்கு பிரெஞ்சு பெயரிடல் கட்டாயமாகுமா?

## எரிக் செமூரின் கருத்தால் சர்ச்சை

குமாரதாஸன்




பிரான்ஸ் நாடு தொற்று நோயிலிருந்து மெல்ல விடுபட தேர்தல்க்களம் நோக்கிக் கவனம் திரும்புகிறது. கொரோனா, பருவ நிலை மாற்றம் போன்ற விவகாரங்களை மீறிக் குடியேறிகள் தொடர்பான வாதங்கள் மீண்டும் தலையெடுக்கின்றன.

மக்கள் மத்தியில் தீவிர தேசியவாதக் கருத்துகளைப் பரப்பிவருகின்ற பிரபல ஊடகவியலாளர் எரிக் செமூர், வெளிநாட்டுக் குடியேறிகள் தொடர்பில் இறுதியாக வெளியிட்டிருக்கும் கருத்து பெரும் சர்ச்சைகளைக் கிளப்பியிருக்கிறது.

வெளி நாட்டவர்கள்-குறிப்பாக முஸ்லிம்கள்- அவர்களது குழந்தைகளுக்கு முதற் பெயராக (prénoms) பிரெஞ்சுப் பெயர்களைச் சூட்டவேண்டும். நாட்டின் அதிபராகும் பட்சத்தில் வெளிநாட்டுப் பெயர்களைத் தடைசெய்வேன்-என்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வாயிலாக செமூர் தெரிவித்த கருத்துகள் தலைப்புச் செய்திகளாக மாறியுள்ளன.

குழந்தைகளுக்கு “முஹம்மது” போன்ற முஸ்லிம் பெயர்களைச் சூட்டக் கூடாது என்று முதலில் கூறிய அவர் பின்னர் பொதுவாக வெளிநாட்டவர்கள் எவருமே அவ்வாறு தங்கள் நாட்டுப் பெயர்களை இடக் கூடாது என்று குறிப்பிட்டார். முஹம்மது என்பது பிரிவினையை - வேறுபாடுகளை-குறிக்கின்ற பெயர் - என்றும் அவர் சொல்கிறார்.

வெளிநாட்டுப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு விரும்பிய பெயர்களைச் சூட்டும் சுதந்திரத்தைத் தடுக்கின்ற அவரது இந்தக் கருத்துக்கள் பலத்த சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளன.

எரிக் செமூர் கடைசியாக எழுதிய “பிரான்ஸ் சொல்லாத அதன் இறுதி வார்த்தை” (La France n'a pas dit son dernier mot) என்னும் நூல் இந்த வாரம் வெளியாகவுள்ளது.இணையத்தில் பரபரப்பான விற்பனைக்குத் தயாராகிவருகின்ற அந்த நூலில் குடியேறிகள் தொடர்பான இது போன்ற மேலும் பல சர்ச்சைக்குரிய விடயங்கள் இடம் பெற்றுள்ளன என்ற தகவலை ஊடகங்கள் வெளியிட்டிருக்கின்றன.

பிரான்ஸில் மக்கள் மத்தியில் பிரபலம் பெற்ற ஓர் தீவிர வலதுசாரி எரிக் செமூர். அவரது கருத்துக்களோடு உடன்படாதவர்களும் அவரது தேசியவாதக் கருத்துக்களை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஊடாக விரும்பிக் கேட்கின்றனர். அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் போட்டியிட விருப்பம் கொண்டுள்ளதாக அவர் கூறிவருகிறார். அவரது திடீர் அரசியல் பிரவேச முஸ்தீபுகள் மற்றொரு தீவிர வலதுசாரியாக அறியப்படுகின்ற மரீன் லூ பென் அணியினரைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

### சட்டம் என்ன சொல்கிறது?

உங்கள் குழந்தைக்கு ஒரு பெயரைத் தெரிவு செய்யும் போது உங்கள் விருப்பம் போல் தீர்மானிக்க முடியுமா? பிரான்ஸின் சட்டங்கள் என்ன சொல்கின்றன? 1993 வரையான பிரான்ஸின் சட்டங்கள் குழந்தைக்குப் பெற்றோர் தாம் விரும்பிய பெயர்களைத் தெரிவு செய்வதை மட்டுப் படுத்திவந்தன. 1803 ஆம் ஆண்டின் சட்டம் என்று வரலாற்றாய்வாளர்கள் கூறும் சட்டங்கள் பண்டைய பஞ்சாங்கங்கள் - கலண்டர்கள் - குறிப்பிடுகின்ற பெயர்களையே அங்கீகரித்தன.அந்த நடைமுறை பின்னர் 1966 இல் தளர்த்தப்பட்டது. ஆனால் இப்போதும் கலண்டர்கள் கூறும் மாதங்களின் பெயர்களை அந்த மாதத்தில் பிறக்கின்ற குழந்தைகளுக்குச் சூட்டும் வழக்கம் இருக்கிறது.

1993 இல் இந்தச் சட்டம் முற்றாக ஒழிக்கப்பட்டது. பெயர் சூட்டும் முழு சுதந்திரம் தற்போது பெற்றோரிடம் விடப்பட்டுள்ளது எனினும் "La ligue des officiers d'État civil" என்னும் அரச நிர்வாகக் குழு குழந்தைகளுக்குச் சூட்டக் கூடிய நல்ல பெயர்களைப் பட்டியலிட்டு வெளியிடுகிறது. பெயரிடலில் சட்டம் முழு சுதந்திரத்தை வழங்கினாலும் சில விதிவிலக்குகள் இருக்கின்றன. ஒரு பெயர் “குழந்தையினது நலனுக்கு முரணானது” என்று கருதும் பட்சத்தில் சிவில் பதிவாளரால் அந்தப் பெயரை மாற்ற முடியாதவிடத்து அவர் அதனைக் குடும்ப நீதிமன்றத்துக்கு அறிவிக்கலாம்.

கடைசியாக நடந்த ஒரு சம்பவத்தில் பெற்றோர் தங்கள் குழந்தைக்கு “நியூட்டலா” ("Nutella") என்ற சுவைமிகு சொக்கிலேற் உண வின் பெயரைச் சூட்டினர். இன்னுமொரு பெற் றோர் "Titeuf" என்ற நகைச்சுவைச் சினிமாப் படத்தின் பெயரைக் குழந்தைக்கு இட்டனர்.வளர்ந்த பிறகு குழந்தையைக் கேலிக்குள்ளாக்கலாம் என்ற காரணத்தால் நீதிமன்றம் அதில் தலையிட்டது. ■




**மேடம்**
பணியிடத்தில் ஏற்பட்டிருந்த ஒரு சிரமம் இன்று அகலும்.உடன்பிறப்புகளால் கடன் சுமை குறையும். வெற்றிகள் கூடும்.வீடுமாற்றம், இடமாற்றம் உண்டு. கடன் தொல்லை குறையும்.

**இடபம்**
பல நாள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.உங்கள் தவறால் பொது வாழ்வில் இருந்த புகழ் குறையலாம்.வம்புகளால் ஏற்பட்ட பிரச்னைகளை சமாளிப்பீர்கள்.

**மிதுனம்**
எதிரிகளின் கை தாழும். வளம் காணும் நாள். பொருளாதார முன்னேற்றம் முன்பைவிடச் சிறக்கும்.பாதியில் நின்ற பணிகளை முனைந்து முடிப்பீர்கள்.

**கடகம்**
வருமானம் திருப்தி தரும். உறவினர் தொல்லை தொடரும்.தேவையான பொருட்களை வாங்க செலவுகள் ஏற்படும்.வெளிநாட்டில் இருந்து வரும் செய்தி மகிழ்ச்சி தரும்.

**சிம்மம்**
யோசித்துச் செயல்படவில்லை என்றால் தொல்லை ஏற்படும். வம்புகளில் ஈடுபட வேண்டாம். அவசரத்தை தவிர்ப்பது நல்லது. தூரத்து உறவினர்களின் உதவி கிடைக்கும். புகழ் அதிகரிக்கும்.

**கன்னி**
பிறரிடம் கனிவாகப் பேசி எதையும் சாதிக்கப் பாருங்கள்.உங்களைப் புரிந்து கொள்ளாமல் செயல்பட்டவர்கள் மாறுவர்.வாழ்வில் உயர்வதற்கான முயற்சிகளை செய்வீர்கள்.

**துலாம்**
பிரியமான சிலரைச் சந்திப்பீர்கள். பணவரவு சிறிது உண்டு.உறவினர்களின் செயல்கள் மனதிற்கு சந்தோஷத்தைக் கொடுக்கும். அருகில் உள்ளவர்களின் ஆதரவு உண்டு. மனம் நிறையும்.

**விருட்சிகம்**
அதிகாரிகள் கருணையுடன் நடந்து கொள்வர். ஆதாயம் உண்டு. புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றுவீர்கள். மனதிற்கு நிறைவு தரும் நிகழ்வுகள் நடைபெறும் நாள்.

**தனுசு**
வேலை பற்றி செய்த முயற்சியில் தாமதம் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையின் ஆதரவு காரணமாக பிரச்னை ஒன்று அகலும். எதிர்ப்புகள் மாறும். தொட்டது துலங்கும். வெற்றி உண்டு.

**மகரம்**
எதிர்பார்த்த விஷயம் நடைபெற்று மகிழ்ச்சியை தரும். இன்று மேற்கொள்ளும் பயணங்களால் பெரிய நன்மைகள் இருக்காது. இன்று மாலை வரும் செய்தி சந்தோஷப்பட வைக்கும்.

**கும்பம்**
நேற்றைய பிரச்னைகள் முடிவிற்கு வரும் நாள். திட்டமிட்ட பணிகளில் சிறு மாற்றம் செய்வீர்கள். கடந்த சில நாட்களாக வாட்டி வந்த மனக்குழப்பம் அகலும்.

**மீனம்**
தம்பதிகள் ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. தொழில் முன்னேற்றம் சற்றே அதிகரிக்கும் நாள். அலைபேசி மூலம் பொன்னான செய்தி வரும். தயக்கம் தீரும்.

# இலங்கையின் தலைவிதியை ஐ.நா. நிர்ணயிக்க முடியாது!



## விமல் வீரவன்ஸ சீற்றம்

கொழும்பு, செப். 19

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களின் அடிப்படையில் இலங்கையின் தலைவிதியை நிர்ணயிக்க ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ சூளுரைத்தார்.**

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை யின் 48ஆவது கூட்டத்தொடர் ஆகியன தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே விமல் வீரவன்ஸ இவ்வாறு சூளுரைத் தார்.

இவை தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஈஸ்டர் தாக்குதலுக்கு பொறுப்புக்கூறவேண்டிய அனைவரும் கைது செய்யப்படவில்லை என கூறுபவர்களிடம், இன்னும் கைதாகாமல் எஞ்சியிருப்பது யார் என கேட்கின்றோம். அவ்வாறான வர்கள் தொடர்பான தகவல்களை நாட்டுக்கு பகிரங்கப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

ரிஷாத் பதியுதீன், அசாத் ஸாலி போன்றவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். எந்த காரணத்துக்காக இவர்கள் கைதானார்கள்? உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்டிருப்பதாலேயே கைது செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில் இவர்கள் பலம்பொருந்திய நபர்கள் இல்லையா?

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் ஏதேனும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவது வழமையான நடவடிக்கையாகும். இவ்வாறு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை தடுக்க முடியாவிட்டாலும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களின் அடிப்படையில் இலங்கையின் தலைவிதியை நிர்ணயிக்க இடமளிக்கமாட்டோம்." - என்றார்.



# யாழ்.வீதிகளில் அநாவசியமாக நடமாடுவோருக்கு அன்ரிஜென்

யாழ்ப்பாணம், செப். 19

யாழ்ப்பாணத்தில் நேற்று தொடக்கம் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறி வீதியில் பயணிப்பவர்கள் அதிவிரைவு அன்ரிஜென் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் மற்றும் சுகாதாரத் துறையினர் இணைந்து இந்த நடவடிக்கையை நேற்று முற்பகல் கொக்குவில் கே.கே. எஸ் வீதியில் குளப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் ஆரம்பித்தனர்.

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு வரும் ஒக்ரோபர் முதலாம் திகதிவரை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள நிலையில் வீதியில் பொதுமக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கை மீறி தேவையற்று நடமாடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி பணித்திருந்தார்.

இந்த நிலையில் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட்டவர்கள் தவிர்ந்து வீதிகளில் நடமாடுபவர்களுக்கு அதிவிரைவு அன்ரிஜென் பரிசோதனையை முன்னெடுக்கும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸார் மற்றும் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை இணைந்து நேற்று முற்பகல் கொக்குவில் கே.கே.எஸ் வீதியில் குளப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் வீதியில் நடமாடுவோர் மீது அன்ரிஜென் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

# கோப்பாய் இராச வீதியில் ஓட்டோவை மோதித்தள்ளிய மின்சாரசபை வாகனம்!

## குடும்பஸ்தர் பரிதாப மரணம்



யாழ்ப்பாணம், செப். 19

கோப்பாய் - இராச வீதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள ஆலயம் ஒன்றுக்குச் சென்றுவிட்டு கோப்பாய் பக்கம் நோக்கிய திசையில் பயணித்துக்கொண்டிருந்தபோது எதிரே வந்து கொண்டிருந்த இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான வாகனம் திடீரென திருப்ப முற்பட்டு ஓட்டோவை மதிலோடு சேர்த்து மோதியதாக சம்பவத்தைப் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

சம்பவத்தின்போது குறித்த பகுதியில் குழாய்க்கிணறு உருவாக்கும் தொழில் முயற்சியை மேற்கொண்டுவரும் குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

அங்கு சென்ற பொலிஸார் மின்சாரசபை வாகனத்தையும் ஓட்டோவையும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். (அ)

# ஊரடங்கு உத்தரவை மீறிய 613 பேர் கைது

கொழும்பு, செப். 19

நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 613 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த காலப்பகுதியில், ஊரடங்கு உத்தரவை மீறி பயணித்த 104 வாகனங்களை பொலிஸார் பொறுப்பேற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரை தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 74,507 ஆக அதிகரித்துள்ளது. (அ)

# குருநகரில் எறிகணை மீட்பு!



யாழ்ப்பாணம், செப். 19

குருநகர் பிரதேசத்தில் ஆர்.பி.ஜி எறிகணையொன்று மீட்கப்பட்டது.

திருநகர், பாரதி விளையாட்டு மைதானத்தின் துப்பரவு பணியின் போது எறிகணை மீட்கப்பட்டது.

# ஜனாதிபதியும், பிரதமரும் வெளிநாட்டில் தற்காலிக அரச தலைவரானார் சபாநாயகர்

கொழும்பு, செப். 19

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளிநாடுகளுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், பாராளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனா தற்காலிக அரச தலைவரானார்.

அதன்படி, ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தில் இதுபோன்ற ஒரு சம்பவம் நிகழ்வது இதுவே முதல் முறை.



நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி நேற்று காலை அமெரிக்கா பயணமானார். அதன் பின்னரே சபாநாயகர் நாட்டின் தற்காலிக அரச தலைவரானார்.

இதற்கிடையே, கடந்த வாரம் இத்தாலியின் போலோக்னாவில் நடந்த ஜி 20 சர்வமத மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் அந்த நாட்டுக்குப் பயணமாகியுள்ளார்.

# தடுப்பூசியை பெற்றுகொள்ள மாணவர்களை தயார் செய்க!

## பெற்றோருக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, செப். 19

பாடசாலை செல்லும் மாணவர்களை தடுப்பூசி பெற்றுக் கொள்ள தயார்ப்படுத்துமாறு சுகாதார அமைச்சு பெற்றோருக்கு அறிவித்துள்ளது.

குறிப்பாக தடுப்பூசியை செலுத்துவதற்கான காலக்கெடு இறுதி செய்யப்படாத நிலையில் இந்த அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் முறையான உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை தொடங்காது என மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அதற்குரிய திகதிகள் மற்றும் இடங்கள் எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை 15 முதல் 19 வயதுக்கு உட்பட்ட மற்றும் 12 வயதுக்கு மேற்பட்ட குறைபாடுகள் உள்ள சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசியை வழங்க ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பணத்துடன் தப்பிய அதிவேக நெடுஞ்சாலை ஊழியர் பாணந்துறையில் வசமாக சிக்கினார்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கெலனிகம நுழைவாயிலில் பணியாற்றிவந்த போது கடந்த 11ஆம் திகதி 1,418,500 ரூபாவுடன் தப்பிச்சென்ற ஊழியர் நேற்று முன்தினம் பாணந்துறை குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இதன்போது குறித்த நபரிடமிருந்த 384,000 ரூபா பணத்தையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் சந்தேக நபர் கடந்த ஓகஸ்ட் 31ஆம் திகதி முதல் அவ்வப்போது பணத்தை எடுத்துச் சென்றுள்ளதாகவும், தனிப்பட்ட வங்கிக்கடனை செலுத்துவதற்காகவும் சூதாட்டத்துக்காகவும் அவர் இவ்வாறு குறித்த பணத்தை பயன்படுத்தியுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# அமைச்சர்களின் செயலை எதிர்த்து பெரமுனவின் எம்.பி. இராஜினாமா!

## ஆளும் தரப்புக்குள் முற்றுகிறது மோதல்

கொழும்பு, செப். 19

**அமைச்சர்களின் தன்னிச்சையான செயற்பாட்டுக்கு கடும் எதிர்ப்பை வெளியிடும் வகையில் பாதுக்க பிரதேச அபிவிருத்திக் குழு தலைமைப்பதவியை இராஜினாமா செய்துள்ளார் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜகத்குமார.**

**இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேற்றுமுன்தினம் கடிதமொன்றையும் அவர் அனுப்பிவைத்துள்ளார்.**

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மொட்டு கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜகத்குமார கூறியவை வருமாறு:

ஜனாதிபதி மற்றும் பிரதமரால் எடுக்கப்படும் தீர்மானங்கள் சில அமைச்சர்களின் செயற்பாடுகளால்தான் பயனற்றுப் போகின்றன. பாதுக்க பிரதேசத்தின் அபிவிருத்திக்குழுத் தலைவராக ஜனாதிபதி என்னை நியமித்தார்.சிவில் தரப்பினர், பொலிஸார், பிரதேச சபையினருடன் இணைந்து சிறப்பாக வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. எனினும், அரசியல் ரீதியில் அழுத்தங்கள் வந்தன. பொலிஸார் சுயாதீனமாக செயற்பட்டதால் பாதுகாக்கப்பட்டோம்.

இந்நிலையில் பாதுகாக்க பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி இடமாற்றப்பட்டுள்ளார். அதற்கு பதிலாக அமைச்சர் காமினி லொக்குகேயுக்கு வேண்டியவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த கீழ்த்தரமான செயலை செய்யவேண்டாம் என விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் சரத் வீரசேகரவிடம் வலியுறுத்தியிருந்தேன். ஏனெனில் பொலிஸானது அரசியல் மயப்படுத்தப்படக்கூடாது. கீழ்த்தரமாக செயற்படும் இத்தகைய அமைச்சர்களுடன் இணைந்து செயற்படமுடியாது என்பதால் பதவி விலகும் முடிவை எடுக்கின்றேன்-என்றார்.

# மதுபானசாலைகள் திறக்கப்பட்டமை; மருத்துவர் சங்கங்கள் போர்க்கொடி!

கொழும்பு, செப். 19

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள நிலையில், மதுபானச் சாலைகள் திறக்கப்பட்டமைக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

அத்துடன், பல நெருக்கடிக்கு மத்தியிலும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்டு வந்த நடவடிக்கைகளை குழப்பும் விதத்திலேயே இச்செயற்பாடு அமைந்துள்ளதாக மேற்படி சங்கத்தின் பிரதிநிதியான மருத்துவர் பிரசாத் கொலம்பகே சுட்டிக்காட்டினார்.

மதுபானச்சாலைகளை திறப்பதற்கு அரசாங்கமோ அல்லது கலால் திணைக்களமோ அனுமதி வழங்கவில்லையெனில், அது தொடர்பில் விசேட விசாரணையொன்று முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் மருத்துவர் வலியுறுத்தினார்.

அதேபோல இலங்கை மருத்துவர் சங்கம் உட்பட மேலும் சில சங்கங்களும் இதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

# யாழில் ஆவா ரௌடிகளின் ஆயுதக்களஞ்சியம் சிக்கியது!

யாழ்ப்பாணம், செப். 19

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வாள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இணுவில் அண்ணா மைதானத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வாள்களை அவதானித்தவர்கள், பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து நேற்று வாள்கள் மீட்கப்பட்டன.

அண்மையிலும், இந்த பிரதேசத்தில் வாள்கள் மீட்கப்பட்டிருந்தன. ஆவா குழு ரௌடிகளின் வாள்கள் என கருதப்படுகின்றன.

# அநுராதபுரம் சிறையில் சி.சி.ரி.வி இல்லையாம்!

கொழும்பு, செப். 19

வெலிக்கடை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலை வளாகத்தில் சி.சி.ரி.வி கமெராக்கள் இல்லை என சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

லொஹான் ரத்வத்த அச்சுறுத்தியதாக தெரிவிக்கப்படும் சம்பவம் குறித்த விசாரணைகள் இடம்பெற்றுவரும் நிலையிலேயே இந்த செய்தி வெளியாகியுள்ளது.

மேலும் தற்போது அங்குன கொலபெலஸ்ஸ, களுத்துறை மற்றும் பூஸா சிறைச்சாலைகளில் மட்டுமே இந்த வசதிகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே லொஹான் ரத்வத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைக்கு சி.சி.ரி.வி காட்சிகள் கிடைக்காது என்றும் சிறைச்சாலை தலைமையகம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் சிறைச்சாலைகளுக்கு வருபவர்கள் கையொப்பமிடும் பதிவுப் புத்தகத்தை கொண்டு, தேவையெனில் விசாரணையை மேற்கொள்ள முடியும் என சிறைச்சாலை தலைமையகம் தெரிவித்துள்ளதாக குறித்த செய்தி அமைந்துள்ளது.

# வவுனியாவில் திறக்கப்பட்ட மதுபான சாலைகள் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டன!

வவுனியா, செப். 19

வவுனியாவில் திறக்கப்பட்டு சுகாதார நடைமுறைகளின்றி வியாபாரத்தில் ஈடுபட்ட 4 மதுபானசாலைகள் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டன.

கோவிட் பரவல் காரணமாக நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் எதிர்வரும் முதலாம் திகதி அதிகாலை 4 மணிவரை நீடிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டில் சில மதுபானசாலைகள் நேற்றுமுன்தினம் மாலை திறக்கப்பட்டன.

அந்தவகையில், வவுனியாவில் சில மதுபானசாலைகள் திறக்கப்பட்டமையால் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தையும் மீறி நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அவற்றுக்கு முன்பாக சுகாதார நடை முறைகளைப் பின்பற்றாது திரண்டு இருந்தனர். இதனையடுத்து சுகாதாரப் பிரிவினர் குறித்த மதுபானசாலைகளை மூடுமாறு பணித்துடன், அங்கு நின்றவர்களையும் பொலிஸாரின் உதவியுடன் வெளியேற்றினர்.

அத்துடன், சுகாதார நடைமுறைகளைப் பேணாது வியாபாரத்தில் ஈடுபட்ட வவுனியா நகரில் கண்டி வீதியில் உள்ள மதுபானசாலை, பூவரசன்குளம் பகுதியில் உள்ள மதுபான சாலை, ஓமந்தையில் உள்ள மதுபானசாலை, மரக்காரம்பளையில் உள்ள மதுபானசஷ சாலை என 4 மதுபானசாலைகள் தனிமைப்படுத்தல் நோட்டீஸ் ஒட்டப்பட்டு 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டன.

# 50 வீதமானவர்களுக்கு 2 தடுப்பூசிகளும் ஏற்றல்

கொழும்பு, செப். 19

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 50 வீதமானோருக்கு முழுமையாக தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் மாலை வரையான தரவுகளின் அடிப்படையில் நாட்டின் மொத்த சனத்தொகையான 2 கோடியே 19 இலட்சத்து 19,413 பேரில் அரைவாசியினருக்கு இரண்டு தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

அதற்கமைய 89,73,670 பேர் சினோபார்ம் தடுப்பூசியும் அஸ்ட்ராசெனேகா தடுப்பூசியை 949,105 பேரும் பெற்றுக் கொண்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அத்துடன் 758,282 பேருக்கு மொடேர்னா தடுப்பூசியும் 243,685 பேருக்கு பைசர் தடுப்பூசியும் 43,453 பேருக்கு ஸ்புட்னிக் தடுப்பூசியும் செலுத்தப் பட்டுள்ளது.

அதற்கிணங்க, நாட்டில் இதுவரை ஒரு கோடியே 9 இலட்சத்து 68,195 பேர் இரு தடுப்பூசிகளையும் செலுத்திக் கொண்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

# 260 இலட்சம் ரூபா செலவில் யாழில் அபிவிருத்தித் திட்டம்

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 19

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்திப் பணிகளின் ஒரு கட்டமாக சுமார் 260 இலட்சம் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்களை உடனடியாக ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடற்றொழில் அமைச்சின் களப்பு பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டத்தின் ஊடாக யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளும் நன்மையடையவுள்ளன.

அந்தவகையில், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தனங்களப்பு மற்றும் கோவிலாக்கண்டி ஆகிய இடங்களில் மீன்பிடிப் படகுகளை நிறுத்துவதற்கான தரிப்பிடங்கள் சுமார் 57 இலட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதேபோன்று, யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட நான்கு இடங்களில் இடி மின்னல் பாதுகாப்பு (இடி தாங்கி) பொறிமுறையை அமைப்பதற் காக சுமார் 45 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதைவிட, கொட்டடி நாவாந்துறை மற்றும் கொழும்புத்துறை ஆகிய இடங்களில் அமைந்துள்ள வலை ஒழுங்குபடுத்தும் மண்டபங்களை புனரமைப்பதற்காக சுமார் 119 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் கடற்றொழில் திணைக்களத்தால் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட இடங்களுக்கு வீதி மின் விளக்குகள் பொருத்துதல் உட்பட சுமார் 17 வேலைத் திட்டங்கள் உடனடியாக ஆரம்பிக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

களப்பு பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் உட்பட கடற்றொழில் அமைச்சின் ஏனைய திட்டங்களும் யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரந்துபட்டளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்படுமா?

கொழும்பு, செப். 19

இலங்கையில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்படும் ஆபத்து இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தின் புவிச்சரிதவியல் தொடர்பான சிரேஷ்ட பேராசிரியர் அத்துல சேனாரத்ன இந்த எச்சரிக்கையை வெளியிட்டுள்ளார்.

அண்மைக் காலமாக பதுளை, கண்டி, மடுல்சீமை, லுணுகம்வெஹர, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் நிலநடுக்கம் பதிவாகியிருந்தது.

இது குறித்து ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், நடத்தப்பட்ட ஆய்வுகளின் முடிவுக்கமைய எதிர்வரும் நாட்களிலும் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.


# லொஹானின் நடத்தை பற்றி பெரமுன மத்திய குழு ஆராயும்!

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மதுபோதையில் அனுராதபுரம், வெலிக்கடை சிறைச்சாலைகளுக்குள் நுழைந்த அட்டகாசத்தில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக, பொதுஜன பெரமுனவின் மத்திய செயற்குழுவில் ஆராயப்பட்டு நடவடிக்கையெடுக்கப்படும் எனக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இத்தாலிக்கு பயணித்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விரைவில் நாடு திரும்புவார் என்றும், அவர் நாடு திரும்பியதும் மத்திய செயற்குழு கூடுமென்றும் அவர் தெரிவித்தார்.




# நீதியற்ற ‘நீட்’ தற்கொலைகள்!



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

ஒரு தொண்ணூறு வயது முதியவருக்குக் கடைசி மூச்சு இழுக்கும்போதும் ஒரு துடிப்பிருக்கும் - “இன்னும் ஒரு வாரம் இருந்தா அந்த வேலை, இந்த வேலை, எத்தனையோ வேலைகளை முடித்துவிட்டு நிம்மதியா போவேன். ஆனா, இப்போதே இவங்களெல்லாம் என்னை சூழ்ந்துகொண்டு அழ ஆரம்பித்துவிட்டார்களே, டாக்டர் வெளியில் போய்விட்டாரே”.

நம்முடைய இதே சமூகத்தில்தான் சில பேர், இளைஞர்கள், சாவைத் தேடிச் செல்கிறார்கள், இல்லை. ஓடுகிறார்கள்.

சாகவேண்டும் என்ற துடிப்பை எப்படிக் கொல்வது? நம் பாதை ஒரு விளிம்பில் முடிந்துவிட்டது என்று நினைத்துக்கொண்டு, உச்சியிலிருந்து குதிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற சூழ்நிலையில் வரும் தற்கொலை எண்ணத்தை என்ன செய்வது? நீண்ட, இருட்டான சுரங்கப்பாதையின் முடிவில் வெளிச்சம் இருக்கும் என்று நம்ப மறுக்கிறோமா? இதேபோன்ற மனத் தொய்வில் பலர் இருக்கிறார்கள். இந்த சூழ்நிலைக்கு நண்பர்களோ எதிரிகளோ அவர்களின் சொந்த மனநிலையோகூடத் தள்ளியிருக்கலாம். அவர்களையும் நம்மையும் “தற்கொலை என்பது ஒரு முட்டாள்தனம், இதுவும் கடந்து போகும்” என்று எப்படி சமாதானப்படுத்திக்கொள்வது?

பல காரணங்களால் நடக்கும் இதுபோன்ற தற்கொலைகளின் சோகக்கதைகளை செய்தித்தாள்களில் தொடர்ந்து பார்க்கிறோம். தர்க்கரீதியான, பகுத்தறிவு கொண்ட மனம், இந்தக் காரணங்களை ‘காரணங்கள் இல்லை’ என்றுகூட ஒதுக்கக்கூடும். காதல் தோல்வி,



அல்லது பாசமுள்ள உறவினரிடம் வழிகாட்டுதல் பெற்றிருந்தாலோகூட இந்தக் கொடுமையைத் தவிர்த்திருக்கலாம். தீக்குளிக்க முயன்ற பெண்ணால் தன் வாழ்நாள் முழுவதும் முகக் கண்ணாடியில் தன்னைப் பார்க்க முடியாது. கழிவறை சுத்தம் செய்யும் மருந்தைக் குடித்த பெண்ணால் ஒரு நாளைக்கு 6-7 முறை சிறு தம்ளரில் கஞ்சியோ மோரோ மட்டும்தான் குடிக்க முடியும். போத்தல் துண்டுகளை விழுங்கிய வீராங்கனைக்கு உள்ளே ரத்தம் கசியக் கூடாது என்பதற்காக குடலின் பெரும்பகுதி அவசர அறுவைசிகிச்சை மூலம் நீக்கப்பட்டது.

தொடரும் இந்த சாபக்கேட்டை விசித்திரமும் விநோதமும் நிறைந்த இந்த சமூகம் பல வழிகளில் கையாள்கிறது. ஒரு பரபரப்பான தற்கொலைக்குப் பின் சமூக-அரசியல் தளங்களில் இருப்பவர்கள் எப்பாடு பட்டாவது தங்களது இரங்கல் செய்திகளை ஊடகங்களுக்கு நுழைக்கவேண்டும் என்று துடிப்பார்கள். இவர்களில் மிகவும் சுறுசுறுப்பு நிறைந்த தலைவர், பாதிகப்பட்டவர்களின் வீட்டுக்கே நேரில் சென்று புகைப்படத்துக்குப் போஸ் கொடுக்கிறார். இதில் இன்னொரு தரப்பு மக்களும் உண்டு. இரங்கல் செய்தியையும் தாண்டி, தற்கொலை செய்தவர்களை வீரச்செயல் செய்த கதாநாயகர்களாக மாற்றி, ஒரு பெரிய தியாகத்துக்காக அவர்கள் இறந்திருக்கிறார்கள் என்று பிரகடனம் செய்து, அவர்களுக்காகப் பேரணிகள் நடத்துவதும் சிலை வைப்பதும் செய்வார்கள்.

தற்கொலைத் தடுப்பு ஆலோசனை மையங்கள் நடத்தும் தொண்டு நிறுவனங்களுக்கும் இந்தப் பிரச்னை முக்கியமானது. சில ஆலோசனை மையங்கள் 24 மணிநேரமும் இயங்குகின்றன. மனச்சோர்வு

தரப்படும் தண்டனை என்பதே நீண்ட காலமாக எழுப்பப்படும் போராட்ட கோஷமாக இருக்கிறது. இதற்கும் இந்தத் தற்கொலை களுக்கும் தொடர்பு உண்டா என்பதை நான் ஆராய விரும்ப வில்லை. 1960களில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது, 1987 டிசம்பரில் எம். ஜி. ஆர் இறந்தபோது, அண்டை மாநிலமான கர்நாடகா காவிரி நீரைத் தமிழக விவசாயிகளுக்காகத் திறந்துவிட மறுத்தபோதெல்லாம் தற்கொலைகள் நிகழ்ந்தது நினைவிருக்கிறதா?

பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் பட்டியலினத்தவருக்கும் சமூக நீதியைக் கொண்டு சேர்க்கும் ஒரு கருவியாக இட ஒதுக்கீட்டைத் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் நெடுங்காலமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். இந்தப் பிரிவினருக்குக் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் 69வீத இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இது, தமிழ்நாட்டைச் சேர்ந்த விளிம்பு நிலை மக்களுக்குக் கல்லூரிகளில் இடங்களைப் பெற்றுத்தந்தாலும், அடுத்தடுத்த ஆண்டுகளில் பள்ளிகளில் உள்ள கல்வித்திட்டத்தை மேம்படுத்துவதற்கு அரசுகள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. பாடம் நடத்தும் முறைகளும் ஆசிரியர்களின் திறன்களும் மேம்படுத்தப்படவில்லை. பல ஆசிரியர்கள் தனியார் டியூஷன்களிலேயே கவனம் செலுத்தியதால், பணியின்மீது அவர்களுக்கு இருந்த அர்ப்பணிப்பும் போதுமானதாக இருக்கவில்லை. இன்னும் மோசமான நிலையாக, சில ஆசிரியர்கள் புடவை விற்பதிலும் சிட்பண்ட் நடத்துவது போன்ற ‘சைட் பிசினஸ்’களில்

## ‘மீனைப் பரிசளிப்பதை விட மீன் பிடிக்க கற்றுக்கொடுங்கள்’

திருமண வாழ்வில் பிரச்னைகள், புகுந்த வீட்டாரின் துன்புறுத்தல், வேலைவாய்ப்பு இல்லாமை, அலுவலகத்தில் உயரதிகாரியுடன் ஏற்படும் பிரச்னை, கடன் தொல்லை, தாகசாந்திக்கு மது அருந்துவதற்காக 100 ரூபாய் கடன் பெற முடியாத சூழல் என்று இந்தப் பட்டியல் நீள்கிறது. இந்தத் தற்கொலை ‘அறுவடை’ தேர்வுக் காலங்களிலும் தேர்வு முடிவுகள் வரும்போதும் உச்சத்துக்குப் போகிறது. தேர்வு எழுதுவதற்கு முன்பே தோல்வி பயத்தால் தற்கொலை செய்துகொள்ளும் மாணவ மாணவிகளும் உண்டு.

பத்திரிகையாளராக இருந்த ஆரம்ப காலகட்டத்தில், தற்கொலைகள் பற்றிய கட்டுரை ஒன்றை எழுதினேன். நாளை என்ற ஒன்றே இல்லாததைப்போல தற்கொலை செய்துகொள்வது எத்தனை முட்டாள்தனமானது என்று காட்ட விரும்பினேன். தற்கொலை முயற்சியில் பிழைத்த ஆறேழு பேரிடம் பேட்டி எடுத்தேன். குடித்துவிட்டு கணவன் அடிக்கிறார் என்பதால் தீக்குளிக்க முயன்ற ஒரு பெண்ணையும், உயரதிகாரி தவறாக நடந்துகொண்டார் என்பதால் கழிவறை சுத்தம் செய்யும் மருந்தைக் குடித்த ஒரு பெண்ணையும், காதலன் வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருக்கிறான் என்பதால் மணிக்கட்டு நரம்பை அறுத்துக்கொண்ட ஒரு பெண்ணையும், பைக் கேட்கும்போது தந்தை திட்டியதால் கடலில் மூழ்க முயற்சி செய்த ஒரு பதின்மபருவ சிறுவனையும், பெற்றோர் திருமண ஏற்பாடுக்காகப் பேசுவது காதில் விழுந்ததால் உடைந்த போத்தல் துண்டுகளை விழுங்கிய ஒரு பெண்ணையும் பேட்டி எடுத்தேன். இது நடந்து நெடுங்காலம் ஆகிவிட்டதால், தற்கொலை முயற்சிகளையும் அதற்கான காரணங்களையும் நான் கொஞ்சம் மாற்றி எழுதியிருக்கலாம். ஆனால், தப்பிப் பிழைத்ததற்காக யாருமே வருத்தப்படவில்லை என்பது எனக்குத் தெளிவாக நினைவிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், ‘இந்த சின்ன விஷயத்துக்காக’ தற்கொலை முயற்சி செய்தேனே என்று அவர்கள் வருந்தி, கோபப்பட்டு, அவமான உணர்வும் அடைந்துள்ளதைக் கண்டேன். இந்தப் பிரச்னையிலிருந்து வெளிவருவதற்குத் தெளிவாக ஓர் இரவு முழுக்க யோசித்திருந்தாலோ, ஒரு நல்ல நண்பன்

உள்ளவர்களைத் தற்கொலை எண்ணங்களிலிருந்து மீட்பதில் இந்த மையங்கள் மிகச் சிறப்பாக செயல்படுகின்றன என்பதைப் பார்த்திருக்கிறேன். ஆனால், துரதிருஷ்டவசமாக, பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் இந்த மையங்களை அணுகுவதில்லை; அவசரமாக முடிவெடுத்து இறந்துவிடுகிறார்கள்.

எம்.பி.பி.எஸ் படிப்புக்கான தேசிய நுழைவுத்தேர்வான ‘நீட்’ (National Eligibility cum Entrance Test), இந்த ஆண்டு 202 நகரங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (செப்ரெம்பர் 12) இந்தியா முழுவதும் நடத்தப்பட்டது. நீட் காலத்தில் பல தற்கொலைகள் நடக்கும். கேள்விகள் சி.பி.எஸ்.ஸி (central board) தரத்தில் இருக்கும் என்பதால், அவை தமிழ்நாட்டின் மாநில கல்வித் திட்டத்தைவிடக் கடினமானவை. ஆகவே மாநிலக் கல்வித் திட்டத்தில், குறிப்பாக தமிழ்வழியில் படித்த மாணவர்களுக்கு நீட் கடினமாக இருக்கிறது. இந்த ஆண்டு மட்டும் நீட் பிரச்னையால் இரண்டு மாணவிகளும் ஒரு மாணவனும் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஒரு மாணவி தற்கொலை முயற்சி செய்திருக்கிறார். தீக்குளித்த அந்த மாணவி மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறாள். இந்த எல்லா துயரங்களும் கடந்த ஒரு வாரத்தில் நடந்திருக்கின்றன. சென்ற வருடம் ஏழு தற்கொலைகள் நடந்தன. 2017இல் நீட் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு தமிழ்நாட்டில் மட்டும் பன்னிரெண்டுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியராவது இறந்திருப்பார்கள். இதற்கு முன்பாக, பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண்களை மட்டும் அடிப்படையாக வைத்தே மருத்துவக் கல்வி இடங்கள் ஒதுக்கப்பட்டன.

சென்ற ஆண்டு, இந்திய உளவியல் ஆராய்ச்சி சஞ்சிகை ஓர் ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டது. அதில், ஜனவரி 2018 முதல் செப்டம்பர் 2020 வரை நடந்த தேசிய அளவிலான நீட் தற்கொலைகள் மொத்தம் 32 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 15 நீட் தற்கொலைகளோடு தமிழ்நாடு இந்தப் பட்டியலில் முதலிடம் பிடிக்கிறது. 4 தற்கொலைகளோடு பீகார் இரண்டாவது இடத்தில் இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, தன் பிரச்னைகளை வெளிப்படுத்தவும், போராட்டத்தின் ஒரு வடிவமாகவும் தற்கொலை என்பது மாறிவிட்டதையே இது காட்டுகிறது. ஏற்றுக்கொள்ள முடியாத, தர்மசங்கடமான எதுவும் வடக்கிலிருந்து வரும் ஆரிய அரசர்களால் தமிழ்நாட்டுக்குத்

முனைப்புக் காட்டினார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு திடீரென்று விழித்துக்கொண்ட தமிழ்நாடு அரசு, சரிந்துவிட்ட பள்ளித் தரத்தைத் தூக்கி நிறுத்த முனைந்தது. பள்ளிக் கல்வித்திட்டத்தை மேம்படுத்தியது. சி.பி.எஸ்.ஸி மாணவர்களோடு போட்டி போட வேண்டுமென்றால் இன்னும் நிறைய செய்யவேண் டும். இது நடந்தால் நீட் தற்கொலைகள் நிற்கக்கூடும், குறைந்தபட்சம் தற்கொலைகளின் எண்ணிக்கையாவது பெருமளவில் குறையும்.

தமிழ்நாட்டின் கல்வி நிர்வாகிகளும் அரசியல்வாதிகளும் பாடப் புத்தகங்களிலும் வகுப்பறைகளிலும் தரம் குறைந்திருப்பதை முன்பே கவனித்திருக்கலாம் என்று யோசிக்கிறோம். நீட் தேர்வாளர்களிடம் தற்கொலை வேண்டாம் என்று மன்றாடி, மூன்று பக்கத்திற்கு நெஞ்சைத் தொடும் உருக்கமான கடிதம் ஒன்றை எழுதியுள்ளார் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின்.

“நீட் தேர்வில் வெற்றிபெற முடியவில்லையே என்ற ஏக்கம் காரணமாக உயிரை மாய்த்துக் கொள்ளும் செய்தி என் நெஞ்சில் ஈட்டியைப் பாய்ச்சுவதாக இருக்கிறது. உங்களுடைய உயிர், விலைமதிப்பு இல்லாதது. உங்கள் உயிர், உங்கள் குடும்பத்துக்கு மட்டுமல்ல, இந்த நாட்டுக்கும் முக்கியமானது. உங்களுடைய எதிர்காலத்தில்தான் இந்த நாட்டின் எதிர்காலம் அடங்கி இருக்கிறது” என்று அவர் எழுதியிருக்கிறார்.

மத்திய கல்வித் திட்டத்தோடு ஒப்பிடத்தக்க அளவுக்கு மாநிலக் கல்வித்திட்டத்தையும் முந்தைய ஆட்சியாளர்கள் மேம்படுத்தியிருந்தால் இப்போது முதல்வரும் பொதுமக்களும் இதுபோன்ற நீட் துயரத்தில் மூழ்கியிருக்க மாட்டார்கள். இடஒதுக்கீடுகள் தேவையற்றவை என்று நான் கூறவில்லை. மாறாக, வசதி வாய்ப்பு உள்ளவர்களுடன் சரிசமமாகப் போட்டிபோட விளிம்புநிலை மக்களையும் உயர்த்துவதற்கு அது மிகவும் தேவை என்றுதான் நான் நம்புகிறேன். ஆனால், அதே நேரத்தில், நம்மை முன்பு ஆட்சி செய்தவர்கள் இந்த பண்டைய சீனப் பழமொழிக்கும் முக்கியத்துவம் தந்திருக்கவேண்டும் - ‘ஒருவனுக்கு சாப்பிடுவதற்காக மீனைப் பரிசாக வழங்குவதை விட, அவனுக்கு மீன் பிடிக்கக் கற்றுக்கொடுப்பதே மேலானது’.

●

# அரசுக்கு தலையிடியை கொடுக்கும் அரசியல்வாதிகளல்லாத இருவர்!





நஜீப் பின் கபூர்

வடக்கு கிழக்கு என்பவற்றுக்கும், நாட்டில் தென் பகுதிக்கு மிடையே தெளிவான வரலாற்று இடைவெளிகள் இருப்பது உலகறிந்த கதை. தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிரும் வேறு என்பது போலத் தான் இந்தக் கதைகளும் இருக்கின்றன. இந்த வேற்றுமைகள் பற்றி நாம் இங்கு பட்டியலிட்டுக் காட்ட விரும்பவில்லை. அதற்கான அவசியம் இங்கில்லை.

வடக்கு, கிழக்கு அரசியல் ஓயாத அலைகள் போல உரிமைப் போராட்டங்களுடனும் காட்டிக் கொடுப்புக்களுடனும் நகரும் அதே வேளை, தென்னக அரசியல் சுரண்டலுடனும் ஏமாற்றங்களுடனுமே தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் தான் அன்று இலங்கையைப் பார் என்றவர்கள் இன்று சிங்கப்பூரைப் பார் என்று நமக்கு கதை விட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆகாயத்தில் இருந்து அரிசி வருகின்றது என்று சொன்னார் ஸ்ரீமாவோ அம்மையார். நாட்டை சிங்கப்பூராக்கிக் காட்டுகின்றேன் என்று தம் மட்டம் அடித்தார் பெரியவர் ஜே.ஆர். இருவரும் இயற்கை எய்திப் பல தசாப்தங்கள் ஆகியும் அவர்களின் கனவுகள் நிஜமாகவில்லை. இன்று தெற்காசியவில் மட்டுமல்ல உலகிலே மிகவும் பொருளாதாரதில் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்ட ஒரு நாடாக நமது அரசியல் தலைவர்கள் மாற்றி இருக்கின்றார்கள்.

போர் நடந்ததால் தான் அன்று எதுவுமே பண்ண முடியாது என்றவர்கள், இன்று கொரோனாவால் எல்லாமே சீரழிந்து விட்டது என்று நமக்குப் புதுக் கதைகளைச் சொல்லும் ஒரு காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கொவிட்டுக்கு முன்பே நமது அரச தலைவர்கள் நாட்டை பாதாளத்தை நோக்கி இழுத்துச் சென்றிருந்தார்கள் என்பது தான் யதார்த்தம் என்பது நமக்குத் தெரியும். மரத்தால் விழுந்தவனை மாடு மோதும் கதை கொவிட்.!

அந்தக் கதைகள் அப்படி இருக்க இஞ்சி கொடுத்து மிளகு வாங்கிய கதைக்கு வருவோம். போர் வெற்றியைத் தொடர்ந்து தென்னக அரசியலில் இனி மன்னராட்சிதான் இது. குறைந்தது அரை நூற்றாண்டுகள் வரையாவது நீடிக்கும். ராஜபக்ஷக்களை அசைக்க முடியாது என்ற ஒரு இமேஜ் நாட்டில் ஏற்பட்டிருந்தது. ஆனால் ஒரு தாசப்தங்களாவது இது நீடிக்க வில்லை. உள்ளே இருந்து வந்த ஒரு விவசாயின் மகன் மைத்திரி இந்த ராஜாக்களை அரசியலில் இருந்து விரட்டி அடித்தார்.

ஆனால் அவர் ஒரு சந்தர்ப்பவாதக் கூட்டிலிருந்து அதிகாரத்துக்கு வந்ததால் கூட்டணிக்குள்ளே குத்து வெட்டுக்கள். மைத்திரி -ரணில் பலப் பரீட்சை. முடிவு மைத்திரி மீண்டும் ராஜாக்களின் கூட்டுக்குள் சரணடைந்து மூக்குடைபட்டு நிற்க்கின்றார். அரசியலில் நிரந்தர நண்பனுமில்லை பகைவனுமில்லை என்ற நியாதிப் படி இன்று அங்கு மைத்திரி கருவேப்பிலையாக வலம் வந்து கொண்டிருக்கின்றார்.

மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் என்று வருமாக இருந்தால் மைத்திரி தனது வேடத்தை மாற்றி அரங்கிற்கு வருவார் என்ற நாம் உறுதியாக நம்புகின்றோம். அவர் சாதிப்பாரா இல்லையா என்பதை அந்த நேரத்தில் நாம் பேசுவோம். சமகாலத்தில் தென்னக அரசியலில் நடந்த மற்றுமொரு மாறுதல் நாட்டில் பழங் கட்சிகளாக இது வரை செயல் பட்டு வந்த சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் அடிபட்டுப் போய் இருக்கின்றது. இதற்கு மைத்திரியும் ரணிலும் பொறுப்புக் கூற வேண்டும்.

ரணிலின் ஐதேக. சுனாமியிலும் மைத்திரியின் சு.கட்சி சூறாவளியிலும் சிக்குப்பட்டது போல் இன்று முது குடைந்து அரசியல் செய்து கொண்டிருக்கின்றன. விழிகளை இழந்தவனும் கனவு காண்பது போல இந்த இரு தலைவர்களும் அரசியல் அதிகாரத்துக்கு வர கனவு காண்டு கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு அதற்காக உள்ள உரிமையை நாம் இங்கு விமர்சிக்க விரும்பவில்லை. தெற்கில் மிகப் பெரிய எதிரணியாக இன்று சஜித் தரப்பு இருக்கின்றது. ஆனால் அவரது அரசியல் செயல்பாடுகளில் எமக்குத் தெளிவில்லாத ஒரு நிலை தொடர்ந்து இருந்து வருகின்றது.

சஜித் வைத்திருக்கின்ற அளவு எண்ணிக்கையான நாடாளுமன்ற உறுப்பினர்களை கடும் போக்கு ஜேவிபி.க் காரர்கள் கையில் இருந்திருக்கமாக இருந்தால் நாட்டில் ஆரோக்கியமான அரசியலுக்கு வாய்ப்பு இருந்திருக்கும் என்பது எமது கணக்கு. இது பரந்து விரிந்த ஒரு வனாந்திரத்தில் தெரிகின்ற நிலாக் காட்சி போலத்தான் சஜித் அணியில் இருக்கின்ற அரசியல் பலம். என்னதான் காத்திரமான கருத்துக்களை செஞ் சட்டைக்காரகள் முன் வைத்தாலும் அது ஏட்டுச் சுரக்காய கத்தான் தெற்கில் பார்க்கப் படுகின்றது.

தெற்கில் பிரதான எதிரணிகளின் கதைகள் அப்படி இருக்க அரசியல்வாதிகள் அல்லாத சிலர் இன்று ஹீரோக்களாக பாத்திரம் ஏற்றிருக்கின்றார்கள். அவர்களில் ஒருவர் பௌத்த தேரரான ஆனந்த முறுத் தெட்டுவே தேரர். அடுத்தவர் பேராயர் மல்கம் ரஞ்சித். இவர்கள்தான் இன்று அரசுக்குப் பெரும் தலையிடி கொடுத்துக் கொண்டிருப்பவர்கள்.

இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால் இவர்கள் இருவருமே கடந்த காலங்களில் ராஜபக்ஷக்களை பதவிக்கு அமர்த்துவதில் நேரடியாகவும் மறைமுகமாவும் பெரும் பங்களிப்புச் செய்தவர்கள் என்துதான். நாம் இதற்கு முன்னர் நமது சகோதரப் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகளில் ஆனந்த முறுத் தெட்டுவே தோரர் பற்றி பல மாதங்களுக்கு முன் சொல்லி இருந்தோம். இப்போது அந்தப் பட்டியலில் இரண்டாம் ஆளாக நாம் பேராயரையும் சேர்த்துக் கொள்கின்றோம்.

தேரர் தாம் இஞ்சி கொடுத்து மிளகு வாங்கியதை பகிரங்கமாக ஒத்துக் கொள்கின்றார். பேராயரும் ஈஸ்டர் தாக்குதல் குறித்து வருகின்ற புதிய தகவல்களின் பின்னர் தனது நிலைப்பாட்டை தலை கீழாக மாற்றிக் கொண்டிருக்கின் றார் என்றுதான் சொல்ல வேண்டும். எனவே இருவரும் இன்று ராஜபக்ஷக்களுக்கு எதிராக போர்க் கொடி தூக்கி இருக்கின்றார்கள். இவர்கள் கதையில் ஹீரோவா வில்லன்களா என்பதை நாமும் பொறுத்திருந்து பார்ப்போம். ■

## ஒதுங்கும் அசேல!

நாடறிந்த மனித உரிமை செயல்பாட்டாளர் அசேல சம்பத், தான் தனது செயல்பாடுகளில் இருந்து தற்காலிகமாக ஒதுங்குவதாக அறிவித்திருக்கின்றார். தனக்கு கையடக்கத் தொலைபேசியில் இருந்து வந்த அச்சுறுத்தல் காரணமாம். மிகவும் பாதுகாப்பான இடமாக பார்க்கப்படும் சிறைச்குப் போய் கைதிகளை வெளியே இழுத்து தலையில் துப்பாக்கி வைக்கின்ற ஒரு நாட்டில் வெளியே இருக்கும் தனக்கு எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்பது அவர் அச்சம். மனிதன் வந்த தொலைபேசி இலக்கத்தையும் பகிரங்கப்படுத்தி இருக்கின்றார்.

## முரனான கருத்துகள்!

தமிழ் கைதிகளை மிரட்டிய செய்தி தனக்கு சேறுபூசும் கதை என லோஹான் கூறி இருக்கின்றார். ஆனால் விமல் வீரவங்சவோ, லோஹான் குற்றத்தை ஏற்று பதவி விலகியது பராட்டுக்குறியது என்று கூறுகின்றார். என்ன வேடிக்கை. ஜெனிவாவில் அமர்வு நடக்கும் நேரம், ஆள் இப்படி நடந்ததில் நமக்கு ஒரு சந்தேகம்! ஆள் மேற்கத்திய அல்லது டயஸ்போரா ஏஜெண்டாக இருப்பாரோ என்னவா?

## பிரதமருக்கு ஆப்பு?

ராஜாங்க அமைச்சர் நலக்க கொடக்கஹேவா ஒரு கதையை சொல்லி இருக்கின்றார். கடந்த காலங்களில் மேர்வின் சில்வா ஊடகங்களுக்குள் புகுந்து அட்டகாசம் செய்த போது எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை. தற்போதய ஜனாதிபதி கண்டிப்பானவர் என்பதால் லோஹனுக்கு சூட்டோடு சூடாகப் பதிலாம். ஐயா, அப்படியாக இருந்தால் மஹிந்த தானே அன்று ஜனாதிபதி.! இதனை மறந்து சொன்னீர்களா? அல்லது பிரதமருக்கு ஆப்பு வைத்தீர்களோ?

## முறை கேடான செயல்!

லோஹான் பாவித்திருப்பது லைசன்ஸ் உள்ள துாப்பாக்கி. இப்படி பொலிஸ் அமைச்சர் சரத் வீரசேக்கர கூறி இருந்தார். யாராவது முறைப்பாடு செய்தால் விசாரனையாம். துறைக்குப் பொறுப்பான அமைச்சர் அலி சப்ரி. இதுவரை மனிதன் வாய் திறந்தை நாம் எங்குமே பார்க்கவில்லை. பாராளுமன்ற உறுப்பினரோ அமைச்சரோ மு.ப.5.30 முதல் பி.ப.5.30 வரை மட்டுமே உள்ளே போகலாம். ஆனால் விதி இங்கு மீறப்பட்டுள்ளது.

## மீண்டும் தாக்குதலாம்!

மீண்டும் நாட்டில் ஈஸ்டர் பாணியில் தாக்குதல்கள் நடக்க இருப்பதாக ஞானசாரத் தேரர் சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார். அவருக்கு இந்தத் தகவலை கொடுத்தவர் பற்றி உடனடியாக விசாரணை செய்ய வேண்டியது அரசின் கடமை. இது விடயமாக ஞானம் விசாரிக்கப்பட்டாரா என்று தெரிய வில்லை. இதற்கு முன்னர் ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரியை கண்டறிய வேண்டிதில்லை. அவர்கள் மேற்கத்தியத்தை சேர்ந்தவர் என்றும் தேரர் பேசி இருந்தார்.

# மனித உரிமைகள் பேரவை பார்வையில்



# தடம் மாறும் ஈழ தமிழர் விவகாரம்!

**பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம்**

செப்ரெம்பர் முதல் வாரங்களில் தமிழ் அரசியல் பரப்பில் சூடான விவாதப்பொருளாக ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் அமைந்திருந்தது. இதில், ஆணையாளரின் வாய்மூல அறிக்கையில் தமிழ் அரசியல் தரப்பால் பகிரப்பட வேண்டிய விடயங்கள் அதிகம் காணப்பட்டன. தமிழ்த் தேசியக் கட்சிகள் சிதறுண்டு தங்கள் கடிதங்களையும் அனுப்பின என்று செய்திகள் வெளிவந்தன. ஆனால், தமிழ் மக்கள், அதிக எதிர்பார்ப்புக்களை 48ஆவது கூட்டத்தொடரில் கொண்டிருந்தனர். செப்ரெம்பர் 13ஆம் திகதி பேரவையின் உயர் ஸ்தானிகர் மிச்செல் பச்லெட் இலங்கை விவகரம் தொடர்பிலான தனது வாய்மூல அறிக்கையை சமர்ப்பித்திருந்தார். இக்கட்டுரை அவரின் வாய்மூல அறிக்கை வெளிப்படுத்தும் உள்ளார்ந்த அரசியலை தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

மிச்செல் பச்லெட்டின் இலங்கை விவகாரம் தொடர்பிலான வாய்மூல அறிக்கை வெளியானபோது, இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்கடி வழங்கியுள்ளதாகவும், ஈழத்தமிழர்களுக்கு நலனான அறிக்கை அமைந்துள்ளதெனவும் தமிழ் ஊடகப்பரப்பில் அதிகம் பேசப்பட்டது. இதற்கு மறுவளமாக ஈழத்தமிழர்களின் நலன் புறந்தள்ளப்பட்டு இலங்கை ஒற்றையாட்சி கட்டமைப்பை வலுப்படுத்தும் அறிக்கையாக அமைந்துள்ளதெனவும் வாதங்கள் வெளிவருகின்றன. இங்கு வழமைபோலவே அரசியலின் உள்நோக்கங்களை தேடாது, மிச்செல் பச்லெட்டின் அறிக்கையை பொதுவெளியில் நம்பிக்கையூட்டும் விதத்தில் உரையாடப்படுகிறது. ஆனால், மிச்செல் பச்லெட்டின் அறிக்கையின் உள்நோக்கங்களை தேடுதல் அவசியமாகும்.

முதலாவது, மனித உரிமைகள் பேரவை இலங்கை விவகாரம் தொடர்பில் கடந்த காலங்களில் அணுகியிருந்த விடயங்களிலிருந்து மாறுபட்டு சென்றுள்ளமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அதாவது, கடந்த காலங்களில் பேரவை இலங்கை விவகாரத்தில் தனித்து வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பிரச்னைகளையே முதன்மைப்படுத்தி அணுகியிருந்தது. ஆனால், தற்போது தென்னிலங்கையில் காணப்படும் இராணுவ ஆட்சியையும் அதன் பிரசன்னத்தையும் - அதனால் இலங்கை தீவுக்கு முழுமையாக ஏற்படக்கூடிய நெருக்கடி பற்றிய விமர்சனங்களையே வாய்மூல அறிக்கையில் மிச்செல் பச்லெட் முதன்மைப்படுத்தி உள்ளார்.

இலங்கையில் கடந்த போர்க் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்களுக்கு தீர்வாக நிலைமாறுகால நீதி வழங்குவதாகக் கூறிக் கொண்டு பேரவையூடாக தீர்மானங்களை மேற்கு நாடுகள் நிறைவேற்றியிருந்தன. ஆனால், 48ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் நல்லாட்சியை உறுதிப்படுத்தும் பொறிமுறைகளையே அதிகம் பரிந்துரைத்ததுடன் முன்மொழிவுகளை செய்துள்ளனர். குறிப்பாக, இலங்கையின் சிவில் சமூகங்களின் செயல்பாட்டுக்கும் பாதுகாப்புக்கும் முன்னுரிமை அளிப்பதையே பச்லெட்டின் வாய்மூல அறிக்கை முதன்மைப்படுத்தியுள்ளது. இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் ஜனாதிபதி, சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்து உரையாடிய விடயத்தை முதன்மைப்படுத்தியுள்ளார். அத்தகைய விடயங்களை ஆர்வத்துடன் கவனிக்கிறார் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். அதாவது சிவில் சமூக அமைப்புக்கள் பற்றிய உரையாடல்களை ஜெனிவா அரங்கின் 48ஆவது கூட்டத்தொடர் இலங்கை விவகாரம் பொறுத்து அதிக கரிசனை கொள்ள ஆரம்பித்துள்ளது.

இரண்டாவது, இராணுவமயமாக்கலால் ஏற்படும் சிவில் சமூக செயல்பாடுகளின் பாதிப்புக்கள், சமூக பொருளாதார நெருக்கடி பற்றிய சவால்களுக்கு மத்தியில் மேலும் சிக்கலடைந்திருப்பதை தாம் அவதானிப்பதாக பச்லெட் கூறுகின்றார். துரதிர்ஷ்டவசமாக, மனித உரிமைகள் பாதுகாவலர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மீதான கண்காணிப்பு, மிரட்டல் மற்றும் நீதித்துறை துன்புறுத்தல் ஆகியவை தொடர்வது மட்டுமல்லாமல், அரசாங்கக் கொள்கைகளை விமர்சிக்கும் மாணவர்கள், கல்வியாளர்கள், மருத்துவ வல்லுநர்கள் மற்றும் மதத்தலைவர்களின் பரந்த அளவிலான செயல்பாடுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன என்றும் அமைதியான போராட்டங்களை மற்றும் நினைவுகூரல்களை அதிகப்படியான சக்தியைப் பயன்படுத்தி கட்டுப்படுத்தப்படுகின்றனர். தனிமைப்படுத்தப்பட்ட மையங்களில் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கைது செய்து தண்டனை வழங்குவதை தாம் கவனிக்கிறார் என்றும் வாய்மொழி மூல அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மூன்றாவது, சிவில் சமூகக் குழுக்கள் மீதான புதிய விதிமுறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன எனவும், அவை அடிப்படை சுதந்திரங்கள் மீதான கட்டுப்பாடுகளை கடுமையாக்குகின்றன என்றும் அதனால் மக்கள் மத்தியில் அச்சமேற்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்ட பச்லெட், விரிவான விவாதங்களை அனுமதிக்க வேண்டும் எனவும் அதனால் வரைபை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

நான்கு, ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் கருத்தை தாம் வரவேற்றுள்ளாரென இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில், சிவில் சமூக செயல்பாடுகளை வலுப்படுத்த வேண்டும் எனும் உரையாடலை மையப்படுத்தியதாகவே ஆணையாளரின் கருத்துக்கள் அமைந்துள்ளன. அதனால், 48ஆவது கூட்டத்தொடரில் வெளியிடப்பட்ட கருத்துக்களை பிரிட்டன் ஏற்றுக்கொள்கிறது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் சிறுபான்மையின சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அழுத்தங்களை பிரிட்டன் தொடர்ச்சியாக வழங்கும் என்று இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் தனது ருவிற்றர் தளத்தில் குறிப்பிட்டுள்ளார். இது இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை கடந்த காலங்களில் முன்மொழிந்த பிரிட்டனின் போக்கில் பாரிய மாற்றத்தை அடையாளப்படுத்துகிறது. இலங்கை தமிழரின் இனப்பிரச்னை சிவில் சமூக பிரச்சினை யாக மாறியுள்ளதை காட்டுகின்றது.

மேற்கு நாடுகளைப் பொறுத்தவரை சிவில் சமூகங்களின் உருவாக்கமும் அவற்றின் பணிகளும் கீழைத்தேச நாடுகளில் மேற்கின் அரசியல் அபிலாசைகளை நிறைவுசெய்யக்கூடியவை எனக் கருதுகிறது. சிவில் சமூகங்களின் கட்டமைப்புக்கு ஊடாக கீழைத்தேச நாடுகளின் அரசியல், பொருளாதார, சமூக இருப்பை நிர்ணயிக்க முடியுமென்ற வாதங்களும் அவர்களிடம் மேலோங்கி உள்ளன. அரசியல் சிந்தனையாளரான கிராம்சி குறிப்பிடுவது போல் சமூக உறவுகளெனும் மேல்கட்டுமான பகுதி தான் சிவில் சமூகம். அத்தகைய சிவில் சமூகம் உற்பத்தியுடன் இணைந்த உறவுகளையும், ஒடுக்குமுறை உறவுகளையும், தனியார் வகை உறவுகளையும் மையப்படுத்தியதென வாதிடுகிறார். இத்தகைய மையப்படுத்தலே இலங்கையின் 2015 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் கட்டமைப்பாகும். அதனையே மீளக்கட்டியெழுப்ப ஐ. நா. மனித உரிமைகள் பேரவையூடாக மேற்குலகம் முயல்கிறதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

48ஆவது கூட்டத்தொடரின் நடப்பு சர்வதேச அரசியலில் சிவில் சமூகங்களுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை அதிகரித்துள்ளமை புலனாகிறது. குறிப்பாக மேற்கு நாடுகள் நீண்டகாலமாக சமூக நிறுவனங்களூடாக உலக அரசுகளை கையாண்டு வந்துள்ளது. அவ்வகை ஒரு நிறுவனமே ஐ. நா. மனித உரிமைகள் பேரவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பாணியிலேயே இலங்கையிலும் சிவில் அமைப்புக்களூடாக அரசியலை கையாளும் பொறிமுறைக்கான தளத்தை சர்வதேச சக்திகள் ஊக்குவிக்க எத்தனிக்கின்றன. இதனையே ஜெனிவா களமும் உறுதி செய்கின்றது. எனவே சர்வதேச நாடுகளும் அவற்றின் நிறுவனங்களும் இலங்கை மீதான கரிசனையை தமிழர்களின் அரசியலுக்கு அப்பால் தமது நலன்களுக்கு ஏற்ப கையாள முனைகின்றது. ஆனால், வெளித்தோற்றத்தில் தமிழர்களின் இனப்பிரச்னையே இலங்கை மீதான ஆதிக்கத்தில் பிரயோகிக்க காரணியாக உள்ளது. அத்தகைய தமிழர்களின் பிரச்னையைக் காரணமாக கொண்டு இலங்கை அரசியலின் நகர்வுகளை மேற்கு நாடுகளுக்கு ஏற்ற வகையில் பிரயோகப்படுத்த ஐ. நா. மனித உரிமைகள் பேரவை முகவராக விளங்குகின்றது.

கடந்த ஒரு தசாப்தங்களாக இவ்வகை அரசியலையே ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை நகர்த்தி வருகிறது. அத்தகைய பொறிமுறையை ஏற்றுக் கொண்ட தமிழர் அரசியல் தரப்புக்கள் தமது கட்சி அரசியல் நலனுக்காகவும் தனிப்பட்ட அரசியல் இலாபங்களுக்காவும் அதனை அம்பலப்படுத்தாது இசைந்து பயணிக்கின்ற தன்மையை பின்பற்றி வருகின்றது. இத்தகைய துயரமே ஜெனிவா களத்தினூடாக ஈழத்தமிழர்கள் இனிவரும் காலத்திலும் அனுபவிக்க வேண்டிய துயரம் ஏற்படும்.

தமிழர் அரசியல் தரப்பு ஜெனிவா களத்தை சரியான முறையில் கையாள்வதற்கான திட்டமிடலையோ உபாயங்களையோ வகுக்காது செயல்படுமாயின், எதிர்காலத்தில் முள்ளிவாய்க்காலின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட ஐ. நா. மனித உரிமைகள் கூட்டத்தொடர்கள் முற்றாகவே இலங்கைக்கான அரசியலை முதன்மைப்படுத்திக்கொண்டு தமது அரசியல் நலன்களை நிறைவேற்றும். போர்க்குற்றம், மனித உரிமை, மனிதாபிமானச்சட்டம் போன்றவற்றிற்காக ஆரம்பிக்கப்பட்ட இலங்கை விவகாரத்துக்கான ஜெனிவா களம் சிவில் சமுக பிரச்னைகளை 2021ஆம் ஆண்டு முதன்மைப்படுத்தியுள்ளது. இவற்றிற்கு பின்னால் இலங்கை ஆட்சியாளர்களின் இராஜ தந்திர உத்திகளும் மேற்கு நாடுகளின் உபாயங்களும் எவ்வளவு முக்கியமான தாக அமைந்திருந்ததோ அந்தளவிற்கு இந்த விடயம் பலவீனமடைவதில் ஈழத்தமிழர் அரசியல் தலைமைகளும் காரணமானவர்களே.

**-நன்றி - அருவி**

# பெருமை அளிக்கும் பொருநை நாகரிகம்

**வெ.நீலகண்டன்**

தமிழர்களுக்கு இது பெருமிதமான தருணம். வைகை நதிக்கரையில் இருக்கும் கீழடி, 2,580 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் வரலாற்றை மீட்டுத்தந்தது. இப்போது, தாமிரபரணி நதிக்கரையில் இருக்கும் சிவகளை, 3,155 ஆண்டுகளுக்குத் தமிழர் வரலாற்றைப் பின்னோக்கி நகர்த்தியிருக்கிறது.

சங்க இலக்கியங்களில் ‘பொருநை நதி’ என்று குறிப்பிடப்பட்டுள்ள தாமிரபரணி நதிக்கரையில் உள்ள ஆதிச்சநல்லூர், கொற்கை, சிவகளை போன்ற பகுதிகளில் தமிழகத் தொல்லியல் துறை அகழாய்வு செய்துவருகிறது. பொதிகை மலையில் உருவாகி அம்பாசமுத்திரம், சேரன்மாதேவி, திருநெல்வேலி, ஆதிச்சநல்லூர் வழியாகப் பழைய காயலில் கடலில் கலக்கிறது பொருநை. ஆதிச்சநல்லூரில் 1876 முதல் ஜெர்மானிய டாக்டர் ஜோகர் தொடங்கி பிரிட்டிஷ் ஆய்வாளர் அலெக்ஸாண்ட்ரியா வரை பலரும் ஆய்வு செய்து தாழிகள், எலும்புகள், வாள், கத்தி போன்ற இரும்பாலான ஆயுதங்கள், வெண்கல உருவங்கள், இறந்தோருக்குக் கட்டப்படும் தங்க நெற்றிப் பட்டம் எனப் பல பழம் பொருள்களை மீட்டுள்ளார்கள். 2004 இல் மத்தியத் தொல்லியல் துறை 600 சதுர அடி பரப்பில் ஆய்வுசெய்து 160 ஈமத் தாழிகளை அகழ்ந் தெடுத்தது. அப்போது கிடைத்த கரிமப் பொருள்களைப் பகுப்பாய்வு செய்தபோது அவை 2,850 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று தெரிய வந்தது. ‘மிகப் பெரும் பரப்பில் ஈமக்காடு இருக்குமிடத்தில் மக்கள் வாழிடமும் இருக்கக்கூடும்... அகழாய்வை விரிவு படுத்த வேண்டும்’ என்று வரலாற்றார் வலர்கள் விடுத்த கோரிக்கையை நிராகரித்துவிட்டது மத்தியத் தொல்லியல்துறை. 2019 இல் தமிழகத் தொல்லியல்துறை களத்தில் இறங்கியது. ஈமக் காட்டை ஒட்டி வாழ்விடப்பகுதி என்று கருதப்படும் இடத்தில் மிகப்பெரிய கண்மாய் ஒன்று வெட்டப்பட்டுள்ளது. அந்தக் கண்மாய்க்கு வடகரையில் செய்யப்பட்ட அகழாய்வில், குறியீடுகள் கொண்ட 500க்கும் மேற்பட்ட பானையோடுகள் கிடைத்தன.

“ஆதிச்சநல்லூர் வெறும் ஈமக்காடு என்ற கருத்தைத் தற் போதைய அகழாய்வு உடைத்திருக் கிறது. 2,850 ஆண்டுகளுக்கு முற்பட்ட மக்களின் வாழ்விடம் தற்போதைய அகழ்வாராய்ச்சியில் கண்டறியப்பட்டுள்ளது. முக்கியமாக, 21 சிறுசிறு குழாய்கள் இணைக்கப்பட்ட நீண்ட சுடுமண் குழாய் கிடைத்துள்ளது. இது குடியிருப்பின் வடிகாலுக்காகப் பயன படுத்தப்பட்டி ருக்கலாம். இடைக்காலத்தில் மிகப்பெரிய கண்மாய் வெட்டப்பட்டுவிட்டதால் பல ஆதாரங்கள் அழிந்திருக்கலாம். மிகச்சிறிய பகுதியிலேயே தற்போது அகழ்வு செய்திருக்கிறோம். மற்ற பகுதிகளில் இரண்டரை மீட்டர் தோண்டினாலே தண்ணீர் சுரந்துவிடுகிறது. ஆதிச்சநல்லூரில் கிடைக்கும் தாழிகளுக்குக் கீழே நிலத்தில் கல் பிளேடுகள் போன்ற நுண்கற்காலக் கருவிகளும் கிடைக்கின்றன. அவை 5,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாக இருக்கலாம். காலம் காலமாக அங்கு மக்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கான ஆதாரங்களாக அவற்றைக் கருதலாம்” என்கிறார் தமிழகத் தொல்லியல்துறை ஆணையர் டாக்டர் இரா. சிவானந்தம்.

பொருநைக் கரையிலிருக்கும் கொற்கையில் முத்து, சங்குகளைக் கொண்டு ஆபரணங்கள் செய்யும் தொழிற்சாலைகள் இருந்ததாக வட இந்திய நூல்களில் செய்திகள் இடம்பெற்றுள்ளன. அவற்றை மெய்ப்பிக்கும் வகையில் தற்போது இப்பகுதியில் செய்யப்பட்ட அகழாய்வில் பாதி அறுத்த, முழுமையான சங்குகள், சங்கு வளையல்கள், நாணயங்கள், பானைக்குறியீடுகள், உடைந்த சங்கு வளையல்கள், சங்கு சுடும் உலை, இரும்புக் கசடுகள் போன்றவை கிடைத்துள்ளன. இவை 2,900 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

“தற்போதைய கொற்கை அகழாய்வில் இதுவரை இல்லாத சில தரவுகள் கிடைத்துள்ளன. 29 செங்கல் அடுக்குகள் கொண்ட 4 முனை வடிவிலான 2.35 மீட்டர் உயரமுள்ள பெரிய கட்டுமானம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதற்குக் கீழே ஒன்றேகால் அடி வாய்ப் பகுதியும் 1 மீட்டர் உயரமும் கொண்ட பெரிய பானை ஒன்று இருந்தது. அதற்குள் கறுப்புப்பூச்சு பெற்ற பானை ஓடு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த ஓடுகள் இந்தப்பகுதிகளில் தயாரிக்கப்படுவதில்லை. கங்கைச்சமவெளி அகழ்வுகளில் மட்டுமே கிடைத்துள்ளன. கொற்கைக்கு அணிகலன்கள் வாங்குவதற்காக வந்த வடஇந்திய வணிகர்கள் மூலம் இந்தப் பானை ஓடு இங்கே வந்திருக்கலாம். 2,800 ஆண்டுகளுக்கு முன்பு, கொற்கை துறைமுகமாக, தலைநகரமாக, வெளிநாட்டு வணிகர்களை ஈர்த்த தொழில் மையமாக, தொழிற்சாலை நகரமாக இருந்துள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது” என்கிறார் டாக்டர் இரா.சிவானந்தம்.

கொற்கைக்கும் ஆதிச்சநல்லூருக்கும் நடுவில் இருக்கிறது சிவகளை. இங்கு 500 ஏக்கர் பரப்பில் ஈமக்காட்டு மேடு அடையாளம் காணப்பட்டுள்ளது. இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வில் ஈமத்தாழிகள், அவற்றின் உள்ளே தட்டுகள், குவளைகள், கிண்ணங்கள், கறுப்பு சிவப்பு வண்ணப் பானைகள், வெண்புள்ளிகள் இட்ட பானையோடுகள் கிடைத்துள்ளன.

“சிவகளை அகழாய்வில் நிறைய கலைப்பொருள்கள் கிடைத்துள்ளன. இப்பகுதி பாறைகளால் நிறைந்திருக்கிறது. இரண்டு பாறைகளுக்கு நடுவில் தோண்டி பெரிய தாழிகளை வைத்து உள்ளே இறந்தவரையும் அவருக்குப் பிடித்த பொருள்களையும் இரும்புப் பொருள்களையும் தனித்தனிக் கலன்களில் வைத்து மூடியிருக்கிறார்கள். ஒவ்வொரு பெரிய தாழியிலும் 35க்கும் மேற்பட்ட சிறு சிறு கலன்கள் கிடைக்கின்றன. அப்படியொரு தாழியில் 13ஆவது படையல் பானையில் உமி நீங்கிய நெல்மணிகள் கிடைத்துள்ளன. அவற்றை அமெரிக்கா, மியாமியில் உள்ள பீட்டா அனலாட்டிக்கல் லேப்புக்கு அனுப்பி ஆய்வு செய்தோம். அவை 3,155 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று உறுதி செய்துள்ளார்கள். இதுவரையிலான ஆய்வுகளில் கொடுமணல் 2,300 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருந்தது. அழகன்குளம் 2,400 ஆண்டுகளுக்கும், தாண்டிக்குடி, பொருந்தல் 2,500 ஆண்டுகளுக்கும் முற்பட்டதாகவும் ஆய்வுகளில் நிரூபிக்கப்பட்டுள்ளன. இப்போது சிவகளை அகழ்வு 3,155 ஆண்டுகளுக்கு முன்பாகத் தமிழக வரலாற்றை எடுத்துச் சென்றிருக்கிறது…” என்கிறார் டாக்டர் இரா.சிவானந்தம்.

> **“சிவகளை அகழாய்வில் நிறைய கலைப் பொருள்கள் கிடைத்துள்ளன. இப்பகுதி பாறைகளால் நிறைந்திருக்கிறது. இரண்டு பாறைகளுக்கு நடுவில் தோண்டி பெரிய தாழிகளை வைத்து உள்ளே இறந்த வரையும் அவருக்குப் பிடித்த பொருள்களையும் இரும்புப் பொருள்களையும் தனித்தனிக் கலன்களில் வைத்து மூடியிருக் கிறார்கள்.**

1903இல் ஆதிச்சநல்லூரில் ஆய்வு செய்த அலெக்ஸான்ட்ரியா, பொருநை நதிக்கரையில் 39 இடங்களை முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகக் குறிப்பிட்டார். தற்போது தமிழகத் தொல்லியல் துறை 163 ஊர்களை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஊர்களாக அடையாளம் கண்டுள்ளது. அங்கெல்லாம் படிப்படியாக ஆய்வு செய்யப்படலாம். மட்டுமன்றி, கேரளாவில் உள்ள பட்டணம், ஆந்திராவில் உள்ள வேங்கி, கர்நாடகாவில் உள்ள தலைக்காடு, ஒடிசாவில் உள்ள பாலூர் மற்றும் தொல்தமிழர்களோடு தொடர்புடைய வெளிநாடுகளிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார். இந்த ஆய்வுகள் இன்னும் பல வரலாற்று முடிச்சுகளை அவிழ்க்கலாம்,

4,500 ஆண்டுகளுக்கு முன்பு, பாகிஸ்தானின் நடுப்பகுதி தொடங்கி ராஜஸ்தான், குஜராத், பஞ்சாப் வரை 5 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பிலான சிந்து சமவெளியில் வாழ்ந்த மக்கள் மகாராஷ்டிரா, கர்நாடகா வழியாக தமிழ் நிலப் பரப்புக்கு இடம் பெயர்ந்தார்களா, உத்தரப் பிரதேசம், பீகார் வழியாக கங்கைச் சமவெளிக்கு இடம்பெயர்ந்தார்களா என்பது இதுவரை விடைகாண முடியாத கேள்வியாக இருந்தது. தென்னிந்தியப் பகுதிகளில் வளர்ச்சி பெற்ற நாகரிகங்கள் இல்லை, கங்கைச் சமவெளி நாகரிகமே பழைமையானது என்று வடக்கு வரலாற்றாசிரியர்கள் தொடர்ந்து எழுதி வந்தார்கள். வைகை நதி நாகரிகமும் பொருநை நதி நாகரிகமும் அந்தக் கற்பிதத்தை உடைக்கின்றன. சிந்து சமவெளியில் கிடைத்ததைப் போன்ற உருவ எழுத்துகள், குறியீடுகள், தமிழ் எழுத்துகள், பகடைக்காய்கள், திமில் உள்ள காளைகளின் எலும்புகள், கறுப்பு சிவப்புப் பானையோடுகள் வைகை, பொருநை நதிக்கரைகளிலும் கிடைத்துள்ளன.

இருள் விலகுகிறது. வரலாற்றின் திசையும் முகமும் மாறப்போகின்றன! ■



# பயணங்கள்!

மாலி

2



## ‘ஹலோ என்றால் கிலோவில் வருகிறது காசு!’

பல பெரிய கொட்டகைப் பந்தர்கள். சீருடை, ஆயுதங்களுடன் சில விடுதலைப் புலி வீரர்கள் நின்றார்கள். ‘எங்கு போவது...?’ என்ற யோசனையுடன் நின்றபோது, ‘வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கும், மதகுருமாருக்கும்’ என்றொரு வழிகாட்டல் தெரிந்தது. அதைத் தொடர்ந்து சென்று ஒரு பந்தரை அடைந்தபோது, ஓரிருவர்தான் அங்கு இருந்தார்கள். இரண்டு மேசைகள். இரண்டு இளம் பெண்கள், நீல நிற சீருடையுடன் அமர்ந்திருந்தார்கள். ஒருவர் அழைத்து அமரச்செய்து, எங்கிருந்து வருகிறேன் என்ற விபரங்களைக் கேட்டுக்கொண்டே, ‘பிளாஸ்க்’கிலிருந்து தேநீர் ஊற்றித் தந்தார். பின்னர் மற்றைய பெண் அழைத்து, எனது விபரங்களைப் பதிவுசெய்தார். லண்டனில் எனது முகவரி, தொழில், வருகையின் காரணம், தங்கப்போகும் முகவரி, காலம் போன்றவை அவை. குடும்பத்தில் எவராவது போராளிகளாக, மாவீரர்களாக இருக்கிறார்களா என்றும் கேட்டார்கள்.

‘பிரிட்டிஷ் பொலிசாரைப்போல’ என்று சொல்லலாம். மிக கனிவாகவே பேசினார்கள். திரும்பி வருவதற்கான ‘பாஸ்’ எடுக்கும் நடைமுறைகளையும் கூறி, ஒரு கடிதம் தந்தார்கள். அத்துடன், அவர் நிரப்பிய படிவத்தை நீட்டி, “இதில் தமிழில் கையெழுத்து வையுங்கோ” என்றார். இது மாத்திரம், தொனி ஒரு மாதிரியாக இருந்தது. “நான் லண்டனிலும் தமிழிலேயே கையொப்பமிடுகிறேன்” - என்று கூறி, கையொப்பத்தையிட்டுக் கொடுத்தேன்.

வாங்கிப் பார்த்தவர், “உங்கள் தமிழும் ஆங்கிலம் மாதிரித்தான் இருக்கிறது” - என்றார். ‘மீசையில் மண்படவில்லை’ என்பதைத்தான் அப்படிச் சொல்கிறார் என்பது புரிந்தது.

மற்றைய கொட்டகைகளில் மிகுந்த கூட்டம். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தனித்தனி சோதனையிடங்கள். புலிகளும் பொருள்களைச் சோதனையிட்டே அநுமதிக்கிறார்கள். (எமக்கு அச் சோதனை இருக்கவில்லை.)

அடுத்து என்ன? ஒவ்வோரிடத்திலும் யாழ்ப்பாணப் பக்கமாக முன்னேற வேண்டியதுதானே. கொட்டகையிலிருந்து வெளிப்பட்டு வந்தேன். நாற்காலி ஒன்றில் ஒரு ‘வாண்டு’ கைகளில் ஏதோ கடதாசிகளைவைத்து விளையாடுவதுபோல் இருந்தான். அவன் ஏதோ இருக்கிறான் என்று, அவனைத் தாண்ட முற்பட்டபோது, “ஐயா, பாஸ்” என்றான்.

“பாஸா, அப்படியொன்றும் தரவில்லையே” என்றேன்.

“நீங்கள் வெளிநாட்டிலிருந்து வருகிறீர்களா?” என்றான். “ஆம்” என்றேன்.

அப்படியானால், ‘இப்படிச் சென்று, அங்குள்ள பஸ்ஸில் ஏறுங்கோ’ என்று வழிகாட்டினான் அந்த ‘வாண்டு’.

மினி பஸ் ஒன்றில் ஒவ்வொருவராக ஏற்றினார்கள். நெருக்கமாகவே இருந்தாலும், எவரும் நிற்கவில்லை. பஸ் புறப்பட ஆயத்தமானபோது, “ஆண்கள் இறங்கி தள்ளுங்கோ” - என்றார்கள். இலேசாக தள்ளியதும். பஸ் ஸ்ராட் ஆகிக்கொண்டது.

சற்று தூரம் செல்ல, வீதியோரமாக ஒரு பெரிய வளவினுள் பஸ் சென்றது. ‘கால், முகம் கழுவி, சாப்பிட்டு வரலாம்’ என்றார்கள். ஆண்கள், பெண்கள் தங்குவதற்கு தனித்தனியாக அமைக்கப்பட்ட, உறுதியான பல கொட்டகைகள். படுப்பதற்கு பாய், மலசல கூடங்கள், கால் முகம் கழுவ தண்ணீர் வசதிகள் ஒழுங்காகவும், சுத்தமாகவும், வசதியாகவும் இருந்தன. புகையிரத தண்டவாளங்கள் பலவற்றின் துணையோடு நிலம் வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த வசதி வாய்ப்புகளுக்காக மேலதிகமாக 30 ரூபா பஸ் கட்டணத்துடனேயே சேர்த்து அறவிடுகிறார்கள். சாப்பாடு புறம்பானது.

மீண்டும் தள்ள, பஸ் புறப்பட்டது. கண்டி வீதியில்தான் பஸ் சென்றுகொண்டிருந்தது. ஆனாலும், காற்றடிக்கும் கடலில் படகில் செல்லும் அநுபவம்தான் அது. முழு தூரமும் சாலையின் நிலைமை அப்படி. அது, பலருக்கு தாலாட்டாகவும் இருந்தது.

முறிகண்டி கோவில். அப்படியேதான். ஆனால், ஆரவாரம் தணிந்திருக்கிறது. முறிகண்டி தவிர, மற்றும் ஓரீரிடங்களிலும் பிரசாதம், உண்டியலுக்காக பஸ் நின்றது. மாங்குளம் அநேகமாக கைவிடப்பட்ட நிலையிலேயே தெரிந்தது. கிளிநொச்சியில் உயிரோட்டம் இருக்கிறது.

பரந்தனில் பஸ் கண்டி வீதியிலிருந்து மேற்கே திரும்பியது. அந்தப் பாதையில் முன்னர் ஒருபோதும் பயணம் செய்திருக்கவில்லை. வயல் காட்டுப் பகுதியில் சிறிது தூரம் சென்றபோது, வயல் காடு வெள்ளக் காடாய்த் தெரிந்தது. ஓரிடத்தில் - அது குஞ்சுப் பரந்தன் என்று சொன்னார்கள், வீதியை மேவி வெள்ளம் இரண்டு அடி உயரத்துக்கு மேலாக, நீண்ட தூரத்துக்கு பாய்ந்துகொண்டிருந்தது. பஸ் வண்டி ஒன்று அங்கு சற்று குடைசாய்ந்து நின்றது. ஒரு ‘ட்ராக்ரர்’ அதனை இழுத்து மீட்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது.

‘நமக்கும் அதே கதிதானோ் பஸ் இந்த வெள்ளத்தைத் தாண்டி அப்பாலே செல்லுமோ’ என்று மனதில் அங்கலாய்ப்பு பலமாகவே ஏற்பட்டுக்கொண்டது. ஏற்கனவே சீரற்ற அப் பாதை, தெரியவே இல்லை. இயலுமான எல்லோரையும் இறங்கி நடக்கும்படியும், முடிந்தவரை முயற்சித்துப் பார்க்கலாம் என்றும் சாரதி கூறினார்.

இறங்கினால், முழங்காலுக்கு மேலாக வெள்ளம். நீர் ஒருபுறம் வேகமாக இழுத்தது. அதனைச் சமாளித்து, அந்தத் தார் ரோட்டின் குழிகளிடையே எப்படியோ நடந்து, ‘அக்கரையை’ அடைந்தாயிற்று. ஆனால், பஸ்...

மழையும் தொடங்கியது. நல்ல வேளையாக அவ்விடத்தில் வெள்ளத்தின் நடுவே ஒரு கொட்டில் இருந்தது. அதில் ஒதுங்கி நின்றபோது, பஸ் மெல்லமெல்ல நகர்வது தெரிந்தது. முன்னைய பஸ் இன்னமும் மீட்கப்படவில்லை. ஆனால், எம்முடைய பஸ் வெள்ளத்தைத் தாண்டி வந்துவிட்டது.

இனியும் ‘கண்டங்கள்’ வந்து சேருமோ? மாலை 5 மணிவரைதான் படகு சேவை என்று பேசுகிறார்கள். அதற்கு முன்னதாக, நல்லூர் என்ற அந்த படகுத் துறைக்கு போய்ச் சேர்ந்துவிடலாமா?

நாலே முக்கால் மணியளவில் பஸ் நல்லூரரை அடைந்துவிட்டது. நள்ளிரவாவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தை அடைந்துவிடலாம் என்று எண்ணி இறங்கியபோது, ‘படகுகள் ஓடவில்லை’ என்றார்கள்.

என்ன, உண்மையான தகவலா அது? அங்கு நின்றவர்கள்தாம் பேசிக்கொள்கிறார்கள். “முதல் நாளும் ஓடவில்லை. காலையில் மாத்திரம் சில படகுகள் ஓடின் அப்புறம் இல்லை.”

“நாளைக்கு ஓடுமாம் காலை ஏழு மணிக்கு பாஸ் கொடுப்பார்களாம்”.

பஸ்ஸிலிருந்து இறங்குமுன்னர் எல்லோரது பாஸ்களையும் பஸ் கொண்டக்ரர் வாங்கினார். என்னிடம் அப்படியொன்று இருக்கவில்லை. வெளிநாட்டிலிருந்து வருவதாக கூறினேன். தனக்கு இதுபற்றி தெரியவில்லை என்றார் கொண்டக்ரர். அந்த பாஸ் அனைத்தையும் அவர் அங்குள்ள இயக்க அலுவலகத்தில் சேர்ப்பிப்பாராம். பஸ்கள் வந்தடைந்த ஒழுங்கின்படி அந்தந்த பஸ்ஸுக்குரியவர்கள் அழைக்கப்பட்டு, படகுக்கு அநுமதிக்கப்படுவார்கள் என்று என்னுடன் பஸ்ஸில் வந்த, எனக்கு முன்னர் அறிமுகமான ஒருவர் கூறினார். அப்படியானால் நான்...? அந்த பஸ்ஸில் வந்தவர்கள் அழைக்கப்படும்வேளை, விடயத்தை அவர்களிடம் கூறலாம் என்றார் அவர்.

சரி, படகு இன்றைக்கு இல்லைதானா?

“மெழுகுசீலை 20 ரூபா. கடல் தண்ணீரில் நனையாமல் பெட்டிகளைக் கட்டிக்கொள்ளலாம் இரவு விரித்துப் படுத்துக்கொள்ளலாம்.” - நடந்து திரிந்து, விற்றுக்கொண்டிருந்தார்கள். என்னிடமும் வந்து ஒருவர் கேட்டார். முன்னையது சரி. ‘இரவு படுத்துத் தூங்கலாம்’ என்ற பின்னையதை, ஏன் அபசகுனம் மாதிரி கூறவேண்டும் என்பதுபோலிருந்தது.

நமக்கென்ன தெரியும் அவர்கள் எவ்வளவு அநுபவசாலிகள். எதற்கும் ஒன்றை வாங்கலாம் என்று, வாங்கினேன். பெட்டியை அந்த மெழுகுசீலைப் பையுள் வைத்து பையின் வாயைக் கட்டவேண்டுமானால், அதற்கும் ஒரு சிறுதுண்டு கயிறு விற்பனைக்கிருந்தது.

திட்டமான நிலைமை என்ன? படகு ஓடுமா, ஓடாதா? எப்போது ஓடும்? இந்தத் தகவல் எதனையும் அங்கு பெறக்கூடியதாக இருக்கவில்லை. இவற்றை அறியக்கூடியதாக எவரையும் அங்கு காணமுடியவில்லை.

‘நாளை காலை ஏழு மணிக்கு பாஸ் கொடுப்பார்களாம்’. ‘காலை ஏழு மணியிலிருந்து 11 மணிவரை மட்டும்தான் கொடுப்பார்களாம்.’ - ஒவ்வொருவரும் பேசிக்கொண்டார்கள்.

**(16 ஆம் பக்கம் பார்க்க....)**

முன்னணி நடிகையான ராஷ்மிகா மந்தனா சமூக வலைத்தளத்திலும் ஆர்வத்துடன் செயல்பட்டுவருகின்றார். அண்மையில் இவரின் இன்ஸ்ட்ராகிராம் பக்கத்தில் ரசிகர்களின் எண்ணிக்கை 20 மில்லியனை கடந்தது. எந்தத் தென்னிந்திய நடிகைகளுக்கும் இந்தளவு ரசிகர்கள் சமூகவலைத்தளத்தில் இல்லை.

இந்த நிலையில், தனது அழகிய படங்களை வலைதளத்தில் பதிவிட்டு ரசிகர்களை கிறங்கடித்து வருகின்றார் ராஷ்மிகா. இதனால், தினமும் ரசிகர்களின் எண்ணிக்கை எகிறிக்கொண்டே செல்கின்றது.





தெலுங்கில் வளர்ந்துவரும் நடிகையான பூஜிதா பொன்னடா தமிழில் அறிமுகமாகவுள்ளார்.

ஆரி அர்ஜூனன் நடிக்கும் பகவான் என்ற படத்திலேயே இவர் தமிழில் அறிமுகமாகிறார் பூஜிதா. இந்தப் படத்தின் முதல் பார்வை அண்மையில் வெளியானது. தவிர, படத்தின் பாடல் ஒன்று அண்மையில் மிகப்பிரமாண்டமாக உருவாக்கப்பட்டுள்ளது.



கிராமத்து வெள்ளாந்தி இளைஞன் வேடத்துக்காகவே புகழ்பெற்றவர் சசிகுமார். இவர் தற்போது நடித்து வரும் பகைவனுக்கு அருள்வாய் படத்தில் அதிரடி நாயகனாக அவதாரம் எடுத்துள்ளாராம்.

இந்தப் படத்தை அனிஸ் இயக்குகிறார். வாணி போஜன். பிந்து மாதவி . சதீஷ் நினசம், ஜெயபிரகாஷ், ஹரீஷ் பெரடி எனப் பலர் நடிக்கின்றனர்.



பிரபல நடிகையான கங்கனா ரணவத் அடுத்த படத்தில் சீதையாக நடிக்கவுள்ளார். சீதா என்று பெயரிடப்பட்ட இந்தப் படத்தில் முதலில் சீதை கதாபாத்திரத்தில் கரீனா கபூர் நடிக்க உள்ளதாக செய்திகள் வெளியானது. ஆனால், அவர் 12 கோடி இந்திய ரூபாய் சம்பளம் கேட்டாரென தகவல் வெளியாகி பரபரப்பானது.

இந்தநிலையில், கங்கனா ரணவத்தை சீதா படத்தின் நாயகியாக அறிவித்துள்ளார்கள்.

மணிகர்ணிகா, தலைவி படங்களுக்குப் பிறகு ஒரு மிகச்சிறந்த கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார் கங்கனா. தமிழ், ஹிந்தி தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் இந்தப் படம் வெளியாகவுள்ளது.

மீண்டும் நடிக்கவந்துள்ள வடிவேலுவுக்கு ஜோடியாக பிரியா பவானி சங்கர் நடிக்கவுள்ளார்.

சுராஜ் இயக்கத்தில் நாய்சேகர் என்ற படத்தில் வடிவேலு நடிக்கவுள்ளார். படப்பிடிப்பு விரைவில் ஆரம்பமாகவுள்ளது. இந்தப்படத்திலேயே நாயகியாக பிரியா பவானிசங்கர் நடிக்கவுள்ளார். இது தொடர்பில் ரசிகர்கள் உருவாக்கிய படத்தை தனது சமூகவலைத்தளத்தில் பகிர்ந்த பிரியா பவானி சங்கர் கிட்டத்தட்ட இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.






லோகேஷ் கனகராஜ் இயக்கும் விக்ரம் படத்தை தயாரித்து நடிக்கிறார் கமல். இதில் காவல்துறை வேடத்தில் அவர் நடிக்க, விஜயசேதுபதி ரௌடியாக நடிக்கிறார். இருவருக்கும் இடையே நடக்கும் சண்டை காட்சிகள் தற்போது படமாக்கப்படுகின்றன.

இந்த படத்தில் தாடி வைத்த கெட்டப்பில் நடிக்கும் கமலுக்கு முன்கதை காட்சிகளும் உள்ளதாம். 35 ஆண்டுகளுக்கு முன்பு நடித்த விக்ரம் படத்தில் நடித்தது போன்ற வேடத்தில் இளமையாக இருக்கிறாராம். கிரபிக்ஸ் காட்சிகளையும் சேர்த்து தத்ரூபமாக பழைய கமலை ரசிகர்கள் முன்பு கொண்டுவந்து நிறுத்தவுள்ளாராம் இயக்குநர்.

# திரை விமர்சனம்




**திரைப்படம் : தலைவி**
**இயக்கம் : விஜய்**
**இசை : ஜி.வி.பிரகாஷ்குமார்**
**நடிப்பு : கங்கனா ரணாவத், அரவிந்த்சாமி, நாசர், சமுத்திரக்கனி மற்றும் பலர்**
**வெளியான திகதி : 10 செப்ரெம்பர்**

ஒரு பிரபலத்தின் வாழ்க்கை வரலாற்று படம் என்றால் அவர்களின் வாழ்க்கையை உள்ளது உள்ளபடி சொல்ல வேண்டும். ஆனால், இந்தப் படத்தைப் பொறுத்தவரையில் மறைந்த முதலமைச்சர், நடிகை ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாற்று படமா என்று பலத்த சந்தேகத்துடன்தான் சொல்ல வேண்டும்.

மக்கள் கொண்டாடும் சினிமா நாயகனான எம். ஜி. ஆரருடன் தனது 16ஆவது வயதிலேயே ஜோடியாக நடிக்கிறார் ஜெயா. இருவரின் ஜோடியும் ரசிகர்களுக்கு மிகவும் பிடித்துப் போக தொடர்ந்து சில படங்களில் ஒன்றாக நடிக்கிறார்கள். தன்னைவிட மிகவும் வயது மூத்தவரான எம். ஜி. ஆர். மீது காதலில் விழுகிறார் ஜெயா. முதலில் அதை ஏற்க மறுக்கும் எம். ஜி. ஆரும் போகப்போக ஜெயாவின் அன்பில் சிக்கிக் கொள்கிறார்.

அரசியலிலும் செயல்படும் எம். ஜி. ஆர். ஒரு கட்டத்தில் தான் சார்ந்த கட்சியிலிருந்து விலகி தனிக்கட்சி ஆரம்பிக்கிறார். அடுத்த கட்டத்தை நோக்கி செல்ல வேண்டி இருப்பதால் ஜெயா உடனான அன்பை முறித்துக் கொள்கிறார். அதன்பின் ஜெயாவிற்கும் சினிமா வாய்ப்புகள் குறைகின்றன. எம். ஜி. ஆர். முதல்வர் ஆகிறார். ஒரு விழாவில் நடனமாட வரும் ஜெயாவை சந்திக்கும் எம். ஜி. ஆர்., ஜெயாவை தனது கட்சிக்குள் சேர வைத்து பணியாற்ற வைக்கிறார். அவரை எம். பி.யாகவும் ஆக்கி டில்லிக்கு அனுப்புகிறார் எம். ஜி. ஆர்., டில்லியில் கூட்டணி பேசும் அளவிற்கு வளரும் ஜெயாவை திடீரென கட்சியை விட்டு நீக்குகிறார்கள். அரசியலிலிருந்து ஒதுங்குகிறார் ஜெயா. எம். ஜி. ஆர். மறைவுக்குப் பின் கட்சி அவரின் பின்னால் போகிறது. எம். எல். ஏவாகி எதிர்க்கட்சித் தலைவராகவும் சட்டசபை செல்பவருக்கு ஆளும் கட்சியால் பெருத்த அவமானம் நேர்கிறது. முதல்வராகத்தான் மீண்டும் நுழைவேன் என சபதம் எடுக்கிறார். அந்த சபதத்தில் வெற்றி பெற்றாரா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

எம். ஜி. ஆர். , ஜெயா, ஆர்.என்.வி., கருணாநிதி, ஜானகி, சசி என சில முக்கியமான கதாபாத்திரங்களைச் சுற்றி நகர வேண்டிய கதை இடைவேளை வரை எம். ஜி. ஆர்., ஜெயா காதலை சுற்றியே நகர்கிறது. அதன்பின் ஜெயா, ஆர்.என்.வி இடையேயான ஈகோ மோதலில் நகர்கிறது. இடையிடையேதான் மற்ற கதாபாத்திரங்களை திரைக்கதையின் திருப்புமுனைக்காக நுழைத்து சமாளித்திருக்கிறார்கள். காட்சிகள் தொடர்ச்சியாக நூல் பிடித்தாற்போல நகராமல் துண்டு துண்டாக நகர்வது படத்தை ரசிப்பதன் ஈடுபாட்டைக் குறைத்துவிடுகிறது.


நாயக தன்மை கதைகள் போல இது நாயகி தன்மையான கதை அதில் ஜெயா என்ற போராடும் குணம் படைத்த பெண்மணியைப் போற்றும் காட்சிகளை மட்டுமே வைக்க வேண்டும் என முடிவெடுத்துள்ளார்கள். அவர் செய்யும் சில தவறுகள், அவருக்கேற்படும் சறுக்கல்கள் ஆகியவற்றைக் காட்ட மறுத்து விட்டார்கள்.

ஜெயா என்ற நடிகையாக, அரசியல்வாதியாக, பெண்மணியாக நடிப்பால் எந்தக் குறையையும் வைக்கவில்லை கங்கனா ரணாவத். எம். ஜி. ஆராக அரவிந்த்சாமி. 60, 70களின் சினிமா நடிகரை திரையில் காட்ட ரொம்பவே முயற்சி எடுத்திருக்கின்றனர். அதில் ஓரளவே வெற்றி பெற்றிருக்கின்றனர். எம். ஜி. ஆர். போல் தன்னைக் காட்டிக் கொள்ள பாவம், அவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார்.

ஆர். என்.வி. என்ற எம். ஜி. ஆரின் வலதுகரமாக சமுத்திரக்கனி. படத்தில் கங்கனாவிற்கு அடுத்து தனது நடிப்பால் அதிகம் பேசப்படுபவர் சமுத்திரக்கனிதான். ஜெயாவின் அரசியல் எதிரியாக கருணாநிதி கதாபாத்திரத்தில் நாசர். ஆனால், இவர் சில காட்சிகளில்தான் வருகிறார்.

ஜி.வி. பிரகாஷ்குமார் இசையில் பின்னணி இசை படத்துடன் ஒன்றி இருக்கிறது. பாடல்கள் கேட்கும் போது ரசிக்க வைக்கிறது, வெளியில் வந்ததும் மறந்து போகிறது.

இரண்டரை மணி நேரப் படத்தில் எதை சேர்ப்பது, எதைத் தவிர்ப்பது என்று குழம்பியிருப்பது தெரிகிறது. வெளிப்படையாகச் சொன்னால் தவறாகிவிடுமோ, எதிர்ப்பு வந்துவிடுமோ என்று தயங்கித் தயங்கி காட்சிகளைச் சேர்த்திருக்கிறார்கள். அதுவே படத்திற்கு எதிராக அமைந்திருக்கிறது. எந்தத் தயக்கமும் இன்றி உள்ளதை உள்ளபடி சொல்லியிருந்தால் உன்னதத் தலைவியாக அமைந்திருக்கும்.



# ஆரம்பித்த இடத்திலேயே முடிவும்?

இந்த ஆண்டு எதிர்பாராத திருப்பங்களை எல்லாம் எதிர்கொண்டது உதைபந்தாட்ட உலகம்தான். பார்சி லோனாவை தவிர, வேறு எந்த அணிக்காவும் விளை யாடமாட்டார் என்று எதிர்பார்க்கப்பட்ட லயனல் மெஸ்ஸி, 21 ஆண்டுகால ஒப்பந்தத்தை முறித்து கண்ணீருடன் பாரிஸ் சென். ஜெர்மைன் அணிக்கு விளையாட சென்றார்.

இது கடந்த ஆண்டே ஓரளவு வெளியுலகுக்கு கசிந்த செய்தியாக இருந்தபோதும், சத்தம் சந்தடியின்றி மன்செஸ்டர் யுனைட்டெட் அணிக்கு திரும்பியிருக்கி றார் கிறிஸ்ரியானோ ரொனால்டோ.

ரொனால்டோ 2003ஆம் ஆண்டு மன்செஸ்டர் அணிக்காக விளையாட வந்தார். 2009 வரை அந்த அணிக்காக அவர் விளையாடினார். இந்தக் காலத்தி லேயே 3 பிறீமியர் லீக், ஒரு சம்பியன்ஸ் லீக், ஒரு பலன்டி ஓர் விருது என்பவற்றை ரொனால்டோ வென்று உலகின் மிகச்சிறந்த உதைபந்தாட்ட வீரராக மாறினார். இதன் பின்னர் ரியல் மட்ரிட், ஜூவன்ட்ஸ் அணிகளுக்கு விளையாடியபோதும் மீண்டும் மன்செஸ்டர் அணிக்கே வருவார் என்று எவருமே எதிர்பார்க்கவில்லை.

இந்த நிலையில் கடந்த வாரம் மன்செஸ்டர் அணிக் காக மீண்டும் அறிமுகமும் ஆகியிருந்தார். மன்செஸ்டர் ரசிகர்கள் ரொனால்டோவின் வருகையை நம்ப முடியா மல் - மகிழ்ச்சியில் திளைத்தனர். இந்த நிலையில், அவர் மீண்டும் மன்செஸ்டர் அணிக்குள் நுழைய ரொனால் டோவின் உதைபந்தாட்ட தந்தை எனப் புகழப்படும் சேர் அலெக்ஸ் பெர்குஷசன்தான் காரணம் என்கிறார்கள்.

அவர் அணிக்குள் நுழைந்தாலும் அவரின் அடை யாளமான 7ஆம் இலக்கம் கிடைக்காது என்ற தோற்றம் நிலவியது. ஏனெனில், அந்த இலக்கத்தை எடின்சன் கவானி வைத்திருந்தார். ஆனால், கவனாயின் வழக்க மான ராசி இலக்கமான 21ஆம் எண்ணை வைத்திருந்த டானியல் ஜேம்ஸை வேறு ஓர் அணிக்கு அனுப்பி விட்டு அவரின் இலக்கத்தை எடின்சனிடம் கொடுத்து 7 ஆம் இலக்கத்தை ரொனால்டோவிடமே வழங்கியிருக்கிறது மன்செஸ்டர் யுனைட்டெட்.

2009 ரொனால்டோ வெளியேறிய பின்னர் மன்செஸ் டர் யுனைட்டெட் பலவீனமாகவே உள்ளது. இதனால், ரொனால்டோவின் வருகையால் உத்வேகம் பெற்றாலும் கிண்ணம் வெல்வது என்பது மிகக்கடினமே. ஆனால் முதல் போட்டியில் வெற்றியையும், இரண்டாவது போட்டியில் தோல்வியையும் பெற்றுக் கொடுத்திருக்கி றார் ரொனால்டோ.

இப்போது மன்செஸ்டரில் மீள் பயணத்தை ஆரம்பித்துள்ள ரொனால்டோவுக்கு 37 வயது. இது அவரின் இறுதி உதைபந்தாட்ட அத்தியாயமாக இருக்க லாம். உலகின் தலைசிறந்த வீரர் என்று கொண்டா டப்படும் ரொனால்டோ தனது கடைசி அத்தியாயங் களை வெற்றிக் கிண்ணங்களால் எழுத வேண்டும் என் பது ஒவ்வொரு உதைபந்தாட்ட ரசிகனின் ஆசையாகும்.

# தவிக்கும் பாகிஸ்தான்!




நியூசிலாந்து அரசாங்கத்தின் பாதுகாப்பு எச்சரிக்கையை தொடர்ந்து அந்த நாட்டு கிரிக்கெட் அணி பாகிஸ்தான் அணியுடனான தொடர்களை கடைசி நேரத்தில் நிறுத்தியுள்ளது.

5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடருக்காக லாகூருக்கு செல்வதற்கு முன்னர், ராவல்பிண்டியில் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இரு அணிகளும் மோத விருந்தன. இந்த நிலையில் வெள்ளிக்கிழமை பிற்பகல் போட்டி ஆரம்பிக்க சில மணி நேரம் முன்னதாக நியூசிலாந்து தொடர்களை நிறுத்துவதாக அறிவித்தது.

பாகிஸ்தானில் நியூசிலாந்து அணி தங்கியிருக்கும் நிலையில் அணி வெளியேறும்வரை பாதுகாப்பு அச்சுறுத்தல் பற்றிய விவரங்களை தெரிவிக்க மாட்டோம் என்று நியூசிலாந்து அறிவித்துள்ளது. அத்துடன், "இது பாகிஸ்தானுக்கு பெரும் அடியாக இருக்கும் என்பதை புரிந்து கொள்கிறோம். அவர்கள் அற்புதமான ஏற்பாட்டாளர்களாக இருந்தனர். ஆனால், வீரர்களின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது" என்று நியூசிலாந்து கிரிக்கெட்டின் தலைமை நிர்வாகி டேவிட் வைற் கூறினார்.

2009ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணியின்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து பாகிஸ்தானில் நடக்கவேண்டிய தொடர்கள் அனைத்தும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் லேயே நடந்தன. 2019ஆம் ஆண்டு இலங்கை அணி பாகிஸ்தானுக்கு சென்று விளையாடியபோதும் வெளிநாட்டு அணிகள் அங்கு செல்ல சம்மதிக்கவில்லை.

இந்த நிலையிலேயே நியூசிலாந்து அணி பாகிஸ்தான் சென்றிருந்தது. ஆனால், பாதுகாப்பு காரணங்களை முன்வைத்து அந்த அணி விளையாட மறுத்து திரும்ப ஆயத்தமாகியுள்ளது. இந்த நிலையில், போட்டி நிறுத்தப்படுவதாக அறிவிப்பதற்கு முன்னர் பாகிஸ்தான் கிரிக்கெட்டின் முன்னாள் வீரரும், நாட்டின் தற்போதைய பிரதமருமான இம்ரான் கான் நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டனிடம் பேசினார். அணிக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்றும் அவர் கூறியிருந்தார். அத்துடன் தங்களிடம் உலகின் சிறந்த புலனாய்வு கட்டமைப்பு உள்ளதாகவும் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என உறுதியளித்தபோதும் தொடர் நிறுத்தப்பட்டது.

நியூசிலாந்து தொடரை நிறுத்தியமையை தொடர்ந்து ஒக்ரோபர் மாதம் பாகிஸ்தானுக்கு சென்று விளையாடவிருந்த இங்கிலாந்து ஆடவர், மகளிர் அணிகளின் தொடர்கள் குறித்தும் இங்கிலாந்து கிரிக்கெட் சபை தனது முடிவை மீள்பரிசீலனைக்கு உட்படுத்துகிறது. இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் இறுதி முடிவு இன்று அல்லது நாளை வெளியாகலாம். ஆனால், இது பாகிஸ்தான் அணிக்கு பாதகமாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பாகிஸ்தான் ஏற்கனவே நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றது. அதேசமயம் பாகிஸ்தான் சென்று விளையாட அணிகள் மறுத்து வருகின்றன. நியூசிலாந்து, இங்கிலாந்து தொடர்களின் பின்னர் படிப்படியாக பாகிஸ்தானிலேயே போட்டிகளை நடத்தவும், இதன் மூலம் வருமானங்களை ஈட்டவும் முடியும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எண்ணியிருந்தது. ஆனால், இந்த எண்ணத்தில் தற்போது இடி விழுந்திருப்பதால், வேறு மார்க்கங்களை கண்டுபிடிக்கமுடியாமல் தவிக்கிறது பாகிஸ்தான்.

# நிரூபிக்க தடை என்ன?




கிரிக்கெட் உலகில், விராட் கோலி மீதே அனைவரின் கவனமும் குவிந்துள்ளது. இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டி தொடருடன் அவர் தலைமை பதவியை துறப்பதாக அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பை தோல்வியாகவே பார்க்கிறார்கள் கிரிக்கெட் ரசிகர்கள். இந்திய அணிக்காக டெஸ்ட் போட்டிகளுக்கேனும்கூட வெற்றிகரமான தலைவராக கோலி தன்னை நிலைநிறுத்தினாலும், ஐ.பி.எல். தொடரில் அவரின் தலைமையிலான பெங்களூரின் நிலைமை பரிதாபம்தான்.

ஐ.பி.எல். இருபது - 20 போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியை 8 தொடர்களில் வழிநடத்தியுள்ளார் கோலி. ஆனால், இதுவரை ஒருமுறையேனும் அந்த அணிக்காக அவரால் கிண்ணத்தை வெல்ல முடியவில்லை. வெற்றிகரமான துடுப்பாட்ட வீரராக ஜெயித்த கோலியால் இன்றுவரை வெற்றிகரமான தலைவராக முடியவில்லை.

இதனால்தான், இருபது - 20 தொடர் தொடங்கும் முன்பாகவே, பதவி விலகல் அறிவிப்பை வெளியிட்டுள்ளார். ஆனால், இம்முறை உலகக் கிண்ணத்தை இந்திய அணி வென்றால் வெற்றிகரமான ஒரு தலைவராக கோலி விடைபெறுவார். இதற்குக் காரணம் ஐ.சி.சி. நடத்திய வெற்றிக் கிண்ணங்களில் இதுவரை ஒன்றில்கூட கோலி படை வென்றதில்லை என்பதே. அதுவே, இம்முறையும் கோட்டை விட்டுவிட்டார் என்றால் தலைமைப் பதவியிலிருந்து தூக்குங்கள் என்ற மற்றவர்கள் கூறவேண்டிய தேவையே இராது. அத்துடன், விமர்சனங்கள், எதிர்ப்புகளை எல்லாம் பதவி விலகல் என்ற முன்னறிவிப்பே காத்துவிடும் என்பதே கோலியின் நிலைப்பாடு.

ஆனால், கடந்த 8 தொடர்களில் தோல்வியை மட்டுமே பரிசளித்த பெங்களூர் அணியின் ரசிகர்களுக்கு கோலி என்ன சொல்லப் போகிறார் அல்லது என்ன தீர்வு வைத்துள்ளார் என்பதே இன்றுள்ள கேள்வி. ஐ.பி.எல்லைப் பொறுத்த வரை அவர் ஒருமுறையை பெங்களூர் அணியை இறுதியாட்டம் வரை அழைத்துச் சென்றிருக்கிறார். ஆனால், அவரால் வெற்றிக் கிண்ணத்தை அணிக்காகப் பரிசளிக்க முடியவில்லை. பெங்களூர் அணிக்காக துடுப்பாட்டத்தில் ஆரம்பகாலத்தில் ஜொலித்தாலும்கூட இன்று அவரால் சிறப்பாக ஆடவே முடியவில்லை. ஆனால், இம்முறை போட்டியில் பெங்களூரின் மக்ஸ்வெல், டி வில்லியர்ஸ், ஜேமிசன், சிராஜ், சாகல், ஹர்சல் பட்டேல் என அனைவரும் சிறப்பான நிலையில் உள்ளனர். இந்த முறையும் கோலியின் தலைமை பெங்களூர் அணிக்கு பட்டம் வெல்லத் தவறினால், நிச்சயம் அவருக்கு இலவு காத்த கிளியின் நிலைமையே...!



முருகபூபதி

**நந்தினி சேவியர், தன்னை மாத்திரம் முன்னிலைப்படுத்தாமல், சக எழுத்தாளர்களின் சிறுகதைகளையும் தொடர்ந்து படித்து, அவற்றிலிருந்து நூறுக்கும் மேற்பட்ட சிறந்த சிறுகதைகளை தனது தேர்ந்த வாசிப்பு அனுபவத்தின் ஊடாக அடையாளம் காண்பித்தவர். இந்தப்பணி அவரது கடும் உழைப்புக்கு சிறந்த சான்று.**

# விடைபெற்றார் நந்தினி சேவியர்

"Sino pharm 2nd dose. தடுப்பூசி கடுப்பேத்தி படுக்கையில் வீழ்த்திவிட்டது. எதுபற்றியும் சிந்திக்கவோ எழுதவோ முடியவில்லை. மீண்டு எழுவேன். வருவேன். எழுதுவேன். இனிப்போதும். எனக்கே சலிக்குது. எழுத இன்னும் பலது உண்டு."

மேற்குறிப்பிட்ட வரிகள், எமது எழுத்தாளர் நண்பர் நந்தினி சேவியர், (செப்டெம்பர் 16 ஆம் திகதி) மறைவதற்கு முன்னர் எழுதி முகநூலில் பதிவேற்றியவை !

என்னிடம் இந்த முகநூல் கணக்கு இல்லை. இந்த வரிகளை சிட்னியிலிருந்து எழுத்தாளர் கானா. பிரபா எனக்கு அனுப்பும்போது, நானும் மதிய உறக்கத்திலிருந்தேன்.

அண்மைக்கால தொடர் மெய்நிகர் சந்திப்புகளினால், நடுச்சாமம் கடந்து உறங்கச்செல்லும் வகையில் எனது வாழ்க்கை முறையையும் இந்த கொரோனோ காலம் மாற்றிவிட்டது.

மாலைவேளையில் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தபோது, எனது துயிலை மெல்பன் இலக்கிய நண்பர் நடேசன் தொலைபேசி ஊடாக களைத்துவிட்டு, நண்பர் நந்தினி சேவியர் மறைந்த செய்தியைச் சொன்னார்.

அதன்பின்னர் உறங்கத்தான் முடியுமா..? "மீளாத்துயரத்தை தந்துவிட்டு மீளாத்துயில் கொண்டுவிட்டார்" என்று மரண அறிவித்தல்தான் எழுதமுடியுமா..?

இது கொரோனோ காலம் மட்டுமல்ல, அஞ்சலிக்குறிப்பு காலமும் ஆகும் என்று கானா. பிரபாவுக்கு பதில் எழுதிவிட்டு, பிரான்ஸ் நேரத்தை பார்க்கின்றேன்.

நந்தினி சேவியரின் நீண்டகாலத் தோழர், பிரான்ஸில் வதியும் எழுத்தாளர் வி.ரி.இளங்கோவனை துயில் எழுப்பி, துயரத்தை பகிர்ந்தபோது, அவருக்கும் நந்தினி சேவியர் மறைந்த செய்தி அது வரையில் தெரியாது.

இறுதிவரையில் முகநூலில் குறிப்புகள் எழுதிக்கொண்டிருந்த நந்தினிசேவியர், "இனிப்போதும், எனக்கே சலிக்குது" என்று அவர் எழுதும்போதே தான் விடைபெறும் நேரத்தை கணித்து விட்டார்போலும்" என்றார் இளங்கோவனும் !

வடபுலத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் மட்டுவிலில் 1949 ஆம் ஆண்டு பிறந்திருக்கும் நந்தினிசேவியர், மட்டுவில் கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலை, மட்டுவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, வதிரி திருஇருதயக் கல்லூரி ஆகியவற்றில் கற்றவர். பின்னர் யாழ் . தொழில்நுட்பக் கல்லூரியிலும் பயின்றார்.

இந்தத்தகவல்களை தமிழ் விக்கிபீடியா தெரிவிக்கின்றது. எனக்கு முன்பே இலக்கியப்பிரதிகள் எழுதத்தொடங்கிய நந்தினிசேவியரை நான் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்வதற்கு முன்னர் ஒரு சில சந்தர்ப்பங்களில்தான் யாழ்ப்பாணத்தில் சந்தித்திருகின்றேன்.

இலங்கையில் முற்போக்கு எழுத்தாளர்கள் மாஸ்கோ சார்பு - சீன சார்பு என்று பிளவுபட்டு அணிவகுத்து நின்ற காலப்பகுதியில்தான் நந்தினி சேவியர் எனக்கு 1975 இற்குப்பின்னர் அறிமுகமானார்.

நான் மல்லிகையில், அதன் ஆசிரியர் டொமினிக்ஜீவாவினால் அறிமுகமாகியிருந்தமையாலும், நானும் மாஸ்கோ சார்புதான் என்று வெளியே அறியப்பட்டமையாலும், நந்தினிசேவியர் என்னுடன் சற்று ஒதுங்கித்தான் உறவாடினார்.

எனினும், எமக்கிடையே என்றைக்கும் வாதப்பிரதிவாதங்கள் நிகழவில்லை. இவரும் வி.ரி.இளங்கோவன், நல்லை அமிழ்தன், தேவி பரமலிங்கம், டானியல் அன்ரனி, பொன்ராசா ஆகிய எழுத்தாளர்களும் ஈழத்தின் மூத்த எழுத்தாளர்கள் கே. டானியல், என்.கே. ரகுநாதன், பீக்கிங் சின்னத்தம்பி, ஆகியோருடன் நெருக்கமான உறவைப் பேணியவர்கள். இவர்கள் அனைவரும் சீன சார்பு அணியில் தோழர் சண்முகதாசனுடன் நின்றவர்கள்.

நான் வெளிப்பிரதேச எழுத்தாளன் என்றவகையில் என்னுடன் நல்லுறவை தொடர்ந்தும் பேணியவர்கள்.

நந்தினி சிறந்த படைப்பாளி. அவரது சிறுகதைகள், நாவல்கள், குறுநாவல்கள், கட்டுரைகளில் அவரது எழுத்தாளுமைப்பண்புகள் வெளிப்பட்டிருக்கும்.

ஈழநாடு பத்திரிகையின் 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட நாவல் போட்டியில் 'மேகங்கள்' என்ற அவரது நாவல் இரண்டாம் பரிசு பெற்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்திய நாவல் போட்டியில் ஒரு வயதுபோன மனிதரின் வாரிசுகள் என்ற குறுநாவல் தங்கப் பதக்கத்தை முதற்பரிசாகப் பெற்றது.

1993 இல் வெளிவந்த சிறந்த சிறுகதைத்தொகுப்புக்கான முதற்பரிசை விபவி சுதந்திர இலக்கிய அமைப்பு அவரது அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்ற நூலுக்கு வழங்கியது.

உள்ளூராட்சித் திணைக்களம் நடத்திய 'தமிழின்பக் கண்காட்சி' யில் "அயல்கிராமத்தைச் சேர்ந்தவர்கள்" நூலுக்கு முதற்பரிசு வழங்கியது.

அவரது இலக்கியப் பங்களிப்புக்காக 2011 இல் கிழக்கு மாகாண முதலமைச்சர் விருதும் கிடைத்தது.

கொழும்பில் 2015 இல் கொடகே வாழ்நாள் சாதனையாளர் விருதும் பெற்றார்.

2012 இல் வடமாகாண சிறந்த நூல் பரிசுத்திட்டத்தில் , அவரது நெல்லிமரப் பள்ளிக்கூடம் (சிறுகதைத் தொகுதி) தெரிவாகியது.

தேசிய சாகித்திய விருதையும் அதே ஆண்டு நெல்லிமரப் பள்ளிக்கூடம் பெற்றது.

கிழக்குமாகாண சிறந்த நூல் பரிசு (பல்துறை) - நந்தினி சேவியர் படைப்புகள்

கலாபூஷணம் விருது - 2013

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் 2014-2015 ஆம் ஆண்டுக்கான "சங்கச் சான்றோர் விருது" வழங்கிக் கௌரவித்தது.

இந்தத் தகவல்களை நாம் தமிழ் விக்கிபீடியாவில் தெரிந்துகொள்ள முடியும்.

நந்தினி சேவியர், தன்னை மாத்திரம் முன்னிலைப்படுத்தாமல், சக எழுத்தாளர்களின் சிறுகதைகளையும் தொடர்ந்து படித்து, அவற்றிலிருந்து நூறுக்கும் மேற்பட்ட சிறந்த சிறுகதைகளை தனது தேர்ந்த வாசிப்பு அனுபவத்தின் ஊடாக அடையாளம் காண்பித்தவர். இந்தப் பணி அவரது கடும் உழைப்புக்கு சிறந்த சான்று.

அவரது தெரிவில் மாறுபட்ட அபிப்பிராயம் எவருக்கும் நேர்ந்தாலும் கூட, சிறந்த சிறுகதைகளை அடையாளம் காண்பித்த அவரது பண்பு முன்மாதிரியானது.

இந்தப்பணியை தமிழ்நாட்டு எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணனும் மேற்கொண்டுள்ளார். சமகாலத்திலும் எதிர்காலத்திலும் சிறந்த சிறுகதைகளை தொகுத்து படிக்கவிரும்பும் வாசகர்கள், பல்கலைக்கழகங்களில் சிறுகதை இலக்கியம் தொடர்பாக விரிவுரையாற் றும் பேராசிரியர்கள், மற்றும் ஆீராடை ஆய்வுகளில் ஈடுபடும் மாணவர்களுக்கும் உசாத்துணையாக நந்தினி சேவியரின் இந்த கடும் உழைப்பு திகழும்.

எனவே, நந்தினிசேவியர் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் தனது தீவிர வாசிப்பு அனுபவத்தின் ஊடாக நற்பணியை செய்துவிட்டே விடைபெற்றிருக்கிறார் என்ற செய்தியையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவிக்கவேண்டியுள்ளது.

இந்தப்பணி அஞ்சலோட்டத்திற்கு ஒப்பானது. அவருக்குப்பின்னர் இதனை யாராவது ஒருவரோ, அல்லது சிலரோ தொடரவேண்டும்.

நந்தினிசேவியரின் வாழ்க்கை சவால்களை எதிர்நோக்கியிருந்தது. இறுதியாக அவரை 2010 ஆம் ஆண்டு இறுதியில் திருகோணமலையில் நான் சந்தித்தபோது, மிகுந்த மனவலியுடன் காணப்பட்டார். ஒரு சம்பவத்தில் அவரது மகன் காவலர்களினால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட துயரத்தில் மூழ்கியிருந்தார்.

என்னைக்கண்டதும் அணைத்து கதறி அழுத காட்சி இன்னமும் எனது மனக்கண்ணை விட்டு அகலவில்லை. அவரைத்தேற்றுவதற்கு வார்த்தைகளை தேடிய அந்தக்கணங்கள் மிகவும் கொடியது.

எனினும், அவர் காவலர்கள் மீதிருந்த கடும்கோபத்தில் தனது மனைவியை காவல் துறை சார்ந்த பணியிலிருந்து விலகச்செய்ததையிட்டு கண்டித்தேன்.

தனக்கு ஒரு வேலை தேடித்தருமாறு கேட்டார். அவரிடம் செல்வதற்கு எனக்கு வழிகாட்டியாக வந்திருந்த நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பின் தலைவர் கணேஷிடம், "இவருக்கு உங்கள் அமைப்பில் ஒரு வேலை தரமுடியுமா..?" எனக்கேட்டேன்.


"வவுனியா கிளைக்கு இவர் வந்தால், தரமுடியும்" என்றார் கணேஷ். அதன்பிரகாரம் சிறிது காலம் வவுனியா சென்று அங்கே குறிப்பிட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் நந்தினி சேவியர் பணியாற்றினார்.

எனினும், அங்கும் அவர் நீடித்திருக்கவில்லை என்பதை பின்னர் அறிந்தேன்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மறைந்த எழுத்தாளர்கள் மல்லிகை ஜீவா, மா.பாலசிங்கம் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்ச்சிகள் மெய்நிகர் ஊடாக நடந்தபோது நந்தினிசேவியரும் இணைந்து கருத்துக்களை தெரிவித்தார்.

"இனி - என்னைப்பற்றியும் மெய்நிகரில் பேசுங்கள்" என்று சொல்லாமல் சொல்லிவிட்டு விடைபெற்றுவிட்டார்.

# வனல்பதி



சந்திரா இரவீந்திரன்

அந்தமற்ற பெருவானம்
அள்ளுண்டு நகரும் முகில்கள்
கண் சிமிட்டும் நட்சத்திரங்கள்
கதை சொல்லும் பால்நிலவு
கரை புரண்டு தழுவும் கடலலைகள்
நேசமுடன் மேனி தொடும் ஆசைமழை
ஊர் வாசம் வீசும் காற்று!
மனம் கொள்ளாக் கனவுகள்
மாளா நினைவுகள்...
இன்பமும் துன்பமும் கலந்துருகும்
நெஞ்சிற்குள் மாயவலி..!
காலச்சூரியனைத் தேடி
நீளமாய் நடக்கின்றேன்....

எழுதுவதற்கான சொற்கள் அதற்குமப்பால் எங்கோ தொலைந்து போயின போலிருந்தது. மனசு மட்டும் அலைந்தபடியே கிடக்கிறது. கட்டற்றுப் பாயும் காலத்தை உதைத்து விட்டு, காந்தக்கல் இழுப்பது போல் பின் வளமாய் இழுபட்டுச் செல்கிறது அது. கனவு கள் மிதந்து திரியுமொரு வெளியில் ஏதோவொரு புள்ளியில் அது சிலிர்ப் போடும் தயக்கத்தோ டும் நின்று கொள்கிறது!

ஒரு வெயிற்காலம். பின்னரொரு பனிக் காலம். சுழன்றடித்துப் புழுதி கிளப்பும் சோழ கக்காற்றுக் காலம். எல் லாவற்றையும் கழுவி அடித்துச் செல்ல ஒரு மழைக்காலமென எத்த னையோ காலங்கள் அங்கு வந்து போயின. அளக்கக்கூடிய சந்தோ சங்களும் அளவிடமுடி யாத் துயரங்களும் அவற்றோடு சேர்ந்தே வந்து போயிற்று!

கண்களை ஒரு கணம் மூடுகிறாள். நெஞ்சு முட்டி, நிலம் முட்டி, வானம் முட்டுமளவிற்கு பேசியவையும் பேச மறந்தவையும் மலை களென குவிந்து கிடக் கின்றன! அந்தக் காலத் தின் இடுக்குகளை ஒவ் வொன்றாக மெல்ல மெல்லத் தொட்டுப் பார்க்கிறாள். காற்றில் மிதந்து திரியும் அந்தக் கனவுகளின் வெப்பத்தை இப்பொழுதும் அவ ளால் உயிர்ப்போடு உணர முடிகிறது! திகைப்போடும் பரவசத்தோடும் அசையாது நிற்கிறாள்!

மெல்லிய காற்று மேனி தொட்டுத் தழுவிச் செல்கிறது. சொல்லாமல் பெய்த மழை, பின் சிறு தூற லாகி விடைபெறத் தயாராகிக் கொண்டிருக்கிறது.

மழைச்சாரல் ஓய்ந்த பின் இலேசான மஞ்சள் வெயிலுடன் கலந்து மினுமினுக்கும் அந்திமாலை. முன்னெப் போதும் இல்லாத அபூர்வ அழகில் அது குழைந்து கிடக்கிறது!

தென்னை மரங்களிலிருந்து கீழே விழுந்து சிதறிக் கிடக்கும் தென்னம் பூக்களும், நெல்லி மரத்திலிருந்து கொத்துக் கொத்தாய் கொட்டுண்டு கிடக்கும் நெல்லிப் பிஞ்சுகளும், வெண்பட்டு விரித்தது போல் பரவிக் கிடக்கும் பிச்சிப்பூக்களுமாய் மயக்கும் வாசனையை அவை வளவெங்கும் கிளறி விட்டிருந்தன!

அந்நேரம் கிணற்றில் அள்ளிக் குளிக் கப் பிரியமாக இருக்கும். கையும் உட லும் துறுதுறுக்கும். கிணற்றினுள் மழைநீரும் தென்னம்பூக்களும் கலந்து, குளிர்மை பொங்கிக் கிடக்கும். கிணற்றடியும் தொட்டியும் மழைநீரில் கழுவுண்டு அவற்றின் சலவைக்கற்கள் பளபளக்கும். சுற்றிவர இருக்கும் வேலியும் மரங்களும் புத்தம் புதிதாய் பொலிவு காட்டும்.

அம்மாவின் பாவாடை ஒன்றைத் தூக்கி, அவள் தன் சிறுமார்புகளை மறைத்து வழுக வழுக முடிந்தபடி, ஓடிச்சென்று கிணற்று நீரை அள்ளியள் ளிக் குளிக்கிறாள்.

குளிக்கும்போது அங்குமிங்குமவள் கருவண்டுக் கண்கள் சுழலும். திடீ ரென்று கிணற்றடி வேலிக்கப்பால் நக ரும் ஒழுங்கையில் ஒரு தலை மெதுவாக ஊர்ந்து செல்லும். அது விஜயனின் தலையாகத்தான் இருக்கும். வேலைக்கு மனுப்போட்டு விட்டு செய்வதற்கு ஏதுமற்றவன் போல்,

தன் நீண்ட கழுத் தோடு அந்த ஒழுங்கையால் நடந்து திரிகிறவன் அவன் தான்.

கிணற்றடிக்கு வடக்குப்புறமுள்ள பெத்தம்மாவின் வீட்டிற்கும் அப்பால் சில பனங்காணிகள். அங்கு தலையைச் சிலுப்பியபடி நெடுநெடு வென வளர்ந்து நிற்கும் ஏராளம் பனைகளில் ஏதோவொரு பனையில், கன்னங்கரேலென்ற வடிவேலுவும், வெள்ளைவெளேரென்ற பாஸ்கரனும் நிச்சயமாய் ஏறியிருப்பார்கள். பனை களில் தினமும் ஏறியேறியே கவர்ச்சி யான உடல்வாளிப்பைப் பெற்றிருக்கும் இவர்கள், மடித்துக் கட்டிய சாரமும், இடுப்பில் வரித்த தோற்பட்டியும், அதில் பொருத்திய மரக் குடுவைக்குள் பாளைக்கத்திகள், தோற்கட்டிகள், பாளை தட்டிகள், தொங்கும் முட்டிகள் சகிதம் ஊருக்குள் குறுக்கும் மறுக்குமாய் திரிந்து கொண்டிருப்பவர்கள். வீதியில் எதிர்பாராமல் இருவரையும் காணும் தோறும் கூச்சம் அவளைப் பிடுங்கித் தின்னும். அவள் குளிக்கும்போது கண்டும் காணாதவர்கள் போலிருக்கும் அசகாய சூரர்கள் அவர்களென்று கள்ளமாய் மனம் எண்ணும்.

கிணற்றில் அள்ளிய நீரை தலையில் ஊற்ற முன்னர் அவர்கள் பனைகளில் இருக்கிறார்களா என அவளது கருவண் டுக் கண்கள் சுழன்று சுழன்று பனை களின் நுனிகளை மேயும். அவர்கள் பனைவட்டுகளிற்குள் அமர்ந்திருந்து பாளை சீவிக்கொண்டிருப்பார்களே யானால், தண்ணீரை அள்ளி சும்மா சும்மா தன் தலையில் ஊற்றியபடியே நேரத்தைக் கடத்திக் கொண்டிருப்பாள். அவர்கள் பனைகளை விட்டு அகன்ற பின்னரே மிகுதி பல்லவியும் சரணமும்!

அந்நேரம் பார்த்து கிணற்றடிக்குப் பின்னாலிருக்கும் மதிற்சுவரோடு கூடலாக வளர்ந்து நிற்கும் பப்பாசி மரங்களில் செண்பகங் களும் மைனாக்களும் வந்து குந்தியிருந்து குறுகுறுவென்று கண்களை வெட்டி வேடிக்கை பார்த்தபடியிருக்கும்.

கிணற்றிற்குள் துலாவை இறக்கும் போது ஒரு துள்ளல். இலங்கை வானொலியில் மாலை ஒலிபரப்புத் தொடங்க, அப்துல் ஹமீடும், மயில் வாகனம் சர்வானந்தாவும் வந்திருந்து அந்திப்பொழுதை மேலும் கிறங்கடிக்க வைத்துக்கொண்டிருப்பார்கள். துலாவை இழுக்கும் ஒவ்வொரு துள்ள லோடும் சேர்ந்து அவள் மனங்கொள் ளாத ஆசைகளும் கற்பனைகளும் காற்றில் பறக்கத் தொடங்கிவிடும்! மனசிற்குள் ஒரு பொன்னூஞ்சல் ஆடத்தொடங்கிவிடும்!

திடீரென்று கிணற்றுக்குள் தொபீரென்று ஓசை கேட்க, திடுக்குற்று வானத்திலிருந்து பூமியில் விழுந்தது போல் அலமலந்து போய் நிற்பாள்! நெஞ்சிற்குள் படீர் படீரென்று இதயம் எழும்பும் ஒலி பேரிடி போலக் கேட்டுக் கொண்டிருக்கும். நெல்லி மரத்தின் பின்னாலிருந்து தலையை நீட்டி எட்டிப் பார்த்து கேலி செய்யும் சின்னண் ணாவின் முகம் ஒரு பேய் போலத் தோற் றம் காட்டும். கோபமும் பயமும் கலந்த வெப்பியாரத்தில் “அம்மா...” என்று அலறுவாள். வீடு வெலவெலத்துப் போகும்!

ஆசுவாசப்பட்டு சுயத்திற்கு வரும் போது சூரியன் மறைந்து வெகுநேரமாகி யிருக்கும். அப்பாச்சி குரல் கொடுப்பா.

“மோனை... இருண்ட பிறகு பச்சைத் தண்ணியில ஊறாதை. பிறகு வாதம் வந்து விடும்....”

இவளுக்குச் சிரிப்பு வரும்.

“இளவரசிகளுக்கு எந்த வருத்தங்களும் வருவதில்லையே...”

துவாலையால் உடலைத் துவட்டும் போது திரும்ப அவன் வருவான். தன் பேய் முகத்தை நீட்டி, விழிகளை உருட்டி, உதடுகளைப் பிதுக்கி... நையாண்டி பண்ணுகையில் மீண்டும் ’அம்மா....’ என்று அவள் அலறுவாள்.

“சனியனே...இங்காலை வாடா. இனி சீமாட்டி... நீ நீராடினது காணும். கெதியா வா...” அதே ஸ்தாயியில் அம்மா கடுப்போடு குரல் கொடுப்பாள்.

அங்கிருந்து அவள் வெளியேறுமுன் சலவைக் கல் பதித்த கிணற்றடி காய்ந்து விடும். தென்னம் பாத்திகள் நீரால் நிரம்பி வழியும். முற்றத்தில் சிலுசிலு வென்ற குளிர் காற்று வீசத்தொடங்கி விடும். செண்பகங்களும் மைனாக்களும் தொலைதூரம் பறந்து போயிருக்கும். தென்னை மரங்களில் வெளவால்கள் தடமடித்து விழுந்தெழும் பிப் போகும். வடிவேலு வும் பாஸ்கரனும் பனைகளை விட்டுப் போய் வெகுநேர மாகியிருக்கும்.

வானத்தில் நட்சத் திரங்கள் கண்சிமிட்டத் தொடங்க, பெத்தம்மா வீட்டில் தேவார ஓசை கேட்கத் தொடங்கி யிருக்கும். ஆத்தியடிப் பிள்ளையார் கோவிலில் மாலைப்பூசை மணி ஒலிக்கத் தொடங்கி விடும்.

வானம் அமைதியாய் கிடக்க, நிலவு தென்னை மரங்களிற்கிடையாய் புது மொழிகள் பேசத்தொடங்கும்!

நீராடல் முடிய, மாலைப் படிப்பு தொடங்க முதல் வேறு கனவு வரும். படிக்கும் போது இன்னுமொரு கனவு வரும்..!

▼ ▼ ▼ ▼ ▼

பின்னர் ஒரு காலம் அது!

எங்கிருந்தோ வந்து புற்றீசல் போல் அவர்கள் குவிந்திருந்தார்கள். வீதிகள். ஒழுங்கைகள், காணிகள், கட்டாந்தரை கள் என்று எதுவும் மிச்ச மில்லை. இட்டு இடுக் கெல்லாம் ஈயாக மொய்த்துக் கிடந் தார்கள்!

அமைதி தொலைந்திருந்த ஒரு மாலை நேரம். அந்த வீட்டின் பின் வளவுக்குள் கேள்விகளேதுமற்று அவர்கள் நுழைந்திருந்தார்கள். அங்கு வரும்போதெல்லாம் ஓசைகளை ஒளித்து வைத்துவிட்டு கள்ளத்தனமாகவே தான் வருகிறார்கள். அலுக்காமல் சலிக்காமல் மீளவும் மீளவும் வருகிறார்கள்!

சில மாதங்களிற்கு முன்னர் தான் அந்த அதிசயங்கள் நடந்தன. சல்லி பறித் தது போன்ற பேரோசையுடன் தலைக்கு மேலால் ஒன்றன் பின் ஒன்றாய் பறந்து சென்ற போர் விமானங்கள் உணவுப் பொட்டலங்களை வீசிய போது, அண் ணாந்து பார்த்தவர்களின் கண்களில் மின்னிய நம்பிக்கை ஒளிக்கீற்று எப்படித் தொலைந்து போனதென்று தெரியாமலே மெல்ல மெல்லத் துடைத்தழிந்து போய் விட்டிருந்தது! **(16 ஆம் பக்கம் பார்க்க)**

ஈழநாடு



# ‘ஹலோ என்றால்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

ஐந்தாறு கொட்டகைகள். பாஸ் வழங்கப்படும் கொட்டகையில் பலர் நெருக்கிக் கொண்டிருந்தார்கள். மற்றையவற்றிலும் படுத்தும் அமர்ந்தும் இருந்தார்கள். சற்றுத் தள்ளி ஒருபுறம், வரிசையாக தேநீர்க் கடைகள்.

மழை வானம் வெளுத்திருந்தது. அகலும் பகலோடு, ‘படகுகள் சிலசமயம் ஓடுமோ’ என்று மனதிலிருந்த அசட்டு நம்பிக்கையும் அகல ஆரம்பிக்க, பெட்டியைத் தூக்கிக்கொண்டு, ஆள்கள் சற்று குறைவாக தெரிந்த கொட்டகை ஒன்றை நோக்கி நடந்தேன். அங்கு ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டேன்.

சற்றுத் தள்ளி ஒருவர் அறிமுகமானவர் போலிருந்தார். ஸ்கந்தாவில் படித்தீரா என்றார். ஆம் என்றேன்.

கொழும்பில் வேலைபார்க்கும் அவர், முதல் நாள் வந்ததாகத் தெரிவித்தார். இரண்டு குழந்தைகளுடன் ஒரு பெற்றோர் மூன்று நாள்களாக தங்கியிருப்பதாகவும் தெரிந்தது. இவை, தெம்பூட்டின. அத்துடன், அவர்களின் கஷ்டங்களை கொஞ்சம் அநுபவித்து, அறிந்துகொள்வது நல்லதேயென்ற தேற்றமும் உண்டாயிற்று.

கடைப் பக்கம் சென்று மீண்டும் ஒரு தேநீர் அருந்தி வந்தேன். அந்தக் கொட்டகையும் நிரம்பிக்கொண்டிருந்தது. குழந்தைகள், பெண்கள், வயதானவர்கள் பலரும் இருந்தார்கள்.

மெழுகு சீலையின் அருமை புரிந்தது. இன்னமும் விற்றுக்கொண்டுதானிருந்தார்கள். கொட்டகைகள் எதற்கும் விளக்கு வெளிச்சம் இல்லை. தூரத்தே கடைகளில் ‘பெற்றோமாக்சு’கள் எரிந்துகொண்டிருந்தன. மெழுகு சீலைகளோடு, மெழுகுவர்த்திகளின் வியாபாரமும் தொடங்கியிருந்தது. ஒரு மெழுகுவர்த்தியை வாங்கினால், அதைக் கொழுத்திவிட்டுச் செல்லக்கூடாதா? அதற்கு ஒரு தீப்பெட்டி வாங்கவேண்டும்.

ஒருசிலர் நித்திரைதான். ஆனால், ஒவ்வொரு பக்கத்திலுமிருந்து சுவாரஸ்யமான சம்பாஷணைகள் வந்துகொண்டிருந்தன. பொதுவாக, வெளிநாடுகளிலிருந்து பணம்பெறுவோர் குறித்துத்தான் இப்போதெல்லாம் பேச்சுக்கள் மையம் கொள்கின்றன. இந்தப் பயணத்தை மேற்கொள்பவர்களிலும் அநேகமானோர் வெளிநாடுகளில் தமது பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், சகோதரர்கள், உறவினருடன் தொலைபேசியில் பேச, அவர்கள் அனுப்பும் பணத்தைப் பெற, கொழும்பு வருபவர்களே. 1983 கலவரத்தின்போது கொழும்பில் இருந்தவர்களைவிட, பெருமளவு தமிழர் இப்போது கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வசிக்கிறார்கள். இவர்களிலும் பெருமளவினர் வெளிநாடுகளிலிருந்து பணம் பெறுவோரே.

‘ஹலோ என்றால் கிலோவில் வருகிறது காசு’. ‘வயரில் வாற காசுதானே’ - இப்படி பல, அங்கு காதில் வீழ்ந்தன. கொழும்பு லொட்ஜ்களிலே சென்று தங்கியிருப்போரை நள்ளிரவு வேளைகளில் எழுப்பி, ‘ரெலிபோன், வெளிநாட்டிலிருந்து’ - என்பார்களாம். விழுந்தடித்து எழுந்து சென்றால்... அது, வம்பு.

நுளம்பு இருக்குமோ என்று யோசித்தேன் இல்லை. குளிரும் அவ்வளவாக இருக்கவில்லை. சுருட்டுகள் புகைத்து, மணத்தன. ஏதேதோ ராக தாளங்களில் கடைகளில் இரவு முழுவதும் இடையிடையே கொத்து ரொட்டிகள் தயாராகியவண்ணமிருந்தன. தினைப்புனங்களில் பறவைகளை விரட்டுவதுபோல, அது ஒரு விழிப்பை ஏற்படுத்துவது போலவுமிருந்தது.

(அடுத்த வாரம்)

# வனஸ்பதி

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

துள்ளிக் குதித்த மனங்களெல்லாம் இப்போ மொத்தமாய் சுருங்கி நசுங்கிப் போய்விட்ட பின்னரும், திடீரென்று மாயமாய் தம்முன்னாலொரு ஒளிப் பிழம்பு தோன்றலாம் என்ற ரகசியக் கனவோடு மௌனமாய் அலைகிறது!

அவர்களுக்கான எல்லாவற்றையும் மொத்தமாய் குத்தகைக்கு எடுத்துக் கொண்டவர்கள் போல், எங்கிருந்தோ வந்தவர்கள, தாம் நினைத்த நேரம் வருகிறார்கள், பின் நினைத்த நேரம் போகிறார்கள். யாராலும் விரும்பப் படாத அவர்கள், அது பற்றியேதும் கவலையின்றி வளங்களையும் வனப்புகளையும் நினைத்த விதத்தில் சிதைத்துத் திரிகிறார்கள்.

மல்லிகை மணம் கமழும் வீடெங்கும் இப்போ வனஸ்பதி நெய்யின் அடர்நெடி! வீட்டு வராந்தாக்களெங்கும் சாவுகளைச் சுவைக்கும் வெறியோடு அலையும் தடித்த பூட்ஸ்களின் ஓசை!

இடிப்படு போல் ஒலிக்கும் இதயத் துடிப்பைத் தவிர வேறெதுவும் அவள் காதுகளிற்குக் கேட்பதில்லை. எந்தக் காரியத்தைச் செய்யும் போதும் யாருடையதோ கண்கள் அவர்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதான பதற்றம். எங்கிருந்தோ நீளும் துப்பாக்கி முனைகள் எந்நேரமும் அவ்வீட்டைக் குறிபார்த்தபடியே இருப்பது போன்ற அச்சம்!

அதே கிணறு, அதே கிணற்றடி, அதே வேலி, அதே மரங்கள்...ஆயினும் இப்போ கிணறும் குளியலும் தரும் அச்சம் வார்த்தைகளில் அடங்கமுடியாததாகியிருந்தது! கண்கள் அங்குமிங்கும் அலைபாய, மளமளவென்று துலாவை இழுத்து தண்ணீரை அள்ளி உடலில் ஊற்றுகிறாள். சவர்க்காரத்தை நுரைபொங்க உடலெங்கும் தேய்த்து விட்டு நிமிரும் போது வனஸ்பதி நெய்யின் கமறல் காற்றோடு கலந்து வந்து நாசியைத் தீண்டுகிறது. அவள் வெலவெலத்துப்போய் அப்படியே நிற்கிறாள்! குபீரென்று மண்டைக்குள் பாயும் குருதியோட்டத்தின் வேகம் தலையை கிறுகிறுக்க வைக்கிறது!.

கிணற்றடியைச் சுற்றி நின்றிருந்த அவர்களது முகங்களின் தடித்த மீசைகள் திகிலூட்டின. துப்பாக்கி களும் இரும்புக் காலணிகளும், வனஸ்பதி நெய்யின் மணமும் வீட்டு வளவை நிறைத்திருந்தது. அவர்களின் வெறித்த பார்வைகள் அவளுடலைத் துளைத்து சல்லடையாக்கிக் கொண்டிருந்தன.

மார்பு வரை சுற்றிக்கிடக்கும் ஈரப்பாவாடையும், சவர்க்கார நுரையும் உடலோடு ஒட்டிக் காய்ந்து உறையத் தொடங்கியது.

அவளால் ஒரு அடி கூட எடுத்து வைத்து நகர முடியவில்லை. செய்வதறியாது சிலைபோல் நிற்கிறாள். பாவாடைக்குள் கால் தொடைகள் வெடவெடென நடுங்கிக் கொண்டிருந்தன.

“ஜல்தி...ஜல்தி...” ஒரு படைவீரன் அதட்டுகிறான்.

“நான் எங்கே போவது? இது தான் என் வீடு” வார்த்தைகளை ஓசையின்றி மனசு இடித்துச் சொல்வது அவளுக்கு மட்டுமே கேட்கிறது.

ஒருவன் தன் பூட்ஸ் காலைத் தூக்கி கிணற்றடித் தரைமீது வைக்கிறான். தனது ஒரு கையை நீட்டி, சிறு பூச்சியைத் தட்டிவிடுவது போல் அவளை தட்டிவிட்டான். அவள் கிணற்றண்டை இருக்கும் சுவரோடு மோதி மறுபக்கமாய் போய் சரிகிறாள். அவர்கள் மிருக வேட்டைக்காரரைப் போல் சட்டென்று அருகில் பாய்ந்து வந்து நிற்கிறார்கள்.

“அம்மா...” என்று அலறியவாறே வேகமாக எழுந்து வீட்டிற்குள் ஓடுகிறாள் அவள். உள்ளே நின்றிருந்த அத்தனை பிசாசுகளும் திரும்பிப் பார்க்கின்றன. உள்ளேயும் வெளியேயும் ஆயிரம் பிசாசுகள் ஏற்கனவே நிலை கொண்டிருப்பது அப்போது தான் அவளுக்குத் தெரிகிறது.

அவர்களுள் உயரமாக இருந்த ஒருவனின் முரட்டுக் கைகள் அவளின் குட்டி தங்கையை தகாத முறையில் பற்றிப் பிடித்து வைத்திருந்தது. அவள் புலன்களற்றவள் போல் சுருண்டு நின்றிருந்தாள்.

நாய்க்குட்டி ‘லலித்’ வெருண்டு பதறிப்போய் நின்றிருந்தது. அதனால் குரைக்கக் கூட முடியவில்லை. அப்போதைய பாதுகாப்பு அமைச்சரின் பெயரை தன் நாய்க்கு வைத்ததில் உள்ளூர ஒளிந்திருக்கும் குரூரமகிழ்ச்சி அப்போதும் எள்ளளவும் குறையாமல் இருப்பது அவளுக்கே வேடிக்கையாக இருக்கிறது.

வெளியில் மேலும் இரு கனரக வாகனங்கள் வந்து நிற்க, நேசக்கரம் நீட்ட வந்ததாகக் கூறுபவர்கள் ‘திபுதிபு’வென்று கீழே குதிக்கிறார்கள். கைகளில் கத்திகளும் துப்பாக்கிகளும். வீட்டு வராந்தாவெங்கும் புழுதி படிந்த பூட்ஸ்களின் அடையாடங்கள் நிறைகின்றன. கதவுகளை உதைகிறார்கள். துப்பாக்கிகளின் அடிப்பாகம் கூரையில் தொங்கிக் கொண்டிருக்கும் மின்குமிழ்களை அடித்துச் சிதற வைக்கிறது. வர்ணப்பூக்கள் சொரியும் பூமரங்கள் அத்தனையும் சிதைக்கப்படுகின்றன. அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்கள் யாவும் தாறுமாறாக முற்றத்தை நோக்கி வீசப்படுகின்றன. முற்றத்தில் விழுந்து கிடக்கும் தென்னம் மட்டைகளை எடுத்து, தமது கைகள் போன போக்கில் வேகமாய் விசிறியடிக்கிறார்கள். புரியாத மொழியின் அதட்டல்களால் வீடு நிறைகிறது.

வீடெங்கும் அரியண்டம் தரும் பூச்சிகள் ஊர்ந்தபடியிருக்கின்றன!

குடும்பப் புகைப்பட அல்பங்களில் அவர்கள் தேடும் நபர் இல்லையென்றதும் ஆக்ரோஷமாய் கத்திக் கூச்சலிட்டு, அவற்றைக் கிழித்து வீசுகிறார்கள். புகைப்படத் துண்டுகள் பூட்ஸ் கால்களிற்குள் தாறுமாறாய் மிதிபட்டு மேலும் சிதைகிறது.

வீட்டு வாயிலில் பூத்துக் குலுங்கும் மல்லிகைப் பந்தலை ஒரு கொட்டனால் அடித்து உலுப்புகிறான் ஒருவன். அவர்கள் தேடும் நபர் அந்தப் பூக்களிற்குள் ஒளிந்திருப்பான் போலும்!

திடீரென்று சிறிய கத்திகளால் வேலிகளைப் பிய்த்துக்கொண்டு அடுத்த வீட்டிற்குள் வெறியோடு நுழைகிறார்கள் அவர்கள்.

அடுத்த வீட்டின் கிணற்றில் நீர் அள்ளிக் கொண்டிருந்த அவளின் மைத்துனரை துப்பாக்கியின் அடிமுனையால் முரட்டுத்தனமாய் தாக்குகிறான் ஒருவன். அவரது மூக்கிலிருந்து பீறிட்டுப் பாய்கிறது இரத்தம்!

இன்னுமொருவன் அடித்தவனை திரும்பி வரும்படி கத்தி அழைக்கிறான்.

வராந்தாக்களிலிருந்து பூட்ஸ்காலடிகள் அவசரமாய் நடந்து தேயும் ஓசை அந்த ஊர் முழுவதும் கேட்கிறது. தொடர்ந்து ஒவ்வொரு வாகனங்களாக புறப்பட்டுப் போகிறது. புழுதி வாசனை வீட்டு வாயிலில் வந்து படிகிறது. வாகனங்கள், அவர்கள் தேடும் நபரைத் தேடி வேறெங்கோ போகின்றன. புயல் ஒன்று ஓய, வீடு பேரமைதியில் மூழ்கிப் போகிறது!

இனியென்ன வாளிவாளியாகத் தண்ணீர் அள்ளி வந்து, அடித்து ஊற்றி வராந்தாக்களைத் தேய்த்துக் கழுவ வேண்டியது தான். சிராய்ப்புக் காயங்களும் வீக்கங்களும் ஒருபுறம் இருக்கட்டும். அவை தன்பாட்டில் வலிக்கட்டும். அவையெல்லாம் ஒரு வலியல்லவே! மனசு ஏதேதோ சொல்கிறது.

வராந்தாவின் ஓரம் தூணுக்கருகில் இப்பவும் அப்படியே இருக்கிறது அந்தத் தேநீர்க்குவளை! எல்லா வலிகளும் துயரங்களும் விலகியோடும் அதிசயத்தோடு அதனை அவள் குனிந்து எடுக்கிறாள். இன்னமும்சூடு ஆறாத சிலசொட்டுத் தேநீருடன் கண் சிமிட்டுகிறது குவளை! அவள் உதடுகள் புன்னகைக்கின்றன! அம்மாவும் தங்கையும் அவளைப் பார்க்கிறார்கள். எல்லோர் உதடுகளிலும் புன்னகை. அவை அவை மெல்ல மெல்ல விரிந்து உடலெல்லாம் பரவுகின்றன!

மைத்துனர் வடியும் குருதியை ஒரு துவாலையால் துடைத்தவாறே வேலியருகில் வந்து நின்று பார்க்கிறார். அவளது கையிலிருந்த தேநீர் குவளையில் அவர் பார்வை விழுந்து தரிக்கிறது. அடுத்த கணமே அவர் முகமெல்லாம் முளைத்துக் கிளம்பிய புன்னகை, உடல் முழுதும் பரவ, விழுந்து விழுந்து அவர் சிரிக்கத் தொடங்குகிறார்!

வீடு மெல்ல மெல்ல சிரிப்பால் நிறையத் தொடங்குகிறது!

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II
நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

6. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.
மா பலா வாழை என்பன முக்கனிகளாகும்


7. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
(i) ஆசிரியர் மாணவர்களுக்கு (அறிவுரை / அரிவுரை) கூறினார்.
(ii) கழிவு நீர் தேங்கி நின்றதால் (துர்னாற்றம் / துர்நாற்றம்) வீசியது.
(iii) களைகள் பயிர்களுக்கு (ஊரு / ஊறு) விளைவிக்கும்.

8. பின்வரும் வாக்கியத்தை எதிர்காலத்தில் எழுதுக.
சூரியன் உதயமாகிறது.
..........................................................

9. பின்வருவனவற்றின் இளமைப் பெயரை எழுதுக.
(i) பயிர் : .................... (ii) வேம்பு : ....................

10. 'நேர்பட ஒழுகு' என்னும் ஆத்திசூடியின் பொருளை எழுதுக.
..........................................................

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய **தமிழ்ச்** சொற்களை எழுதுக.
(i) Lightening : ....................
(ii) History : ....................

12. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை **ஆங்கில** எழுத்துக்களிலேயே எழுதுக.
(i) 
(ii) 
.................... ....................

13. தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.
(i) is / That / car / my : ....................
(ii) am / to / I / school / going : ....................


14. 'விதுஹல்பதி' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.
..........................................................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் **தமிழில்** எழுதுக.
சோறு சாப்பிடுங்கள் : ....................

16.

| | |
|---|---|
| 7 | 0 |
| 5 | 3 |

கட்டத்தில் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகச் சிறிய எண்ணை எழுதுக.
: ....................


17. 

A, B, C, D ஆகிய நான்கு கோல்கள் உள்ள எண்சட்டம் அருகே தரப்பட்டுள்ளது.
எந்தக் கோலில் உள்ள மணிகளினால் வகைகுறிக்கப்படும் பெறுமானம் 20 ஆகும்? : ....................

18. கோலத்தின் வெற்றிடங்களில் வரவேண்டிய இரண்டு எண்களையும் எழுதுக.
19, 22, .........., 28, ..........

19. தரப்பட்டுள்ள எண்களை **ஏறுவரிசையில்** எழுதுக.
2470, 4756, 4125, 2765 : ....................

20. விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட ஒரு தொகைத் தோடம்பழங்களில் $\frac{3}{4}$ எஞ்சியிருந்தது. எஞ்சியிருந்த தோடம்பழங்களின் எண்ணிக்கை 57 எனின், விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட தோடம்பழங்கள் எத்தனை?
: ....................

21. பின்வரும் உருவில் $\frac{1}{4}$ ஐ (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந்தீட்டுக.


22. ஒரு தென்னந் தோட்டத்தில் இருந்து மூன்று தடவைகளில் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கைகள் அருகே தரப்பட்டுள்ளன.

| தடவை | தேங்காய்களின் எண்ணிக்கை |
|---|---|
| முதலாம் | 2098 |
| இரண்டாம் | 3317 |
| மூன்றாம் | 2209 |

(i) முதலாம், இரண்டாம் தடவைகளில் பறிக்கப்பட்ட தேங்காய்களின் மொத்த எண்ணிக்கை யாது?
: ....................
(ii) மூன்றாம் தடவையைவிட இரண்டாம் தடவை எத்தனை தேங்காய்கள் கூடுதலாகப் பறிக்கப்பட்டன?
: ....................

# பாராளுமன்றம் அடுத்தவாரம் இரண்டு தினங்கள் கூடும்

## ஒக்ரோபர் 4ஆம் திகதி விசேட அமர்வு

கொழும்பு, செப். 19

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவா தத்தை எதிர்வரும் 22ஆம் திகதி நடத்து வதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் வெள்ளிக்கிழமை கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

தற்பொழுது நிலவும் கொவிட்-19 தொற்றுநோய் சூழலைக் கருத்தில் கொண்டு அடுத்த வாரத்தில் பாராளுமன்ற அமர்வுகளை செப்ரெம்பர் 21 மற்றும் 22ஆம் திகதிகளில் மாத்திரம் நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாராளுமன்றம் கூடவிருப்பதுடன் 11 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11 மணி முதல் மாலை 4.30மணி வரை மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல், துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் 5 கட்டளைகள், விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான 6 கட்டளைகள்,வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான 03ஒழுங்குவிதிகள், வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழான கட்டளை மற்றும் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து மாலை 4.30 மணி முதல் 4.50 மணிவரை சபை ஒத்திவைப்புநேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன் 4.50 மணி முதல் 5.30 மணிவரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் நடைபெறும்.

செப்ரெம்பர் 22ஆம் திகதி புதன்கிழமை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைத்(திருத்தச்) சட்டமூலம் (இரண்டாவது வாசிப்பு) மற்றும் தாவர விலங்கினப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. இதன் பின்னர் மாலை 4.30 மணி முதல் 4.50 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன் 4.50 மணி முதல் 5.30 மணிவரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் நடைபெறும்.

அதேநேரம், செப்ரெம்பர் 27ஆம் திகதி திங்கட்கிழமை நாள் முழுவதும் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்குவதற்கு இதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும், தற்பொழுது நிலவும் கொவிட் சூழல் காரணமாக குறித்த கேள்விகளுக்காக ஒக்ரோபர் 4ஆம் திகதி திங்கட் கிழமையை விசேட பாராளுமன்ற தினமாக ஒதுக்குவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

(இ)

# அமெரிக்காவுக்கான தூதுவராக நியமனம் பெறுகிறார் சமரசிங்க

## எம்.பி. பதவியை இராஜிநாமா செய்யத் தீர்மானம்

கொழும்பு, செப். 19

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க, அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராகப் பொறுப்பேற்கவுள்ளார். அதற்கமைய அவர் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்யத் தீர்மானித்துள்ளார்.

மேலும், மெக்ஸிகோ நாட்டுக்கும் இவரையே தூதுவராக நியமிப்பதற்கும் ஜனாதிபதி முடிவெடுத்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது அமெரிக்க விஜயத்தை ஆரம்பிப்பதற்காக நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் மஹிந்த சமரசிங்கவுடன் கலந்துரையாடினார் எனவும், அமெரிக்கத் தூதுவர் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதி கோரினார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவைக் கையாள அனுபவம் வாய்ந்த ஒருவர் தேவையென்ற அடிப்படையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆர்யசிங்கவின் ஓய்வு அறிவிப்பு வெளியான நிலையில், அந்தப் பதவியை ஏற்க மஹிந்த சமரசிங்கவே சரியான நபர் என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த ஆட்சியின்போதும், நல்லாட்சியின்போதும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை சார்பாக மஹிந்த சமரசிங்க செயற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் அமெரிக்காவைக் கையாள அவர் பொருத்தமானவர் என அரசு தீர்மானித்துள்ளது. (இ)

# சமரசிங்கவின் பதவி வெற்றிடத்தை நிரப்பப் போகின்றார் வர்ணகுமார!

கொழும்பு, செப். 19

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராகப் பொறுப்பேற்கவுள்ள பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க எம்.பி. பதவியை இராஜிநாமா செய்யவுள்ள நிலையில், குறித்த வெற்றிடத்துக்குக் களுத்துறை மாவட்டத்தில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட மஞ்சு லலித் வர்ணகுமார நியமிக்கப்படவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

களுத்துறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் சார்பில் போட்டியிட்ட 08 பேரில் 07 பேர் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகினர். இறுதியாக அதிக வாக்குகளைப் பெற்றவர் மஞ்சு லலித் வர்ணகுமார என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# போதைப்பொருட்களுடன் அறுவர் வசமாக சிக்கினர்

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சுற்றவளைப்புகளில் அறுவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது 123 லீற்றர் மதுபானமும் 630 லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மதுபானங்களைக் கொண்டுசெல்வதற்குப் பயன்படுத்திய ஒரு ஓட்டோவும், ஒரு செப்புத்தகடும் கைற்றப்பட்டுள்ளன. விசேடமாக மருதானை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பஞ்சிகாவத்தைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 3 கிராம் 620 மில்லிகிராம் போதைப்பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெரகம்பிட்டிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 02 கிராம் 400 மில்லி கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொஸ்லாந்தைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோமதியகல பிரதேசத்தில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டிருந்த கஞ்சா சேனையை முற்றுகையிட்ட பொலிஸார் 12 ஆயி ரம் கஞ்சா செடிகளை அழித்ததுடன் சந்தேகநபர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர்.




# மரண அறிவித்தல்

மலர்வு 15 - 06 - 1941



உதிர்வு 16 - 09 - 2021

## திருமதி தியாகராசா தங்கமலர்

யாழ்ப்பாணம் கட்டபிராயை பிறப்பிடமாகவும் உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்டு கனடாவில் வாழ்ந்து வந்த திருமதி தியாகராசா தங்கமலர் கடந்த 16.09.2021 வியாழக்கிழமை கனடாவில் காலமானார் .

அன்னார் காலஞ்சென்ற கந்தையா – நாகம்மா அவர்களின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற தியாகராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தியாகரூபன் மற்றும் தியாகசொரூபன், தியாகமலர், தியாகவேணி, தியாகவதனி ஆகியோரின் அன்புத்தாயாரும், மனோகரலிங்கம், காலஞ்சென்ற செழியன், மதிஅழகன், மஞ்சுளா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகன், தங்கராசா, செல்வநாயகம், இராசமலர், மற்றும் கனகலிங்கம், மனோகரன், தவமணி, சுரேஷ் பிரேமச்சந்திரன், சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று நண்பகல் 1 மணிமுதல் நண்பகல் 2.30 மணிவரை, Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ஒன்ராறியோவில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு :
சுரேஷ் பிறேமச்சந்திரன் - 077 736 2481
சர்வேஸ்வரன் - 077 718 4410
சொரூபன் - 001 416 400 7797

## அநுராதபுரம்...

கைதிகள் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள குழுவின் முன் சென்று இதை முறையிடவுள்ளோம்.”

இவ்வாறு கூறியிருக்கின்றார் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன். அநுராதபுரம் சிறைச்சாலைக்கு நேற்றுக் காலை சென்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 12 ஆம் திகதி அநுராதாபுர சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் அச்சுறுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதிகளை சந்திக்க அவர் அநுராதபுர சிறைச்சாலைக்கு சென்றுள்ளார். கம்பஹா பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன, அனுராதபுர பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார, ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரசார செயலாளர் முருகேசு பரணீதரன் ஆகியோரும் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்றுள்ளனர்.

சிறைச்சாலைக்கு சென்று கைதிகளுடன் பேசிய போது இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை மதுபோதையில் சிறைக்கு வந்ததாகவும், துப்பாக்கியை “லோட்” செய்து அச்சுறுத்தியதாகவும் கைதிகள் தெரிவித்ததாக மனோ கணேசன் குறிப்பிட்டார்.

சிறைக்குள் செல்வதற்கு மனோ கணேசன் குழுவினரை அதிகாரிகள் முதலில் அனுமதிக்கவில்லை. “நாங்கள் வந்தபோது தாமதம் ஏற்பட்டது. சுமார் 30 நிமிடம் தாமதம் ஏற்பட்டது. இது பாராளுமன்ற உறுப்பினர்களான எமது சிறப்புரிமையை மீறும் செயல். இங்கிருந்து சபாநாயகரை தொடர்பு கொண்டு முறையிட்ட பின்னர் தான் எமக்கு கதவு திறக்கப்பட்டது.

இன்று இங்கு கதவு திறக்கப்படாமலிருந்தால் நாங்கள் இங்கு உண்ணாவிரதம் இருந்தாவது அரசியல் கைதிகளை சந்தித்திருப்போம். ஏனெனில், உள்ளேயிருப்பது எமது மக்கள். உடன்பிறப்புக்கள். இரத்தத்தின் இரத்தங்கள். அவர்கள் உள்ளேயிருந்து துன்பப்படும் போது, கண்ணீர்விடும்போது, அதை துடைக்கும், துணையிருக்கும் கடமை எமக்குள்ளது. அதனால்தான் இங்கு வந்தோம்” எனவும் அவர் தெரிவித்தார்.

“உள்ளே சென்ற போது, கடந்த சில தினங்களாக ஊடகங்களில் வந்த செய்திகள் அனைத்தும் உண்மையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ரத்வத்தை என்ற அமைச்சர் மதுபோதையில், துப்பாக்கியுடன் வந்தார் என்பதை அங்குள்ள சிறைக்கைதிகள் எங்கள் மூவரிடமும் கூறினார்கள்.

மதுபோதையில் துப்பாக்கியை எடுத்து “லோட்” செய்ததாக ஒரு சிறைக்கைதி சொன்னார். தற்செயலாக அந்த துப்பாக்கி வெடித்திருந்தால், தாங்கள் விடுதலை புலிகள் சந்தேக நபர்கள் என்ற காரணத்தினால், தாங்கள் அவரை கொலை செய்ய முயற்சித்ததாக தங்களை சுட்டிருப்பார்கள். கலவரம் நடந்ததாக கதை கட்டியிருப்பார்கள் எனவும் கைதிகள் தெரிவித்தனர்” என மனோ கணேசன் சுட்டிக்காட்டினார்.

“அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும் இச்சம்பவம் நடைபெற்ற பின்னர் சிறைச்சாலைக்கு வந்திருந்தார். கைதிகள் அழைத்ததன் பேரில்தான் நாமல் அங்கு சென்றிருந்தார். கைதிகளை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் அங்கு உறுதியளித்திருக்கின்றார். இந்தக் கைதிகளை விரைவில் விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி, பிரதமர், மற்றும் நாமல் ராஜபக்ஷவை நான் கேட்டுக்கொள்கிறேன்” எனவும் மனோ கணேசன் தெரிவித்தார்.

## ஜி.எஸ்.பி. பிளஸ்...

உள்ளகத் தகவல்களின்படி அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இலங்கை குறித்து தீர்க்கமான முடிவு ஐரோப்பிய பாராளுமன்றத்தில் எடுக்கப்படவுள்ளது.

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை தொடர்ந்தும் வழங்குவதா இல்லையா? என்பது குறித்து ஆராய்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறப்பு குழு எதிர்வரும் 27 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளது.

ஒக்ரோபர் 4 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் ஐரோப்பிய ஒன்றியக் குழு ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தின் பலரையும் சந்திக்கவுள்ளது.

அதேபோன்று எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சிவில் சமூகத்தினரையும் சந்தித்துக் கலந்துரையாட தீர்மானித்துள்ளது.

இலங்கையில் தங்கியிருக்கும் காலப் பகுதியில் மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி உள்ளிட்ட பல்வேறு விடயங்களை அந்தக் குழுவினர் விரிவாக ஆராயவுள்ளனர்.

இந்த குழுவினரால் தயாரிக்கப்படும் அறிக்கை அடுத்த ஆண்டு முதலாம் காலாண்டில் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இதனடிப்படையிலேயே இலங்கைக்கு தற்போது கிடைக்கப்பெறும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை தொடர்வதா? இல்லையா? என்பது குறித்து தீர்மானிக்கப்படும்.

இவ்வாறானதொரு நிலையில் இலங்கைக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை இரத்து செய்வது தொடர்பாக மீளாய்வு செய்வதற்கான தீர்மானம் ஒன்று ஐரோப்பிய பாராளுமன்றத்தில் கடந்த ஜூன் மாதம் நிறைவேற்றப்பட்டது.

705 பேர் கொண்ட ஐரோப்பிய பாராளுமன்றத்தில் 628 பேர் இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். இதனடிப்படையில் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கையின் உறுதிப்பாடுகள் செயற்படுத்தப்படாமை, மனித உரிமைகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் மற்றும் அரசியல், சிவில் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டம் பிரயோகிக்கப்படல் போன்ற பிரதான விடயங்களின் அடிப்படையிலேயே ஐரோப்பிய ஒன்றியத்தில் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறப்புக் குழுவின் அறிக்கை இலங்கைக்கு பாதகமாகும் பட்சத்தில் நெருக்கடியை ஏற்படுத்தும்.

மறுபுறம் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல அறிக்கையில் இலங்கை குறித்து சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் , நீண்ட கால கண்காணிப்புகள் மற்றும் கொழும்புக்கு விஜயம் செய்யும் குழுவின் அறிக்கை என்பவற்றை கருத்தில் கொண்டு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை குறித்து தீர்மானம் எடுக்கவுள்ளது.

தற்போதைய நிலைப்பாட்டின் படி அடுத்த வருடம் மே மாதம் வரை ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையை இலங்கைக்கு வழங்கவும் அதற்கு பின்னர் அந்த சலுகையை இடைநிறுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. ஆனால் உத்தியோகபூர்வ நிலைப்பாடு ஐரோப்பிய குழுவின் வருகையின் பின்னர் வெளிப்படும் என கூறப்படுகின்றது.

## பிரபல தபேலாக்...

வைத்தியசாலைக்குச் சென்றபோதே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் போராட்ட காலத்தில் ஒலிப்பதிவாகிய கனிசமான பாடல்கள், பெருமளவான பக்திப்பாடல்களுடன் ஆயிரக்கணக்கான அரங்க நிகழ்வுகளிலும் அவர் அணி இசை செய்துள்ளார்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகளின் தலைவரால் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, நூற்றுக்கணக்கான மாணவர்களையும் மிருதங்க, தபேலாக் கலைஞர்களாகவும் உருவாக்கிய பெருமைக்குரியவராகவும் அவர் விளங்கியுள்ளார்.

அவருடைய இழப்பு ஈழத்தின் இசைத்துறைக்கு பேரிழப்பு என்கின்றனர் சக கலைஞர்கள்.

## மதுபானச்சாலைகள்...

மதுவரி திணைக்கள ஆணையாளருக்கு தெரியாது என்ற கருத்தை ஏற்க முடியாது என்று தெரிவித்த அமைச்சர், இது தொடர்பில் முழுமையான விசாரணையொன்றை மேற்கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

அத்தோடு, மதுபானச்சாலைகள் திறக்கப்பட்டமை தொடர்பில் தான் ஊடகங்கள் மூலமே அறிந்துகொண்டார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ‘பார்’ கொத்தணியால் நாடு மயானமாகும் அபாயநிலை!

## ராதாகிருஷ்ணன் எச்சரிக்கை

கொழும்பு, செப். 19

மதுபானச்சாலைகளை திறந்ததன் விளைவு இன்னும் சில நாள்களில் ‘பார்’ கொத்தணி உருவாக வாய்ப்பு ஏற்படும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்-

நாட்டை கொரோனாவிலிருந்து மீட்டெடுத்து வழமைபோல கட்டியெழுப்ப ஒவ்வொருவரும் தம்மை அர்ப்பணித்து வீட்டுக்குள் முடங்கியுள்ள இந்நேரத்தில் ஒட்டுமொத்த நாட்டையும் சுடுகாடாக மாற்றும் செயலில் அரசாங்கம் இறங்கியுள்ளது. அதனாலேயே மதுபானச்சாலைகளை திறக்கவிட்டு இப்படி நாட்டு மக்களை கொரோனா எனும் அரக்கனிடத்தில் பலி கொடுக்க அரசாங்கம் தயாராகி விட்டது.

நாட்டை ஒரு மாதத்துக்கு மேலாக மூட அரசாங்கம் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது எதிர்வரும் 21ஆம் திகதி நாட்டில் ஊரடங்கு தளர்த்தப்படும் என கூறி அடுத்த மாதம் முதலாம் திகதிவரை ஊரடங்கை நீடித்தது. இருப்பினும் திடீரென மதுபானச்சாலைகளை திறந்து மதுபானப் போத்தல்களை விற்பனை செய்துள்ளமை பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு நகரங்களிலும் எவ்வித சுகாதார நடைமுறைகளையும் பின்பற்றாமல் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று மதுபானப் போத்தல்களை பெற்றுள்ளனர். இதன் தாக்கம் இன்னும் சில நாள்களில் தெரியக்கூடும்.

அத்தியாவசியப் பொருள்களை வாங்க சென்றவர்களை அடித்துத் துரத்தும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இன்று மதுபானப் போத்தல்களை வாங்கும் போது வேடிக்கை பார்த்து கொண்டிருக்கின்றனர்-என்றார்.

## மதுபானச்சாலை...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது பேசிய சுகாதார அமைச்சின் செய்தித் தொடர்பாளர், சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தவறை மீண்டும் செய்யக்கூடாது என கேட்டுக்கொண்டார்.

மற்ற அனைத்து கடைகளையும் மூட வேண்டிய கட்டத்தில் மதுக்கடைகளை மீண்டும் திறக்க அனுமதி வழங்க எந்த அடிப்படையும் இல்லை என்று அவர் கூறினார்.

சுகாதார அமைச்சு அத்தகைய நடவடிக்கைக்கு ஒப்புக்கொள்ள முடியாது. எனவே இந்த விவகாரம் குறித்து உரிய அதிகாரிகள் உரிய முடிவுகளை எடுக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

## வவுனியா...

களுக்கு முன்னர் கொரோனா தொற்றால் மரணமடைந்த நிலையில், நேற்றும் ஒருவர் மரணமடைந்தார்.

அத்துடன், குறித்த காப்பகத்தில் இருப்பவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் 50 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## ஐ.நா. கூட்டத்...

ராஜபக்ஷ நேற்று அதிகாலை, நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், சர்வதேச மாநாடொன்றில் பங்கேற்பதற்காக நாட்டை விட்டுப் புறப்பட்டுச் செல்லும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும் என்பதோடு, ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தொடரில் அரச தலைவராக உரையாற்றவுள்ள முதல் சந்தர்ப்பமும் இதுவாகும்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தலைவமையில், நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள இம்முறை கூட்டத்தொடர், “கொவிட் 19 வைரஸ் தொற்றுப்பரவலில் இருந்து மீள்வதற்கான நம்பிக்கையின் மூலம் நெகிழ்ச்சியை வளர்த்தல், நிலைத்தன்மையை மீளக் கட்டியெழுப்புதல், பூமியின் தேவைகளுக்கு பதிலளித்தல், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மறுமலர்ச்சி” என்ற தொனிப்பொருளிலேயே இடம்பெறவுள்ளது.

ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தொடரில், 22ஆம் திகதியன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரையாற்றவுள்ளார் என்பதுடன், இதற்கிடையே, கூட்டத் தொடரில் பங்கேற்றுள்ள அரச தலைவர்களுடன், இரு தரப்புக் கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவுள்ளார். வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொழம்பகே ஆகியோரும், ஜனாதிபதியுடன் இந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஊரடங்கு...

ருந்தது. இதனையடுத்து குறித்த ஆலயத்துக்கு நேற்று முன்தினம் சென்ற சுகாதாரப் பிரிவினர் அங்கு நின்றிருந்தவர்களுக்கு அன்ரி ஜென் பரிசோதனை முன்னெடுத்தனர்.

இதன்போது ஆலயக் குருக்கள் உட்பட6 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து குறித்த நபர்களுடன் தொடர்புகளை பேணியவர்களுக்கு நேற்று முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் மேலும் 5 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

தொற்று உறுதியானவர்கள் அவர்களது குடும்பங்களுடன் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

## கொரோனா...

புத்தாண்டு கொத்தணியின் பின்னர் இலங்கையில் மரண எண்ணிக்கை அதிகரித்திருந்தது. ஒரு கட்டத்தில் நாளாந்தம் 200 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். ஊரடங்கின் பின்னர் அந்த எண்ணிக்கை சிறிதுகாலம் 150 ஆக குறைந்திருந்தது.

இந்நிலையிலேயே நீண்ட நாட்களுக்கு பின்னர் 100 இற்கும் குறைவான மரணங்கள் நேற்றுமுன்தினம் பதிவாகியுள்ளன.

இதேவேளை, நாட்டில் நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட 1,983 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இறுதியாக கடந்த ஜூலை 28ஆம் திகதி நாளொன்றில் 2 ஆயிரத்துக்கும் குறைவான தொற்றாளர்கள் எண்ணிக்கை பதிவாகியிருந்தது. குறித்த நாளில் 940 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், 51 நாட்களின் பின்னர் நாளொன்றில் மீண்டும் 2 ஆயிரத்துக்கும் குறைவான தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 2 ஆயிரத்து 755 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,260 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 31 ஆயிரத்து 36 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

ஈழநாடு
Eelanadu




# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை நிறுத்தப்பட்டால் அரசே பொறுப்பு

## எதிரணி எம்.பி. அலவத்துவல சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 19

"ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை அன்று இலங்கை இழந்த போது, பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர். அவ்வாறான நிலைமை மீண்டும் வந்தால், அரசு பொறுப்பேற்க வேண்டும்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டின் பொருளாதாரம் சரிந்து வருகின்றது. அந்நியச் செலாவணி பற்றாக்குறையால் பரிவர்த்தனைகளை முன்னெடுக்க முடியாத நிலை தொடர்கின்றது.

அரசு வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கொண்டுவருவதாகக் கூறுகின்றது. எனினும், பொருளாதாரம் தொடர்ந்து பலவீனமடைந்து வருகின்றது.



இலங்கை முன்னேற வேண்டுமானால், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்புணர்வுடன் பதிலளிக்க வேண்டும்" - என்றார். (இ)

# 150 மதுப் போத்தல்களுடன் கைதான நபர் பொலிஸ் பிணையில் விடுவிப்பு

நுவரெலியா, செப். 19

நுவரெலியா மாவட்டம், பொகவந்தலாவை கெம்பியன் பிரிவில், 150 மதுபானப் போத்தல்களுடன் கைதான நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

175 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய 150 மதுபானப் போத்தல்களுடன் ஒருவரைப் பொகவந்தலாவைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

சந்தேகநபர், தோட்டப் பகுதிகளில் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக மதுபானப் போத்தல்களைக் கொண்டு சென்றுள்ளமை தெரியவந்தது.

சந்தேகநபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் உயர் டிப்ளோமா ஊடகக் கற்கை நெறி

யாழ்ப்பாணம், செப். 19

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கைகள் துறை வழங்கும் ஊடகக் கற்கைகளில் உயர் டிப்ளோமா கற்கை நெறி யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவினால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி சி. ரகுராம் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலைப்பீடப் பீடாதிபதி கலாநிதி க. சுதாகர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

நிகழ்நிலைத் தொழில் நுட்பம் வழியாக நடைபெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஊடகக் கற்கைகள் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

பல்கலைக்கழகம் சமூகத்துக்கு ஆற்றவேண்டிய கடைமைகளில் ஒன்றாக, துறைசார் ஆர்வமிருந்தும் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகத் தவறிய மாணவர்களுக்கும், தொழில்சார் ஊடகவியலாளர்களாகப் பணியாற்றுவோருக்கும் பல்கலைக்கழகக் கல்வி மூலம் உரிய தகைமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக இந்த ஊடகக் கற்கைகளில் உயர் டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பிக்கப்படுகின்றது எனத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா ஆரம்ப நிகழ்வில் தெரிவித்தார்.

இரண்டு வருட பகுதிநேரக் கற்கையாக ஆரம்பிக்கப்படும் உயர் டிப்ளோமா கற்கைநெறி துறைசார் விரிவுரையாளர்கள், சிரேஷ்ட ஊடகவியலாளர்கள், ஊடக ஆய்வாளர்கள் ஆகியோரின் கல்விசார் பங்களிப்புடன் சுயநிதிக் கற்கையாக முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகம் வெளிநாட்டு நிதியுதவியுடன் ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் வழியாக ஊடகவியலாளர்களுக்காகச் சில வருடங்களுக்கு முன்னர் மேற்கொண்ட இதழியல் டிப்ளோமா கற்கைநெறியைத் தொடர்ந்து, பல்கலைக்கழகத் துறைசார் முன்னெடுப்புடன் இந்த ஊடகக் கற்கைகளில் உயர் டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (இ)

## மரண அறிவித்தல்

மலர்வு 27 - 08 - 1964



உதிர்வு 12 - 09 - 2021

### பொன்னுத்துரை யோகேஸ்வரன்
### (மதனா, குட்டி, சின்னராசு)

பருத்தித்துறை வீதி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், கரம்பைக்குறிச்சி வரணியை வதிவிடமாகவும், கனடா Toronto ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை யோகேஸ்வரன் அவர்கள் கடந்த (12.09.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு இளைய மகனும், இரத்தினம் - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், மதிவதனி (வதனி) அவர்களின் அன்புக் கணவரும், ஜனனி (கனடா), சதீசன் (பிரான்ஸ்), ஜனார்த்தனி (ஐக்கிய அமெரிக்கா), பஜீதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரதீப் (கனடா), உஷாநந்தினி (பிரான்ஸ்), விஜீபன்(ஐக்கிய அமெரிக்கா), பானுபிரியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,யோகராசா (இலங்கை), காலஞ்சென்ற தங்கராணி, பத்மாதேவி (இலங்கை), யோகானந்தம் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜேஸ்வரி (இலங்கை), இராஜரெட்ணம்(இலங்கை), திரவியநாயகம் (இலங்கை), ரஞ்சினி(இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராஜேஸ்வரி (இலங்கை), இராசவினாயகம் (இலங்கை), இராஜமனோகரி(இலங்கை), கனகேஸ்வரி (லண்டன்), மதிவாணன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அவீனா, அபினாவ், ஜஸ்மிலா, ஜமிலா, சந்தோஷ்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**சதீசன் - மகன்**
Mobile : +33624492253

தகவல்:
**குடும்பத்தினர்.**







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX



11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-ஜீன்ஸ்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-திறமையாளர்களுக்கான களம்
**இரவு**
7.00 மணி : SPOTLIGHT - கேவசன் சயந்தன் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி :செல்லாடுகளம்
10.00 மணி:-நேர்கொண்ட பார்வை-குருபரன்



**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு